

ஏமாற்று, பம்மாத்து இரண்டும் இலங்கைக்கு கைவந்த கலை

பக்கம் 08

# உதயன்

சுடர்: 29 கதிர்: 306 வள்ளுவர் ஆண்டு: 2045 புரட்டாதி 12, ஞாயிறு 28.09.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

32 பக்கங்கள்

யாழ். - 30/=
வன்னி - 20/=

தெளிவான வானிலை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 34 km/h
ஈரப்பதம்: 48%
காற்றமுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04

28 SEP 2014


# ஜெயலலிதா குற்றவாளி முதல்வர் பதவியும் பறிப்பு

## 100 கோடி ரூபா அபராதம்;சொத்துக்குவிப்பு வழக்கில் பரபரப்புத் தீர்ப்பு

சென்னை, செப்ரெம்பர் 28
சொத்துக்குவிப்பு வழக்கில், தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு 4 ஆண்டு சிறைத் தண்டனை விதித்து, பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் நேற்று பரபரப்புத் தீர்ப்பு வழங்கியது. மேலும், இந்த வழக்கில் சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் மீதான குற்றச் சாட்டுகளும் நிரூபிக்கப்பட்டன என நீதிமன்றம் அறிவித்தது டன் நால்வருக்கும் ரூபா 100 கோடி அபராதமும் விதித்துள்ளது. இந்தத் தீர்ப்பால் தமிழகத்தில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

18 ஆண்டுகளாக நடந்து வந்த சொத்துக் குவிப்பு வழக்கில் தமிழக முதல்வர் ஜெயலலிதா மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு, குற்றவாளி என பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதுடன் ஜெயலலிதாவுக்கான தண்டனை விவரத்தை நீதிபதி வெளியிட்டார்.

பதவியை இழந்தார் ஜெ
இதுதொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள பெங்களூர் சிறப்பு

❖ 25ஆம் பக்கம் பார்க்க



## தமிழகத்தில் வெடித்தது வன்முறை கருணாநிதியின் வீட்டுக்குக் கல்வீச்சு

சென்னை, செப். 28
சொத்துக் குவிப்பு வழக்கில் தமிழக முதல்வர் ஜெயலலிதா குற்றவாளி என்று பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்ததையடுத்து, தமிழகத்தில் அ.தி. மு.கவினர் ஆங்காங்கே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அதேவேளை, தமிழகத்தின் பல பகுதிகளில் வன்முறை வெடித்துள்ளதால் பதற்றம் ஏற்பட்டுள்ளது. ஜெயலலிதா



❖ 25ஆம் பக்கம் பார்க்க

## அடுத்த முதல்வர் யார்?

சென்னை, செப்.28
சொத்துக்குவிப்பு வழக்கில் ஜெயலலிதாவுக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளதை அடுத்து ஜெயலலிதா பதவி இழந்துள்ளதால் புதிய முதல்வராக யாரை அ.தி.மு.க.தேர்வு செய்ய

❖ 25ஆம் பக்கம் பார்க்க

## ஜெயலலிதாவின் சிறை ஈழத்தமிழருக்கு பாதிப்பு

யாழ்ப்பாணம், செப். 28
ஈழத் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்தவர் தமிழக முதல்வர் ஜெயலலிதா. அவர் கைது செய்யப்பட்டிருப்பது இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை மிகப்பெரிய பின்னடைவுதான். அத்துடன் இலங்கை அரசின் பிரதிநிதிகளைத் தமிழகத்தில் காலடி எடுத்து வைக்கவிடாமல் இதுவரை காலமும் பார்த்துக் கொண்டிருந்தவரும் அவர்தான்.
இதனால் இவரது கைது, இலங்கை அரசினதும் – இந்திய

❖ 25ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பில் கடத்தப்பட்டவர் குறித்து நேற்று முதல் சாட்சியம்

யாழ்ப்பாணம், செப். 28
காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் அமர்வில் முதல்

❖ 25ஆம் பக்கம் பார்க்க

## போர் முடிந்தும்கூட வடக்கு-கிழக்கை அந்நியப் பகுதியாகப் பார்க்கிறது அரசு

### முதலமைச்சர் விக்னேஸ்வரன் சாடல்

யாழ்ப்பாணம், செப். 28
போர் முடிந்த பின்னரும் கூட வடக்கு-கிழக்கு மாகாணங்களை அந்நியப் பிரதேசங்களாகவும், அவை தம்மால் கண்காணிப்புக்கு இலக்காக்கப்பட வேண்டியவை எனவும் கருதி எமது சுதந்திரங்களில் அரசு பல இடர்பாடுகளை ஏற்படுத்தி வருகின்றது. மத்தியில் இருந்து மாகாணத்தைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் 13 ஆவது திருத்தம் வழங்கியிருக்கும் சொற்ப நலன்களையும் எமக்கு வழங்காமலே அரச நிர்வாக இயந்திரம் இயங்கி வருகின்றது என்று வடக்கு மாகாண முதலமைச்

❖ 25ஆம் பக்கம் பார்க்க

## வீதியில் மட்டுமே வடக்கின் வசந்தம்

### வீடுகளில் எதுவுமே இல்லை என்கிறார் அமைச்சர் ஐங்கரநேசன்



யாழ்ப்பாணம்.செப் 28
வடக்கைப் பொறுத்த வரை வடக்கின் வசந்தம் வீதியில் மட்டுமே. ஆனால் சிறு கிராமங்களில் எந்த அபிவிருத்திகளும் ஏற்படுத்தப்படவில்லை என்று வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கர

❖ 25ஆம் பக்கம் பார்க்க

## ‘தாயகத் தலைமகன்’ பட்டம் சம்பந்தனுக்கு



மட்டக்களப்பு, செப். 28
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவரும் தற்போதைய அரசியல் குழுத் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன், ‘தாயகத் தலைமகன்’ என்னும் பட்டம் சூட்

❖ 06ஆம் பக்கம் பார்க்க

## மகள் உயிருடன் இல்லையெனில் சொல்லுங்கள் கிரியை செய்கிறேன்

### ஆணைக்குழு முன் அழுதார் தந்தை

யாழ்ப்பாணம், செப். 28
ஆணைக்குழு ஆணைக்குழு என்று எங்களைச் சாகடிக்காதீர்கள். என் இறுதி ஆசை, நான் சாவதற்குள் எனது மகளை எப்படியாவது பார்த்து விட வேண்டும். ஒன்றில் என் மகள் இருந்தால் அவளைக் காட்டுங்

❖ 06ஆம் பக்கம் பார்க்க

## மகனின் இறப்புச் சான்றிதழுடன் என்ர வீட்டுப் பக்கம் வரக்கூடாது

### எச்சரிக்கை விடுத்தார் தாயார்

யாழ்ப்பாணம், செப். 28
தப்பித் தவறி இறப்புச் சான்றிதழுடன் என்ர வீட்டுப் பக்கம் வர வேண்டாம். வந்தால் அதைக் கிழித்து உங்கட முகத்திலை வீசி எறிவன்’ என்று, மகனைக் காணாது தவிக்கும் தாயார் ஒருவர் ஆணைக்குழு முன்பாக

❖ 06ஆம் பக்கம் பார்க்க

## ரிப்பர் – மோட்டார் சைக்கிள் விபத்தில் இளம் மருத்துவர் தலை நசிந்து சாவு

### கே.கே.எஸ் வீதியில் சம்பவம்



யாழ்ப்பாணம், செப்.28
மோட்டார் சைக்கிள் - ரிப்பர் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஆயுள்வேத மருத்துவர் சம்பவ இடத்திலேயே தலை நசிந்து உயிரிழந்தார். ரிப்பர் சாரதி ரிப்பரை அங்கு நிறுத்தி விட்டுத் தப்பி

❖ 06ஆம் பக்கம் பார்க்க







## குழம்பிப் போயுள்ளார் மஹிந்த

### மட்டக்களப்பில் சம்பந்தன் தெரிவிப்பு

மட்டக்களப்பு, செப். 28
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இப்போது குழம்பிப் போயிருக்கிறார் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் மாவை. சேனாதிராசா, செயலாளர் கி.துரைராஜசிங்கம் ஆகியோரை வரவேற்கும் நிகழ்வு

❖ 06ஆம் பக்கம் பார்க்க

# உறவுகளை காண்பதற்கு அலைக்கழிகின்றோம்...



பரீட்சைக்கு சென்று கடல் மார்க்கமாக வீடு திரும்பும் போது மகனைக் காணவில்லை. தாய் சாட்சியம்




கணவனை பறிகொடுத்து கண்ணீருடன் சாட்சிய மளிக்கையில்...











காத்திருந்து சாட்சியமளித்த எம்மவர்.

## குற்றங்களும் கைதுகளும்

துன்னாலை வடக்கு

### கூரை பிரித்து வீட்டில் திருட்டு

வடமராட்சி,செப்.28

அதிகாலை வேளை ஓடு பிரித்து உள்ளிறங்கிய திருடர்கள் வீட்டிலிருந்த ஒரு தொகைப் பணத்தையும், ஒரு சோடி காற் சலங்கையையும் திருடிச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை அதிகாலை 2 மணியளவில் துன்னாலை வடக்கு சோழியாவத்தைப் பகுதியில் நடந்துள்ளது.

வீட்டின் சமயலறை ஓட்டைப் பிரித்து உள்ளிறங்கிய திருடர்கள் பணத்தையும் காற் சலங்கையையும் திருடியிருந்த நிலையில் வீட்டார் விழித்துக் கொண்டதையடுத்து திருடிய பொருள்களுடன் தப்பியோடியுள்ளனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாகப் பருத்தித்துறைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (த—173)

சுன்னாகம்

### கடை உடைத்து பணம் திருட்டு

வலி.வடக்கு, செப் 28

சன நடமாட்டம் மிக்க சுன்னாகம் நகரப் பகுதியில் உள்ள பிரேதப் பெட்டி விற்கும் கடையை உடைத்து சுமார் ஒன்றரை லட்சம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளதாகச் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறை யிடப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை வீதியில் சுன்னாகம் வர்த்தக வங்கிக்கு முன்னால் உள்ள பிரேதப் பெட்டி விற்பனை செய்யும் கடை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அதிகாலை உடைக்கப்பட்டு இந்தத் துணிகரத் திருட்டு இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப் பகுதியில் இரவுக் காவ லாளிகள் கடமையில் ஈடுபடுவதுடன் சுன்னாகம் பொலிஸார், இராணுவத் தினரின் ரோந்து நடவடிக்கைகளும் இரவில் இடம்பெறும் நிலையில் இந்தத் திருட்டு இடம் பெற்றுள்ளமை வர்த்தகர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (த—86)

மல்லாகம்

### சனசமூக நிலையம் அடித்து உடைப்பு

வலி.வடக்கு, செப் 28

மல்லாகம் கோட்டைக்காடு சைவ வாலிபர் சங்கச் சனசமூக நிலையம் இனம் தெரியாதவர்களினால் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இரவு 10.00 மணியளவில் அடித்து உடைக்கப்பட்டுள்ளது. இதனால் குறிப்பிட்ட சனசமூக நிலையத்தின் முன் கதவுகள், யன்னல்கள் சேதமாகின. சுமார் 75 ஆயிரம் ரூபாவுக்கு மேல் நட்டம் ஏற்பட்டுள்ள தாகச் சனசமூக நிலைய நிர்வாகத்தி னர் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் குறித்துச் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப் பட்டுள்ளது.

குறித்த சனசமூக நிலையத்தில் உள்ள அங்கத்தவர்கள் இரண்டாகப் பிரிந்து கடந்த மாதம் சனசமூக நிலையத்துக்கு ஒரு பகுதியினர் பூட்டுப் போட்டு பூட் டிய நிலையில் சுன்னாகம் பொலி ஸாரும், வலி தெற்குப் பிரதேச சபைத் தலைவர் தியாகராசா பிரகாஸும் தலையிட்டுச் சனசமூக நிலையத்தின் பூட்டைத் திறந்து இயங்கவிட்டனர்.

இந் நிலையில் நேற்று முன்தினம் சனசமூக நிலையம் அடித்து உடைக்கப் பட்டுள்ளது.(த—86)

பாரதிபுரம்

### மனைவியையும் குழந்தையையும் தாக்கியவர் கைது

கிளிநொச்சி, செப் 28

மதுபோதையில் மனைவியையும் குழந்தையையும் தாக்கிக் காயப்படுத்திய நபரொருவரை எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கடந்த 23 ஆம் திகதி பாரதிபுரத்தில் தனது மனைவியையும் குழந்தையையும் தாக்கி காயப்படுத்திய நிலையில் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டவர் நேற்று நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது.(த—18)

கண்டாவளை

### பெண்ணைத் தாக்கியவர் விளக்கமறியலில்

கிளிநொச்சி, செப் 28

வாளினாலும் பொல்லினாலும் பெண்ணொருவரைத் தாக்கி காயப்படுத்திய நபரொருவரை எதிர்வரும் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 24 ஆம் திகதி கண்டாவளை, புன்னைநீராவி குமாரசாமிபுரத்தில் பெண்ணொருவரை வாளினாலும் பொல்லினாலும் தாக்கிய நிலையில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட மேற்படி நபர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது விளக்கமறியலுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.(த—18)



கைதடி

### கடைக்காரரைத் தாக்கிய இருவர் விளக்கமறியலில்

தென்மராட்சி,செப்.28

கைதடிப் பகுதியில் உள்ள கம்மாலைக்குள் அத்துமீறி நுழைந்து அதன் உரிமையாளரைத் தாக்கிய இருவரை விளக்கமறியலில் வைக்குமாறு நேற்று முன் தினம் சாவகச்சேரி நீதிமன்றில் உத்தரவிடப்பட்டது.

இவர்களால் தாக்கப்பட்ட கம்மாலை உரிமையாளர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இருவரைக் கைது செய்த சாவகச்சேரிப் பொலிஸார் நேற்று முன் தினம் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான் இருவரையும் எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை, நாவற்குழி 300 வீட்டுத்திட்டப் பகுதியில் மதுபோதையில் மனைவி, பிள்ளைகளைத் தாக்கிய நபரையும் விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார்.(த—9)

# ஆளணி வசதி இல்லை
# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில்
## மாணவர்கள் பயிற்சி பெறுவதில் சிக்கல் நிலை

அச்சுவேலி, செப்.28
கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் 2014 -2015 கல்வியாண்டுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள ஆசிரிய மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்குப் பொருத்தமான விரிவுரையாளர் மற்றும் ஆளணி வசதிகள் செய்யப்படாமையால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகக் கவலை வெளியிடப்பட்டுள்ளது. கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இதுவரை காலம் அனுமதிக்கப்படாத தொகையாக 2014-2015 கல்வியாண்டுக்கு 659 பேர் பயிற்சிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
இவர்களுக்கு பொருத்தமான முறையில் பயிற்சிச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு 35 இற்கும் குறையாத விரிவுரையாளர்கள் தேவை. ஆனால் தற்பொழுது கடமையில் இருப்பது அதிபருடன் சேர்த்து 20 பேர் மட்டுமே. அதிலும் 6 பேர் மட்டுமே நிரந்தரமானவர்கள். 14 பேர் பாடசாலை ஆசிரியர்களில் இருந்து இணைப்பு நிலையில் விடுவிக்கப்பட்டவர்கள்

> “ கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இதுவரை காலம் அனுமதிக்கப்படாத தொகையாக 2014-2015 கல்வியாண்டுக்கு 659 பேர் பயிற்சிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் ஆங்கிலம், ஆரம்பக் கல்வி, தமிழ், அழகியல், மனைப் பொருளியல், வர்த்தகம் உள்ளிட்ட 14 பாட நெறிகளில் பயிற்சிக்கு ஆசிரிய மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்குரிய பயிற்சிக் காலம் இரண்டு வருடங்களாகும். கடந்த ஜூன் மாதம் பயிற்சி ஆரம்பிக்கப்பட்ட போதிலும் இதுவரை பொருத்தமான விரிவுரையாளர் ஆளணி ஏற்பாடு செய்யப்படவில்லை எனக் கூறப்படுகின்றது.
இலங்கையில் ஏனைய தமிழ் மொழி மூல ஆசிரியர் கலாசாலைகளில் 2014-2015 கல்வியாண்டுக்கு மிகக் குறைந்த அளவில் 25 பேர் மட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளபோதிலும் கோப்பாயில் அனுமதிக்கப்பட்ட 659 பேருக்கு உரிய வசதிகள் இதுவரை செய்யப்படாமல் இருப்பது தொடர்பாகப் பயிற்சி ஆசிரியர்களும் மற்றும் கல்விச் சமூகத்தினரும் விசனம் தெரிவிக்கின்றனர். (த-11)



## கஞ்சா வைத்திருந்தவருக்கு யாழ்.மேல்நீதிமன்று பிணை

யாழ்ப்பாணம், செப்.28
கஞ்சா வைத்திருந்து விற்பனை செய்த குற்றச்சாட்டில் 5 மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தவர் யாழ்.மேல் நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.
யாழ். மேல் நீதிமன்றில் நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் இந்த வழக்குத் தொடர்பான பிணை விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு நேற்று முன்தினம் பிணை அனுமதி வழங்கப்பட்டது.
பருத்தித்துறை இன்பருட்டியைச் சேர்ந்த வி. சிவசங்கரன், ந. மகேந்திரராஜா ஆகியோர் 300 மில்லி கிராம் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் கடந்த ஏப்ரல் முதலாம் திகதி கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டனர்.
அவர்களில் சிவசங்கரன் சார்பாக யாழ்.மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டது. அதனைப் பரிசீலித்த நீதிமன்று பிணை அனுமதி வழங்கியது.
இதன்படி அவர்கள் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான ரொக்கப் பிணையிலும் தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணையிலும் விடுவிக்கப்பட்டதோடு ஒவ்வொருநாளும் பருத்தித்துறை நீதிமன்றில் முற்பகல் 9 மணிக்கும் பிற்பகல் 4 மணிக்கும் இடையில் கையெழுத்திட வேண்டும் என்றும் மன்று நிபந்தனை விதித்தது. (த-4-ரி)

## வாசிப்பு மாதத்தையொட்டி பல்வேறு செயற்றிட்டங்கள்

தென்மராட்சி, செப்.28
தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி உள்ளூராட்சிச் சபைகளின் பொது நூலகங்கள் பல்வேறு செயற்றிட்டங்களை ஒக்ரோபர் முதலாம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரை மேற்கொள்ளவுள்ளன.
இந்தக் காலப்பகுதியில் சிறுவர்கள், முதியோர்கள் கௌரவிப்பு, மாணவர்களின் ஆக்கப் பொருள் கண்காட்சி முப்பரிமாண நூலகச் செயற்பாடாக பொம்மைகளின் காட்சிப்படுத்தல், சிரமதானம் மூலம் நூலகத்தைப் புதுப்பித்தல் வாசிப்பு மாத விழிப்புணர்வை ஏற்படுத்தும் பதாகைகள் காட்சிப்படுத்தல், நூலகம் திறந்திருக்கும் நேரத்தை அதிகரித்தல், தேசிய வாசிப்பு மாத இலட்சினை வழங்கல், நடமாடும் நூலக சேவையும் புத்தகக் கண்காட்சியும் நடத்தல், சிறார்களிடையே கதை சொல்லும் பொருளும் பயன் மிக்க படக் காட்சியும், விசேட போட்டிகளை நடத்துதல், மாணவர்களுக்குப் பயிற்சி வகுப்புக்களை நடத்துதல், துண்டுப் பிரசுர விநியோகம், வீதி நாடகங்கள் நடத்துதல், இலவச அங்கத்துவம் வழங்குதல், தாய் சேய் நலன்புரி நிலையங்களுக்கான நடமாடும் சேவை, மரம் செடி கொடிகள் காட்சிப்படுத்தலும் விளக்கமளித்தலும், நூலகத்துக்கு நூல்களும் பொருள்களும் பெற்றுக் கொள்ளல், சனசமூக நிலையங்கள் நூலகங்களுக்கு நூல்கள் மற்றும் பருவ வெளியீடுகள் இலவசமாக் வழங்குதல், எழுத்தாளர் கௌரவிப்பு, பாடசாலை நூலகங்கள், சனசமூக நிலைய நூலகங்கள் ஆகியவற்றுக்கிடையில் போட்டிகள் நடத்துதல், தொகுப்பாக்க வெளியீடுகள், சஞ்சிகை வெளியீடு, தேசிய வாசிப்பு மாத வாசகர் வலுக்கட்டங்களாக அதிக நேரம் நூலகத்தைப் பயன்படுத்தும் ஐந்து வாசகர்களுக்குப் பரிசில்களும் மரக்கன்றுகளும் வழங்கல், மாணவர், வாசகர் ஆசிரியருக்கு கட்டுரைப் போட்டி நடத்துதல், நூலகத்துக்கு நூல்கள் அன்பளிப்புச் செய்தல், பௌர்ணமி அரங்க நிகழ்வுகள், நூல்கள் வெளியீடு செய்தல் ஆகியவற்றுடன் சிறு நிகழ்வாகப் பரிசில் வழங்கலும் இடம்பெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)


பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் தொடர்பில்
குறைந்த
லீசிங் மாதாந்த கொடுப்பனவு
எங்களிடம்
SINGER FINANCE
இடமிருந்து மட்டுமே
அதிகூடிய கடன் தொகை குறைந்த வட்டிக்கு
இன்றே உங்கள் வாகனத்தை கொண்டு செல்லுங்கள
தொடர்புகளுக்கு
தனு 077 9 357 124
சுஜந்தன் 077 7 391 449
தர்ஷன் 077 7 009 666
கலைதேவன் 077 3 675 022
சுதன் 077 3 550 018
இல.86, கே.கே.எஸ், வீதி, யாழ்ப்பாணம்



## புதிய தலைவர் மாவைக்கு மட்டக்களப்பில் வரவேற்பு

மட்டக்களப்பு, செப் 28
இலங்கைத் தமிழரசுக் கட்சின் புதிய தலைவர் மாவை சேனாதிராசா, செயலாளர் கி.துரைராஜசிங்கம் ஆகியோரை வரவேற்றும் நிகழ்வு நேற்றுச் சனிக்கிழமை மட்டக்களப்பு கல்லடி துளசி மண்டபத்தில் நடைபெற்றது.
இலங்கைத் தழிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் அணி ஏற்பாடு செய்த இந்த நிகழ்வு அதன் தலைவர் கி.சேயோன் தலைமையில் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இலங்கைத் தழிழரசுக் கட்சியின் புதிய தலைவர் மாவை. சேனாதிராசா, அந்தக் கட்சியின் புதிய செயலாளர் கி.துரைராஜசிங்கம் மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், பொன். செல்வராசா, பா.அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன் மற்றும் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் மா.நடராசா உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.
இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டதோடு இலங்கைத் தழிழரசுக் கட்சியின் புதிய தலைவர் மாவை. சேனாதிராசா, புதிய செயலாளர் கி.துரைராஜசிங்கம் ஆகியோரை வாழ்த்தி வரவேற்கும் நிகழ்வும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (த-32-31)

## மன்னார் பொது வைத்தியசாலையில் குழந்தைகளுக்கு பாலூட்டும் நிலையம்

மன்னார், செப். 28
மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வருகை தரும் தாய்மார் தங்கள் குழந்தைகளுக்குப் பாலூட்டுவதற்காக மன்னார் பொது வைத்தியசாலையில் உலக தரிசன நிறுவனத்தின் நிதியுதவியுடன் பாலூட்டும் நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.
சுமார் 4 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த நிலையத்தை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி றஜனி அன்ரனி சிசில் வைபவ ரீதியாக திறந்து வைத்தார்.
இந்த நிகழ்வின்போது மன்னார் பொது வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி வீ.ஆர்.சீ.லெம்பேட், மன்னார் உலக தரிசன நிறுவனத்தின் திட்ட இணைப்



பாளர் றெஜி ஜெயபாலன், மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் நிர்வாக அலுவலகர் ஏ.எஸ்.எம்.சஜானி உட்பட பல முக்கியஸதர்களும் கலந்து கொண்டனர்.
மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி றஜனி அன்ரனி சிசில் அங்கு உரையாற்றுகையில்;
மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு முக்கிய தேவைகள் ஏற்படுகின்றபோது உலக தரிசன நிறுவனம், பி.எஸ்.எல். நிறுவனம் ஆகியவை எமக்கு உதவி செய்வதில் பின் நிற்பதில்லை. அந்த வகையில் நாம் அனைவரும் அவர்களைப் பாராட்டியே ஆகவேண்டும்.
அத்துடன் மன்னார் வைத்தியசாலைக்குக் குழந்தைகளுடன் வரும் தாய்மார்கள் கடந்த காலங்களில் தங்கள் குழந்தைகளுக்கு மறைவாக இருந்து பாலூட்டுவதில் அசௌகரியங்களை எதிர்நோக்கி வந்தனர். ஆனால் தற்பொழுது அந்தக் குறை தீர்வதற்கு வழி பிறந்துள்ளது-என்றார். (த-56)

# ஜனாதிபதி இல்லாத வேளையில் வன்முறையைத் தூண்ட முயற்சி

## அதற்காகவே பிக்குகள் பேரணி என்கிறார் சுமந்திரன்

மட்டக்களப்பு, செப். 28

பௌத்த பிக்குகள் 4ஆயிரம் பேர் ஒன்றிணைந்து கொழும்பில் வலம் வந்து இலங்கை பௌத்த தேசம் என்பதையும், பௌத்த நாடு என்பதையும் நிரூபிப்பதாகக் கூறியுள்ளனர். நாட்டில் ஜனாதிபதி, பாதுகாப்புச் செயலாளர் இல்லாத நிலையில் இதனை மேற்கொள்ளவுள்ளமையை நாங்கள் தற்செயலாக நடக்கின்ற விடயமாகக் கொள்ள முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் புதிய நிர்வாகத்தினரைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று மட்டக்களப்பு கல்லடி துளசி மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நேரத்தைச் சரியாக தேர்ந்தெடுத்து வன்செயலை ஆரம்பிப்பதற்காகப் பிக்குகள் இதனைச் செய்கின்றனர். இதனை நாம் சாதாரணமாகப் பார்த்து விட முடியாது.

இந்த நாட்டைப் பௌத்த சிங்கள நாடு என உணர்த்தும் தேவை அரசுக்கு இன்று ஏற்பட்டிருக்கின்றது. அரசுக்கு பல்வேறு கோணங்களில் வெளிநாட்டு அழுத்தங்கள் கூடுதலாக ஏற்பட்டுள்ளன. இதனைத் தவிர உள்நாட்டிலும் வித்தியாசமான



அழுத்தங்கள் அரசுக்கு தற்போது பிரயோகிக்கப்படுகின்றன. உதாரணத்துக்கு ஊவா மாகாண சபைத் தேர்தலைக் கூறலாம். போர் வெற்றியை வைத்துக் கொண்டு இந்த நாட்டை 25 வருடங்களுக்கு ஆட்சி நடத்துவோம் என்று கூறிவந்த ஜனாதிபதி தற்போது 5 வருடங்களுக்குள் ஆட்டம் கண்டுள்ளார். இதனால் தான் இவர்கள் தேவையற்ற பிரச்சினையைத் தூண்டி விடுகின்றனர்.

நாங்கள் எங்கள் நடத்தையில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். நாங்கள் இந்த நாட்டில் ஏனையவர்களுக்கு இருக்கக் கூடிய உரிமையைத் தான் கேட்கின்றோம்.

இந்த நாட்டின் உரிமைக்கு நாங்கள் உரித்துடையவர்கள். ஒரு நாட்டுக்குள் நாங்கள் இறைமையின்றி இருக்கக் கூடாது. இதற்காக எமது உரிமைக்கு ஏற்றபடி அரசியல் யாப்பு முறைகள் மாற்றியமைக்கப்படவேண்டும்.

இவ்வாறு நடந்தால் தங்களது ஆதிக்கம் இல்லாம் போய் விடும் என்பதற்காவே பேரினவாதத்தை தூண்டிவிடுகின்றனர். இதற்கு நாங்கள் இடமளிக்க முடியாது - என்றார். (த-31-32)

# பனை, தென்னை வள உற்பத்தியாளர் பெரும் பொருளாதாரப் பின்னடைவில்

## கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் கவலை



யாழ்ப்பாணம்.செப்.28

வடக்கில் பனை, தென்னை வள உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திகளைச் சந்தைப்படுத்த முடியாமல் பொருளாதார ரீதியில் பின்னடைவைச் சந்தித்து வருகின்றனர். எனவே இதற்கான சந்தை வாய்ப்புக்கள் போதியளவு பெற்றுக் கொடுக்கப்பட வேண்டியுள்ளது என்று வடக்கு மாகாணப் பனை, தென்னை வளக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் நா.கணேசன் தெரிவித்தார்.

பனை, தென்னை வளக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் 92 ஆவது கூட்டுறவுத்தின விழா நேற்றுச் சமாச மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் தலைமையுரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பனை, தென்னை வளக் கூட்டுறவாளர்கள் தாராளமான உற்பத்திகளைச் செய்து வருகிறார்கள். அதன் மூலம் அதிகளவு இலாபத்தைப் பெற்று வருகிறார்கள் என்ற மனநிலை சமூகத்தின் மத்தியில் உள்ளது. ஆனால் கூட்டுறவாளர்கள் மறைமுகமாக எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிகளை யாரும் அறிந்திருக்கமாட்டார்கள்.

குறிப்பாக உற்பத்திப் பொருள்களுக்குச் சந்தை வாய்ப்பு இல்லாமல் அவர்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர். பனை, தென்னை வளக் கூட்டுறவுச் சங்கத்தின் சமாசம் தனது செயற்பாட்டுக்கு அப்பால் சமூகப் பணிகளிலும் ஈடுபடுகின்றது. குறிப்பாக ஒரு வருடத்தில் இந்த சமூகப்பணிகளுக்கென 70 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமாகச் செலவு செய்து வருகின்றது. அவற்றில் 127 இற்கும் மேற்பட்ட ஆரம்ப்ப் பாடசாலைகள் நன்மையடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கூட்டுறவாளர்கள் தமது வருமானத்துக்கு அப்பால் சமூகப் பணிகளுக்கும் கைகொடுக்கின்றனர் என்பதை நாம் தெரிந்து கொள்ளவேண்டும்-என்றார்.

இந்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம்,வடக்கு மாகாண மதுவரி ஆணையாளர் கிறிஸ்ரி யோசப், யாழ். மாவட்டக்கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் உட்பட கூட்டுறவாளர்கள் பலர் கலந்து கொண்டனர். (த-14-ரி)

# மின்சார சபை தொழிற்சங்கத்தின் மாநாடு நேற்று யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம். செப்.28

இலங்கை மின்சார சபைத் தொழிற்சங்கத்தின் வடக்கு மாகாண மனித வலு மாநாடு நேற்றுச் சனிக்கிழமை யாழ்ப்பாணம் றிம்மர் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் ஜே.வி.பி மத்திய குழு உறுப்பினரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான இராமலிங்கம் சந்திரசேகரன், இலங்கை மின்சார சபை மனித வலுச் சங்கத்தின் செயலாளர் ரஞ்சன் ஜெயலால் உட்படச் சங்கத்தின் மாகாண அமைப்பாளர்கள், உறுப்பினர்கள் என சுமார் 250 க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.




முன்னதாக நாடாளுமன்ற உறுப்பினர் இ.சந்திரசேகரன் உட்பட மாகாண அமைப்பாளர்கள் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

மின்சார சபையில் 10 வருடங்களுக்கு மேலாகப் பணியாற்றும் சுமார் 4 ஆயிரம் பேரை நிரந்தர ஊழியர்களாக நியமிக்க நடவடிக்கை எடுக்கக் கோரி மின்சக்தி அமைச்சருக்கூடாக ஜனாதிபதிக்கு மனு அனுப்புவதாக இதில் தீர்மானிக்கப்பட்டது. (த-7)

# அலுவலகமும் மருந்தகமும் நாளை சொந்தக் கட்டடத்தில்

தென்மராட்சி, செப்.28

சாவகச்சேரி பிரதேச சபையின் மிருசுவில் உப அலுவலகமும் ஆயுள்வேத மருந்தகமும் 14 வருடங்களின் பின்னர் சொந்தக் கட்டடத்தில் நாளை திங்கட்கிழமை தொடக்கம் இயங்கவுள்ளன.

2000 ஆம் ஆண்டு தொடக்கம் படையினரால் பயன்படுத்தப்பட்டு வந்த மிருசுவில் உப அலுவலகக் கட்டடம் அண்மையில் பிரதேச சபையிடம் கையளிக்கப்பட்டது. அதன் பின்னர் சபை நிதியில் புனரமைக்கப்பட்டுத் திறந்து வைக்கப்படவுள்ளது.

பிரதேச சபை தலைவர் சி.துரைராஜா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் உப அலுவலகத்தையும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்டக் கிளைத் தலைவர் பெ,கனகசபாபதி ஆயுள்வேத மருந்தகக் கட்டடத்தையும் திறந்து வைக்கவுள்ளனர். 2000 ஆம் ஆண்டு தொடக்கம் உப அலுவலகக் கட்டடம் படையினரால் பயன்படுத்தப்பட்டதால் அதன் பணிகள் உசன் கந்தசாமி ஆலயத்துக்கு அருகில் உள்ள தனியார் கட்டடம் ஒன்றில் இதுவரை காலமும் தற்காலிகமாக இடம் பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. (த-9)

# டக்ளஸின் வருகைக்காக 2 மணி நேரம் காத்திருப்பு

யாழ்ப்பாணம்.செப்.28

பிரதம விருந்தினராக அழைக்கப்பட்ட அமைச்சர் டக்ளஸின் வருகைக்காகச் சிறப்பு விருந்தினர்கள் உட்படக் கூட்டுறவாளர்கள். அரச அதிகாரிகள் ஆகியோர் சுமார் 2 மணி நேரம் காத்திருந்தனர்.

வடக்கு மாகாண பனை - தென்னை வளக் கூட்டுறவுச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 92 ஆவது கூட்டுறவு தின நிகழ்வு நேற்றுச் சமாச மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அழைக்கப்பட்டிருந்தார். முற்பகல் 10 மணிக்கு ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வுக்கு விருந்தினர்களாக அழைக்கபட்ட அரச அதிகாரிகள், கூட்டுறவாளர்கள் வருகை தந்திருந்தனர். ஆயினும் நிகழ்வு குறித்த நேரத்துக்கு ஆரம்பமாகவில்லை. அனைவரும் 2 மணி நேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. நண்பகல் 12 மணியளவில் அமைச்சர் வந்ததை அடுத்து நிகழ்வு ஆரம்பமானது. இந்த நிகழ்வில் கூட்டுறவாளர்கள் பலர் கௌரவிப்புக்காக காத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-ரி)

# நீதிமன்ற வளவில் முறிந்து வீழ்ந்தது மரக்கிளை

யாழ்ப்பாணம், செப் 28

மல்லாகம் நீதிமன்ற வளாகத்தில் உள்ள பெரிய மரத்தின் கிளை நேற்று முன்தினம் முறிந்து விழுந்ததனால் அங்கு நிறுத்தப்பட்டிருந்த 5 மோட்டார் சைக்கிள்கள் கடுமையாகச் சேதமடைந்துள்ளன.

நேற்று முன்தினம் முற்பகல் வழக்குகள் இடம்பெற்றுக்கொண்டிருந்தபோது பெரிய சத்தத்துடன் மரக்கிளை முறிந்து விழுந்தது. இதன்னால் அந்த மரத்தின் கீழ் நிறுத்தப்பட்டிருந்த பணியாளர்களின் மோட்டார் சைக்கிள்களே சேதமடைந்தன. (த-4)

# மீனவருக்கு உபகரணங்கள் வழங்கல் நேற்று ஆரம்பம்

யாழ்பாணம்,செப்.28

கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சின் உதவியுடன் யாழ்.மாவட்ட மீனவர்களுக்கான மானிய அடிப்படையிலான கடற்றொழில் உபகரணங்கள் வழங்கும் பணிகள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன.

யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் குருநகர் கலாசார மண்டபத்தில் வைத்து நேற்றுச் சனிக்கிழமை கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்தின் மாவட்டப் பரிசோதகர் பா.ரமேஷ் கண்ணா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு மீனவர்களுக்கு உபகரணங்களை வழங்கினார்.

முதற் கட்டமாக குருநகர் பகுதியைச் சேர்ந்த 10 மீனவர்களுக்கு ஒரு லட்சத்து 12ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான வலைகள், பாதுகாப்பு அங்கிகள் விநியோகிக்கப்பட்டன. (த-17)

# எவராலும் எங்களை அச்சுறுத்த முடியாது

## சந்திரசேகரன் கூறுகிறார்

யாழ்ப்பாணம், செப்.28

இலங்கையில் அச்சுறுத்தும் அரசியல்வாதிகள், இரகசியப் பொலிஸார், இராணுவத்தினர் உள்ளனர். இவர்களின் அச்சுறுத்தல்களுக்குப் பயந்துவிடும் நிலையில் மின்சாரத் தொழிலாளர்கள் இல்லை என ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், மத்திய குழு உறுப்பினருமான இராமலிங்கம் சந்திரசேகரன் குறிப்பிட்டார்.

இலங்கை மின்சார சபை மனித வலுச் சங்கத்தின் வடக்கு மாகாண மாநாடு நேற்றுச் சனிக்கிழமை யாழ். றிம்மர் மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் உரையாற்றிய சந்திரசேகரன் மேலும் தெரிவித்ததாவது:-

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மாநாட்டுக்குச் செல்லாதீர்கள் எனக் கூறியதாகத் தெரிகின்றது. இன்று இங்கு சுமார் 350 ஊழியர்கள் நிரந்தர நியமனம் கிடைக்காமல் மிகவும் கஷ்டத்திலும் வறுமையிலும் உள்ளனர். அவருக்கு இவர்களுக்கான நிரந்தர நியமனத்தைப் பெற்றுக் கொடுக்க முடியாது முடிந்தால் செய்யட்டும். நாங்கள் இரண்டு கரங்களையும் அவருக்காக உயர்த்துவோம். சில அரசியல்வாதிகள் அமெரிக்காவரும், ஐ.நா. வரும், இந்தியா வரும், சீனா வரும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இது எதுவும் சாத்தியமில்லை. அப்படி வந்தால் அது நாட்டுக்கு ஆபத்து. எனவே தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் இணைந்து ஒன்றுபட்டுத் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப் போராட வேண்டும்.

எமது கட்சியின் இந்தச் சங்கம் மிகவும் பலம் வாய்ந்தது. இரண்டு தடவை ராஜபக்ஷ ஜனாதிபதியாக வருவதற்கு எங்கள் பலமே காரணம். அவர் எமக்குத் தெரிவித்த உறுதிமொழிகளை மறந்து விட்டார். எமது சங்கத்தில் உள்ள மின்சார சபை ஊழியர்கள் நிரந்தர ஊழியர்களாக்கப்பட வேண்டும். சங்கம் அதற்கு பலமான நடவடிக்கைகளை எடுக்கும்-என்றார். (த-7)




எம்.ஐ.முபாறக்

## முஸ்லிம் கட்சிகளின் காலைவாரிவிட்டு

# மீண்டும் ஐ.தே.கவை நாடிச் செல்லும் நிலை

அண்மைக்கால மாகாண சபைத் தேர்தல்கள் பல செய்திகளை இந்த நாட்டுக்குக் கூறிவருகின்றன. அவற்றிலும் அண்மையில் இடம் பெற்ற மேல் மற்றும் ஊவா தேர்தல்கள் ஒரே மாதிரியான செய்திகளைத் தெரிவிக்கின்றன.

அரசு வீழ்ச்சி, ஐ.தே.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் எழுச்சி, அரசுக்கும் அரசுடன் ஒட்டியிருக்கும் முஸ்லிம் கட்சிகளுக்கும் முஸ்லிம்கள் எதிர்ப்பு, ஐ.தே. கவுக்கு முஸ்லிம்கள் ஆதரவு போன்ற ஒரே மாதிரியான செய்திகளை மேற்படி தேர்தல்களில் எம்மால் பெறக் கூடியதாக இருக்கின்றது.



அதிலும் அரசையும் தவிர்த்து- தமக்கென இருக்கின்ற முஸ்லிம் கட்சிகளையும் தவிர்த்து முஸ்லிம்கள் ஐ.தே. கவை அதிகம் ஆதரித்து வருகின்ற நிலைமையைப் பற்றியும் அதற்கான காரணங்களைப் பற்றியும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டியுள்ளது.

வரலாற்றில் தமிழரசுக் க ட்சியுடனும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐ.தே.க. போன்ற கட்சிகளுடனும் இணைந்து அரசியல் பயணம் செய்த முஸ்லிம்கள் காலத்தின் தேவை கருதி முஸ்லிம்களுக்கென தனியான அரசியல் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற கட்சியை உருவாக்கினர்.

அக்கட்சி வளர்ந்து விருட்சமானதன் பின்னர் அக்கட்சியில் இருந்து பிரிந்தவர்கள் தேசிய காங்கிரஸ் என்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்றும் மேலும் கட்சிகளை உருவாக்கிக் கொண்டனர்.

வடக்கு, கிழக்கைப் பிரதான தளங்களாகக்கொண்டு செயற்படும் இந்தக் கட்சிகள் வடக்கு, கிழக்குக்கு வெளியேயும் கால்பதிக்கத் தொடங்கின. அவ்வாறான கட்சிகளாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸும் உள்ளன.

ஆனால், இந்தக் கட்சிகளால் வடக்கு, கிழக்குக்கு வெளியே ஆழமாகக் கால் ஊன்ற முடியாத நிலையைக் காணக் கூடியதாக இருக்கின்றது. இந்தக் கட்சிகளின் ஊடாக வடக்கு, கிழக்குக்கு வெளியே உள்ள முஸ்லிம்கள் தங்களின் தனித்துவ அரசியல் அடை யாளத்தைப் பாதுகாக்க முன் வராது பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே. கவை ஆதரிப்பதை நாம் காண்கிறோம்.

வடக்கு, கிழக்குக்கு வெளியே உள்ள அதிகமான முஸ்லிம்கள் ஐ.தே. கவுக்கு வாக்களித்துப் பழக்கப்பட்ட வர்கள். காலம் காலமாக அவர்கள் ஐ.தே. கவைதான் ஆதரிக்கின்றனர்.

ஆனால், அண்மைக்காலத் தேர்தல்களில் இந்த நிலைமை [illegible] காணப் மேலும் அதி[illegible] படுகிறது.

முஸ்லிம் கட்சிகளுக்கு ஊடாக தமது அரசியல் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கச்செய்து தமது தனித்துவ அரசியல் அடையாளத்தைத் தக்கவைத்துக்கொள்ள வடக்கு, கிழக்குக்கு வெளியே உள்ள முஸ்லிம்கள் முன் வராமைக்கும் அவ்வாறான ஒரு நிலைமையை முஸ்லிம் கட்சிகளால் உருவாக்க முடியாமைக்கும் காரணம் என்ன?

முஸ்லிம்களின் தனித்துவ அடையாளத்தைக் காப்பாற்றுபவர்களாக - முஸ்லிம்களின் உரிமைகளுக்காகப் போராடுபவர்களாக இந்த முஸ்லிம் கட்சிகள் தங்களை இன்னும் அடை யாளப்படுத்த முடியாமல் இருப்பதே இதற்குக் காரணம் எனலாம். நாட்டில் இப்போது முஸ்லிம்களுக்கு எதிராகத் தலைதூக்கியுள்ள பேரினவாதத்துக்கு எதிராகப் போராடாமல், அந்தப் பேரினவாதத்தை வளர்த்தெடுக்கின்ற மஹிந்தவின் அரசுடன் ஒட்டியிருக்கின்றமையே முஸ்லிம்கள் இந்த முஸ்லிம் கட்சிகளிலிருந்து இன்னும் தூரச் செல்லக் காரணம்.

இவ்வாறு தூரமாகும் முஸ்லிம்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் பின்னால் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது. அண்மைக்கால தேர்தல்கள் இதை மேலும் உறுதிப்படுத்துகின்றன.

கடந்த வருடம் இடம்பெற்ற வட மேல் மற்றும் மத்திய மாகாண சபைத் தேர்தலை எடுத்துக் கொண்டால் கண்டி மாவட்டத்தில் ஐ.தே.க. சார்பில் இரண்டு முஸ்லிம்கள் தெரிவாகினர். மு.காவில் ஒருவர் தெரிவாகினார்.





> முஸ்லிம்களின் தனித்துவ அடையாளத்தைக் காப்பாற்றுபவர்களாக — முஸ்லிம்களின் உரிமைகளுக்காக போராடுபவர்களாக இந்த முஸ்லிம் கட்சிகள் தங்களை இன்னும் அடையாளப்படுத்த முடியாமல் இருப்பதே முஸ்லிம்கள் ஐ.தே. கவை நாடக் காரணம் எனலாம். நாட்டில் இப்போது முஸ்லிம்களுக்கு எதிராகத் தலைதூக்கியுள்ள பேரினவாதத்துக்கு எதிராகப் போராடாமல் அந்தப் பேரின வாதத்தை வளர்த்தெடுக்கின்ற மஹிந்தவின் அரசுடன் ஒட்டியிருக்கின்றமையே முஸ்லிம்கள் இந்த முஸ்லிம் கட்சிகளில் இருந்து இன்னும் தூரச் செல்லக் காரணம்.

இந்த வருடம் இடம்பெற்ற மேல் மாகாணசபைத் தேர்தலில் ஐ.தே. கவில் நான்கு முஸ்லிம் உறுப்பினர்கள் தெரிவாகினர்.

அவர்களுள் ஒருவர் களுத்துறை மாவட்டத்திலும் மற்றைய மூவர் கொழும்பு மாவட்டத்திலும் தெரிவாகினர்.

அத்தேர்தலில் மு.காவில் ஒரு வரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸில் ஒருவரும் தெரிவாகினர். அரசிலிருந்து ஒருவரும் தெரிவாகவில்லை.

இறுதியாக இடம்பெற்ற ஊவா தேர்தலில் ஐ.தே.கவிலோ, முஸ்லிம் கூட்டணியிலோ எந்தவொரு உறுப்பினரும் தெரிவாகாதபோதிலும் 15 ஆயிரம் முஸ்லிம் வாக்குகள் ஐ.தே. கவுக்கும் 5 ஆயி ரம் வாக்குகள் முஸ்லிம் கூட்டணிக்கும் சென்றன. இங்கும் முஸ்லிம்கள் ஐ.தே. கவையே ஆதரித்துள்ளனர்.

வடக்கு, கிழக்குக்கு வெளியில் உள்ள முஸ்லிம் கள் ஐ.தே.கவை ஆதரித்து பழக்கப்பட்டவர்கள் தானே. இத்தேர்தல் முடிவுகள் எதிர்பார்க்கப்பட்டவைதானே என நாம் நினைக்கலாம்.

சாதாரண சூழ்நிலையில் இவ்வாறு நினைப்பது நியாயம். ஆனால், முஸ்லிம்களுக்கு எதிரான அசாதாரண சூழ்நிலை யில் இந்தத் தேர்தல் இடம் பெற்றிருப்பதால் வழமையாக ஐ.தே.கவை ஆதரிக்கும் மனநிலையில் இருந்து முஸ்லிம்கள் ஐ.தே. கவை ஆதரிக்கவில்லை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

முஸ்லிம்களுக்கு எதிரான பேரின வாதத்துக்குத் துணை போகும் அர சுக்கு எதிராகவும் அந்த அரசுடன் ஒட்டியிருக்கும் முஸ்லிம் கட்சிகளுக்கு எதிராகவும் முஸ்லிம்கள் இத்தேர்தலில் வாக்களித்துள்ளனர் என்பதை அவர்களுடன் பேசும் போது அறிய முடிகிறது. பேரின வாதத்தைப் பாதுகாக்கும் அரசையும் ஆதரிக்க முடியாது. அந்த அரசுடன் ஒட்டியிருக்கும் முஸ்லிம் கட்சிகளையும் ஆதரிக்க முடியாது என்ற நிலைப் பாட்டில் முஸ்லிம்கள் இப்போது இருப்பதால் அவர்களுக்கு மாற்று அரசியல் தளம் - மாற்று அரசியல் கட்சி ஒன்று தேவைப்படுகிறது. அந்த மாற்று அரசியல் தளமாக அவர்களுக்கு இப்போது தெரிவது ஐ.தே.க. மட்டும் தான். அதனால், முஸ்லிம்கள் இப்[illegible] அதன் பின்னால் பயணிக்கத் தொடங்கி விட்டனர்.

எழுச்சி கண்டு வரும் ஐ.தே. கவும் கட்சியில் சில சீர்திருத்தங்களைச் செய்துகொண்டு ஆட்சியைக் கைப்பற்றும் போராட்டத்தில் இறங்கியுள்ளது. அந்தச் சீர்திருத்தத்தின் முதற்கட்டமாகவே சஜீத் பிரேமதாஸவின் பிரதித் தலைவர் நியமனம் அமைந்துள்ளது. இனிவரும் தேர்தல்களில் ஐ.தே.க. ஆட்சியைக் கைப் பற்றும் என்றும் இந்தக் கட்சி முஸ்லிம்களைப் பாதுகாக்கும் என்றும் முஸ்லிம்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளதன் காரணமாகவே முஸ்லிம்கள் இப்போது ஐ.தே. கவின் பக்கம் சாயத் தொடங்கியுள்ளனர்.

இந்த நகர்வையெல்லாம் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் மிக உன்னிப்பாகப் பார்த்துக்கொண்டு இருக்கின்றனர். முஸ்லிம் கட்சிகள் அரசை விட்டு விலகாது வழமையான பாணியில் அரசில் இருந்துகொண்டே எதிர்க் கட்சியாகத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்று மீண்டும் அரசுடன் இணைகின்ற அந்த நாடகம் இனியும் கிழக்கு மாகாண முஸ்லிம்களிடம் எடுபடாது.

இந்த நாடகத்தை கடந்த கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் அரங்கேற்றி, பின்னர் அரசுடன் இணைந்து ஆட்சி அமைத்ததை மக்கள் இன்னும் மறக்கவில்லை. இனி வரும் தேர்தல்களில் அவ்வாறான நாடகத்துக்கு இடம் கொடுப்பதில்லை என்ற நிலைப்பாட்டில் முஸ்லிம்கள் இருக்கின்றனர். பதுளை மாவட்ட முஸ்லிம்களின் தீர்ப்பையே கிழக்கு மாகாண முஸ்லிம்களும் எதிர்வரும் தேர்தல்களில் பயன்படுத்தப் போகின்றனர் என்பது தெளிவாகத் தெரிகிறது.

முஸ்லிம்களுக்கு எதிரான பேரினவாதம் இன்னும் உக்கிரமடையும் நிலையே காணப்படுவதால் இனியும் முஸ்லிம் கட்சிகள் அரசுடன் இணைந்திருப்பது அக்கட்சிகளின் இருப்புக்கு ஆபத்தாகவே அமையும். இந்தச் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தும் ஐ.தே.க. முஸ்லிம் கட்சிகளின் வாக்கு வங்கியை தம் பக்கம் இழுத்தெடுப்பது நிச்சயமே.

# அரசை வீழ்த்தும் சக்தி பொதுபல சேனாவிடம்

## சரியான நேரத்தில் சாதிப்பர் என்கிறார் டிலாந்த விதானகே

கொழும்பு, செப். 28
அரசை வீழ்த்தக்கூடிய சக்தி தம்மிடம் தாராளமாக இருப்பதாகவும் அதனை சரியான நேரத்தில் பயன்படுத்தவுள்ளதாகவும் கடும்போக்கு டைய சிங்கள- பௌத்த அமைப்பான பொதுபல சேனா அமைப்பு தெரிவித் தது.

இப்போதுள்ள அரசு மாத்திரமல்ல, சுதந்திரம் கிடைத்த பின்னர் அதாவது, இந்த 60 வருட காலமாக இலங்கையை ஆட்சி செய்த எந்தவொரு அரசும் இலங்கையிலுள்ள பெரும்பான்மை மக்களான சிங்கள - பௌத்த மக்களின் நலன் சார்ந்து இருக்கவில்லை என்றும் அரசை அமைப்பதெல்லாம் அவரவர் சொந்த தேவைக்காகவே காணப்பட்டதே ஒழிய மக்களின் குரலாக அது ஒலிக்கவில்லை என்றும் அது குற்றம் சுமத்தியது.

மேலும், எம்மை பொறுத்தவரை தற்போதுள்ள அரசை கவிழ்ப்பதோ அல்லது புதியதோர் அரசை உருவாக்குவதோ அல்ல எமது நோக்கம். ஏனைய சமூகத்தினருக்கு குரல்கொடுப்பதைப் போல சிங்கள - பௌத்த மக்களுக்காகவும் குரல்கொடுக்கக் கூடிய புதிய அரசு ஒன்று தோற்றம் பெறவேண்டும். அந்த அரசானது சிங்கள - பௌத்த மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒன்றாகவே அமைய வேண்டும். ஏனெனில், அதுவே நாட்டை பாதுகாக்கும் என்பதுடன் சிறுபான்மையின மக்களின் நலனுக்கும் உறுதுணையாக இருக்கும் என்றும் பல சேனா மேலும் குறிப்பிட்டது.

அத்தோடு, தம்மிடம் அரசை கவிழ்க்கக் கூடியளவிலான சக்திகள் தாராளமாக இருப்பதாகவும், அதனை சரியான தருணம் பார்த்து பயன்படுத்தவுள்ளதாகவும் அவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

சமகால அரசியல் உள்ளிட்ட சில முக்கிய விடயங்கள் குறித்து பொது பல சேனாவின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரான டிலாந்த விதானகேவை நேர்காணல் செய்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (த)

# கூட்டமைப்பு - மு.கா. சந்திப்பு ஒத்திவைப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்களுக்கும் இடையில் நேற்று சனிக்கிழமை மாலை கல்முனையில் நடைபெறவிருந்த சந்திப்பு இறுதிநேரத் தில் ஒத்திவைக்கப்பட்டது என்று முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ரி.ஹசனலி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில்அவர் மேலும் தெரிவிக்கையில்:

"கல்முனை மாநகர சபை மேயர் அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெறவிருந்தது. முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமுக்கு ஏற்பட்ட சுகயீனம் காரணமாக தன்னால் கல்முனைக்கு வந்து கலந்து கொள்ள முடியாதுள்ளது என அவர் அறிவித்திருந்தார். இதனால் முஸ்லிம் காங்கிரஸ் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக இந்தச் சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பு அடுத்த வாரத்தில் திட்டமிட்டபடி கொழும்பில் நடைபெறும்" - என்றார்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் சுமுகமான பேச்சுக்கள் நிச்சயமாகத் தொடர்ந்து நடைபெறும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

# வரவு - செலவுத் திட்டம் முன்கூட்டியே சமர்ப்பிக்கப்படுமா?

## அரசிடம் ஐ.தே.க. கேள்வி

கொழும்பு, செப். 28
நிதி ஒதுக்கீட்டுச் சட்டவரைவு ஒவ்வொரு ஆண்டும் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படும் சம் பிரதாயத்திலிருந்து முன்கூட்டியே இம்முறை சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில், 2015ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தையும் வழமையிலும் பார்க்க முன்கூட்டியே கொண்டுவரும் திட்டம் அரசுக்கு இருக்கிறதா என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி நேற்றுமுன்தினம் சபையில் கேள்வி எழுப்பியது.

2015ஆம் நிதியாண்டுக்கான நிதி ஒதுக்கீட்டு சட்டவரைவை பிரதமர் டி.எம்.ஜயரட்ன நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த பின்னர் எதிர்க்கட்சி பிரதம கொறடாவான ஜோன் அமரதுங்க மேற்படி கேள்வியை எழுப்பினார்.

முதலாம் வாசிப்புக்கென நேற்று முன்தினம் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டுச் சட்டவரைவின் மீதான இரண்டாம் வாசிப்பே வரவு - செலவுத் திட்டமாக கொண்டுவரப்படும். வழமையாக ஒவ்வொரு வருடமும் நிதி ஒதுக்கீட்டுச் சட்டவரைவானது ஒக்ரோபர் மாதம் சமர்ப்பிக்கப்படும் நிலையில், இம்முறை அது செப்ரெம்பர் மாதமே சமர்ப்பிக்கப்பட்டு விட்டமையால் வரவு - செலவுத் திட்டத்தை முன்கூட்டியே கொண்டுவரும் திட்டம் அரசுக்கு இருக்கிறதா என்று ஜோன் அமரதுங்க இதன்போது கேள்வி எழுப்பினார்.

எனினும், இதற்குப் பதிலளித்த ஆளுந்தரப்பின் பிரதம கொறடாவான அமைச்சர் தினேஷ் குணவர்தன, நிதி ஒதுக்கீட்டுச் சட்டவரைவானது நாடாளுமன்ற சம்பிரதாயத்துக்கு எந்த வகையிலும் முரணற்ற வகையில் நாடாளுமன்ற நிலையியல் கட்டளைக்கு அமையவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

அத்துடன், இன்னும் 21 நாள்களுக்குள் பிரேரணை எதுவும் கொண்டுவர முடியாது என்பதுடன், இந்தக் காலப் பகுதிக்குள் எந்தவொரு பிரஜையும் இந்தச் சட்டவரைவு தொடர்பில் நீதிமன்றம் செல்ல முடியும் என்றும் ஆனால், எந்தவொரு காரணத்திற்காகவும் வரவு-செலவுத் திட்டம் மீதான விவாத காலம் குறைக்கப்பட மாட்டாது என்றும் அமைச்சர் தினேஷ்குணவர்தன கூறினார்.

இதேநேரம், நிதி ஒதுக்கீட்டுச் சட்டவரைவு முன்கூட்டியே சமர்ப்பிக்கப்பட்டுவிட்ட நிலையில், வழமையாக ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதம் கொண்டுவரப்படும் வரவு - செலவுத் திட்டம் இம்முறை ஒக்ரோபர் மாதமே கொண்டு வரப்பட்டு விடுமா என்று ஜோன் அமரதுங்க மீண்டும் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த ஆளுந்தரப்பு பிரதம கொறடா தினேஷ் குணவர்தன, அரசு சற்று நேரத்தில் தமது வெற்றிகர வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கும் என்று தெரிவித்தார்.

"நாம் சுபநேரம் பார்த்து எமது வெற்றிகரமான வரவு- செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்போம்" என்று அவர் கூறினார். (த-ச)

# தொடர்ச்சிகள்

### தாயகத்

டப்பட்டுக் கௌரவிக்கப்பட்டார். இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் அணி நேற்று சனிக்கிழமை கல்லடி துளசி மண்டபத்தில் நடத்திய வரவேற்பு வைபவத்தின்போதே அவர் பட்டம் வழங்கிக் கௌரவிக் கப்பட்டார். தமிழரசுக் கட்சியின் உப தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பொன். செல்வராசா வாழ்த்துப் பத்திரம் வாசித்து கிரீடத்தைச் சூட்டி இந்தப் பட்டத்தை வழங்கி கௌரவித்தார்.

புதிய தலைவர் மாவை சேனாதிராசா, கட்சியின் புதிய பொதுச் செயலாளரும் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான சட்டத்தரணி கே.துரைராஜசிங்கம் ஆகியோரும் இதன் போது பொன்னாடை போர்த்தி மலர் மாலை அணிவித்து கௌர விக்கப்பட்டனர்.

தலைவர் மாவை சேனாதி ராசாவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திர[illegible]னும், புதிய பொதுச் செயலாளர் கே. துரைராஜசிங்கத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனும் வாழ்த்துப்பத்திரங்களை வழங்கினார்கள். (த-32)

### மகள்

கள். இல்லையென்[illegible]றால் அதைச் சொல்[illegible]ங்கள். நான் அவளுக்குக் கிரியை செய்து விட்டுப் போகின்றேன். 5 வருடமாக நீங்கள் ஆணைக்குழு அமைத்து எங்களை ஏமாற்றாதீர்கள். கடவுளின் நீதியிலிருந்து யாரும் தப்ப முடியாது. போரின்போது இங்கு நடந்த எல்லாம் கடவுளுக்கும், இங்குள்ள மக்களுக்கும் தான் தெரியும்' என்று ஆணைக்குழு முன்பாக அழுதபடி சாட்சியமளித்தார் தந்தை ஒருவர்.3

அவர் மேலும் தெரிவிக்கையில், முழங்காவில் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற ஆணைக்குழு அமர்வில். சாட்சியமளிக்கையிலேயே, பொன்னையா யோகராஜா என்பவர் இவ்வாறு சாட்சியமளித்தார்.

தனது 17 வயதான மகள் மஞ்சுளா காணாமற்போனமை தொடர்பில் தனது சாட்சியத்தை அவர் முன்வைத்தார்.

இராணுவமோ, புலனாய்வாளர்களோ, புலிகளோ ஆயுதம் வைத்திருந்தால் நாங்கள் பேசாமல் இருக்க வேண்டியதுதான். எங்களை நீங்கள் இன்னும் எவ்வளவு காலத்துக்கு ஏமாற்றப் போகின்றீர்கள். ஒரு முடிவும் தெரியாமல் 5 ஆண்டுகளாக அலைகின்றோம். வவுனியா, கொழும்பு அங்கே, இங்கே என்று எங்களை அலைக்கழிக்கின்றார்கள்.

என் பிள்ளை இருக்கிறாளா இல்லையா என்பதைச் சொன்னால் போதும். பிள்ளை இல்லை என்றால் சடங்கைச் செய்து விட்டுப் போகலாம். பிள்ளையைப் பெற்ற எனக்கு மனது வலிக்கின்றது. மன வேதனை எனக்குத்தான் தெரியும். என்னை மாதிரி ஆயிரம் பெற்றோர்இருக்கின்றனர். அவர்கள் எல்லோ[illegible] வேதனைப் பட்டுக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் எல்லோர் சார்பிலும் கேட்கின்றேன். எங்களுக்கு ஓர் முடிவைச் சொல்லுங்கள். எனக்கு வயதும் போய்விட்டது. நான் என்னுடைய இறுதிக்காலத்தில் இருக்கின்றேன். என் கடைசி ஆசை, எனது மகளைப் பார்க்கவேண்டும் என்பதுதான். கடவுளின் நீதியிலிருந்து யாரும் தப்ப முடியாது-என்றார். (த-5)

### மகனின்

நேற்றுச் சாட்சியமளித்தார். காணாமற்போனோர் தொடர்பில்விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வு முழங்காவிலில் நேற்று இடம்பெற்றது.

இந்த அமர்வில் சாட்சியமளித்த பலர், ஆணைக்குழுவினரிடமே எதிர்க்கேள்விகளையும் எழுப்பினர். அத்துடன் ஆணைக்குழுவிடம் மிகக் காட்டமாகப் பதில்களையும் முன்வைத்தனர். அதனடிப்படையில் வேரவிலைச் சேர்ந்த தாய் ஒருவர் தனது 16 வயது மகன் காணாமற்போனமை தொடர்பில் சாட்சியமளித்திருந்தார்.

சாட்சியமளிப்பின் முடிவில் அவர் ஆணைக்குழுவினரிடம், நீங்கள் இறப்புச் சான்றிதழ் தருவீர்களா? என்று கேட்டார். அதற்கு ஆணைக்குழுவினர் பதிலளிக்கவில்லை. சட்டமா அதிபர் திணைக்களப் பிரதிநிதிகளிடம் சென்று தெரிவிக்குமாறு அவர்கள் பணித்தனர். இதன்போது, நீங்கள் இறப்புச் சான்றிதழ் தருவீர்களா? என்று சட்டமா அதிபர் திணைக்களத்தினரிடம் குறித்த தாயார் [illegible]டார். அ[illegible]தற்கு அவர்கள் அதனைப் பற்றி ஆலோசித்து வீட்டுக் கொண்டு வந்து தருவோம் என்றுதெரிவித்தனர். உடனேயே அந்தத் தாயார், 'தப்பித் தவறி இறப்புச் சான்றிதழுடன் என்ர வீட்டுப் பக்கம் வரவேண்டாம். வந்தால் அதைக் கிழித்து உங்கட முகத்திலை வீசி எறிவன்' என்று காரசாரமாகத் தெரிவித்து விட்டு எழுந்து சென்றார். (த-5)

### குழம்பிப்

நேற்றுச் சனிக்கிழமை மட்டக்களப்பு கல்லடியில் அமைந்துள்ள துளசிமண்டபத்தில் இடம்பெற்றது. இலங்கைத் தழிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் அணியின் ஏற்பாட் டில் அதன் தலைவர் கி.சேயோன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

எங்களுடைய கலாசாரம், பாரம்பரியம், மரபுகள் போன்ற வற்றுக்கு மாறான சம்பவங்கள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. இவற்றைச் சர்வ தேச சமூகம் மாற்றியமைத்து, நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக தற்போது ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற பாதையில் நாங்கள் முன்னேறுவதற்கு அனைவரும் உதவ வேண்டும். இது பற்றி ஜனாதிபதி சர்வதேசத்திடம் கூறியிருக் கின்றார். ஆனாலும் அதனுடைய விளக்கத்தை அவர் கூறவில்லை.

ஆனால் ஐக்கிய நாடுகள் சபையின் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ள பல விடயங்களை மீறியதன் காரண மாக[illegible] இல[illegible]ங்கை அரசுக்கு எதிராக மேலும் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் பிரேரணையின் அடிப்படையில் இலங்கை அரசு ஏற்றுக் கொண்ட பல விடயங்களை நடைமு றைப் படுத்தாமல் அதிலிருந்து விலகி வேறு வழியில் செல்ல முயற்சிக்கின்றது.

இந்த நாட்டில் சிறுபான்மையினம் என்று எவரும் இல்லை. இந்த நாட்டில் வாழுகின்ற மக்கள் ஒரே மக்கள். ஆனால் ஒரு வித்தியாசம் தான் இருக் கின்றது என்று ஜனாதிபதி அடிக்கடி கூறி வருகிறார். இந்த நாட்டை நேசிப்பவர்கள், நாட்டை நேசிக்காதவர்கள் என இரண்டு பிரிவினர்கள் தான் உள்ளார்கள். இந்த வேற்று மையைத் தவிர வேறு வேற்று மைகள் இல்லை என அவர் குறிப்பிடுகிறார்.

இலங்கையில் வெவ்வேறு மக்கள் வாழ்கின்றார்கள். இவர்கள் ஒவ்வொருவருக் கும் தங்கள் தனித்துவத்தைப் பேணுவதற்கும் உரிமையுண்டு என இந்திய - இலங்கை ஒப்பதந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்கள் ஒவ்வொருவரும் அவர்களது தனித்துவத்தைப் பேணுவதற்கு உரிமையுண்டு. அந்த அடிப்படையில் இந்த நாட்டில் ஆட்சி அமைய வேண்டும்எனஅதில்குறிப்பிடப்பட்டுள்ளது. சிறுபான்மையினம் இந்த நாட்டில் இல்லை எனக் கூறிய ஜனாதிபதி, பெரும்பான்மையினம் இங்கு இல்லை என்று சொல்லவில்லை.

அரசியல் தீர்வு காணாமல் வடக்கு - கிழக்கில் பெரிதளவில் இராணுவத்தினரை- பெரும்[illegible]மையினத்தவர்களைக் குடியேற்றி அவர்களுக்கு ஏற்ற வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றன. ஆனால் தமிழ் மக்கள் புனர்வாழ்வு இல்லமல், குடியிருக்க இடம் இல்லாமல் வாழவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இன்னும் 10 ஆண்டுகளுக்குப் பிறகு பிரச்சினைகளுக்குத் தீர்வு என்ற விடயம் இல்லாமல் போய்விடும்.

துரதிஷ்டவசமாக நாங்கள் கிழக்கு மாகாண சபையைக் கைப்பற்றவில்லை. இதனை நாங்கள் செய்திருக்கலாம். இதனை நாங்கள் செய்யத் தவறிவிட்டோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேசிய ரீதியில் பலம் பொற்றிருக்கின்றது.

தற்போது முக்கியமான கால கட்டத்தில் இருக்கின்றோம். எதிர்காலத்தில் முக்கிய தீர்வை நோக்கி நகரவுள்ளோம். ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறலாம். எமது மக்களின் போராட்டம் நியாயமான போராட்டம். இதற்கு நீதி வழங்கப்பட வேண்டும் இதனை அங்கீகரிக்க வேண்டும். என சர்வதேச சமூகம் முயற்சிக்கின்றது.

எமது முஸ்லிம் சகோதரர்கள் எம்முடன் இணைந்து செயற்பட வேண்டும் - என்றார். (த-32-31)

### ரிப்பர்

யோடி பொலிஸில் சரணடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். நகரில் காங்கேசன்துறை வீதியில் நேற்றுச் சனிக்கிழமை பிற்பகல் 1.45 அளவில் இ[illegible] விபத்[illegible] இடம் பெற்றது. காங்கேசன்துறை வீதி வழியாகச் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிளை முந்திச் செல்ல முற்பட்டபோதே இந்த விபத் துச் சம்பவம் இடம் பெற் றதாகப் பொலிஸார் தெரிவித் தனர்.

நல்லூர்மூத்தவிநாயகர்கோவில் வீதிப் பகுதியைச் சேர்ந்த துரைராசா கோபிநாத் (வயது-31) என்ற மருத்துவரே உயிரிழந்தவராவார்.

யாழ்.பொலிஸார் சம்பவ இடத்தில் விசாரணைகளை மேற்கொண்ட னர். உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலம் யாழ். போதனா வைத்திய சாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (த-4-106).



கோண்டாவில் சிவபூமி சிறுவர்களுக்கான மன விருத்திப் பாடசாலையின் நவராத்திரி விழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் யாழ். இந்திய தூதரக பதில் துணைத் தூதுவர் ஆர். செல்வம் தம்பதிகள் மங்கல விளக்கேற்றுவதையும் சிவபூமி அறக்கட்டளை தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் உரையாற்றுவதையும் சிறுவர்களின் கலை நிகழ்வையும் காணலாம். (ஓ-7)





பூநகரி மத்திய கல்லூரி வணிக மாணவர்களின் வணிகச் சரம் (சரம்-3) நூல் வெளியீடு வணிக மாணவர் மன்றத் தலைவர் கு.சிந்துஜன் தலைமையில் இடம்பெற்றது.

நூலின் முதற் பிரதியை கிளிநாச்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.ஸ்ரீகுமரனிடம் இருந்து பூநகரி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் க.ரஜீவ் குமார் பெற்றுக் கொண்டார். நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா.விமலதாசன், பூநகரிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.தர்மரத்தினம், கிளிநொச்சி வலய ஆசிரிய ஆலோசகர் தி.சிவரூபன் ஆகியோரும் கலந்து கொண்டார். (ஓ-108)





யாழ். மாவட்ட சமூக சேவைகள் அலுவலராகக் கடமையாற்றி இளைப்பாறிய ஆ. ஞானவேலுக்கு கைதடி சாந்தி நிலையத்தினரால் பிரிவுபசார விழா அண்மையில் இல்ல கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டது.

இல்லப் பொறுப்பதிகாரி தி.கிருபாகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனப் பணிப்பாளர் வைத்திய நிபுணர் திருமதி கணேசமூர்த்தி வடமாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி ந.இன்பராஜ் உட்பட மாவட்ட பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் சமூக சேவைகள் அலுவலர்களும் வருகை தந்திருந்தனர். ஜெய்ப்பூர் நிறுவனப் பணிப்பாளர் பாராட்டுப் பத்திரத்தையும் சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி ந.இன்பராஜ் நினைவுப் பரிசையும் வழங்கிய போது. (ஓ-9)





டவர் மண்டப திரையரங்கு மன்றம் செயற்படுத்தும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ் மொழி மூலமான பாடசாலை மாணவர்களுக்கான குறுநாடகப் போட்டி (2013) கடந்த 10 ஆம் திகதி "சவ்சிரிபாய" கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டிகளில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்களும் பங்கு பற்றி பரிசில்களைப் பெற்றுக் கொண்டனர். (ஓ-10)






சாவகச்சேரி நகரப் பிரிவு கிராம அலுவலராகக் கடமையாற்றி இளைப்பாறிய வி.சிவசரணநாதனுக்கு நேற்று இடம்பெற்ற சேவை நயப்பு விழாவின் போது.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கண்துடைப்புகளால் காலத்தைக் கடத்தாதீர்

*காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் மற்றுமொரு அமர்வு கிளிநொச்சியில் நேற்று ஆரம்பமாகியது. நான்கு நாள்கள் இடம்பெறும் இந்த அமர்வில் 180 பேர் சாட்சியமளிக்கவுள்ளனர் என அறியமுடிகின்றது.*

*இலங்கையில் இதற்கு முன்னர் நியமிக்கப்பட்ட ஆணைக் குழுக்களுக்கு நேர்ந்தகதிகளை வரலாற்றில் திரும்பிப் பார்க்கும் போது ஆணைக்குழு என்றாலே நம்பிக்கையீனத்தின் அடையாளமாக பார்க்கப்படுகின்றநிலையில் காணாமற்போனோர் ஆணைக்குழு நாதியற்றுக்கிடக்கின்ற மக்களுக்கு விமோசனத்தைக் கொண்டுவருமா என்ற கேள்வி எழுகின்றது.*

*1823/42 வர்த்தமானி அறிவிப்பிற்கு அமைய 2013 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி காணாமற் போனோர் ஆணைக்குழு, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணாமற் போனோர் தொடர்பாக புல னாய்வு விசாரணைகளை மேற்கொள்ளும் நோக் கில் நியமிக்கப்பட்டது. பின்னர் இந்த ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்ட ஆணை போர்க்குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கும் வழி கோலும் வகையில் விரிவாக்கம் செய்யப்பட்டது. ஒரு வருடத்தையும் தாண்டி விட்டநிலையில் இந்த ஆணைக்குழுவின் மந்த கதியிலான செயற்பாடுகள் ஐயப்பாடுகளைத் தோற்றுவிப்பதாக அமைந்துள்ளன.*

*ஒரு வருடகாலத்தைப் பூர்த்திசெய்துவிட்ட இந்தக் காணாமற்போனோர் ஆணைக்குழுவிற்கு இதுவரையில் 19,471 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற பின்னர் கடந்த 9 மாதகாலப்பகுதியில் 23 நாள்கள் ஆணைக்குழு அதன் அமர்வுகளை நடத்தியிருந்ததுடன் அதில் 939 முறைப்பாடுகள் தொடர்பாகவே விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன. அதாவது மாதத்திற்கு மூன்று நாள்கள் என்ற சராசரியில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதன்போது சராசரியாக 41 முறைப்பாடுகள் அந்த நாள்களில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இந்த நிலையில் போனால் எஞ்சியுள்ள 18,532 முறைப்பாடுகளையும் விசாரிப்பதற்கு இன்னமும் 452 நாள்கள் ஆணைக்குழு அதன் அமர்வுகளை நடத்தியாகவேண்டும். தற்போதைய வேகத்தில் மாதத்தில் மூன்று நாள்களே அமர்வுகள் முன்னெடுக்கப்படும் நிலையில் எஞ்சியுள்ள முறைப்பாடுகளை விசாரிப்பதற்கு இன்னமும் 13 ஆண்டுகள் தேவைப்படும்.*


*ஆகமொத்தத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு, நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், அரசியல் தீர்வு ஆகிய விடயங்களில் தனது தற்போதைய நிலைப்பாட்டை பெரும் மாற்றங்களுக்கு உட்படுத்தி சீரிய நடவடிக்கைகளை துரித கதியில் முன்னெடுக்காவிட்டால் ஏனைய விட யங்களில் தமிழருக்கு நீதி தாமதிக்கப்பட்டு தட்டிக்கழிக்கப்படுவது போன்று காணாமற்போனோர் ஆணைக்குழுவிடம் விமோசனத்தை எதிர்பார்ப்பதும் கானல்நீராகும் என்ற முடிவிற்கே வரவேண்டியுள்ளது.*

*கடந்த புதன்கிழமையன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ போருக்குப் பின்னரான இலங்கை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையிலுள்ள சிலரின் தீய நோக்குடைய நிகழ்ச்சிநிரலுக்கு துரதிர்ஷ்டவசமாக பலியாகியுள்ளது என்றும் யுத்தம் முடிவடைந்த பின்னர் நாடு எட்டியுள்ள குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை மனித உரிமை சபை கணக்கிலெடுக்கவில்லை என்றும் சாடியிருந்தார். பக்கச்சார்பான வகையில் இலங்கை தீய சக்திகளால்இலக்குவைக்கப்படுவதாகவும்குற்றஞ்சாட்டியிருந்தார். ஜனாதிபதி, போருக்குப் பின்னரான முன்னேற்றங்கள் என எந்த முன்னேற்றங்களைச் சுட்டிக்காட்டுகின்றார் என்பது புதிராகவுள்ளது. உயிரோட்டமில்லாத கட்டடங்களையும் வீதிகளையும் விட்டுப் பார்த்தால் போரினால் மிக அதிகமாகப் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு என்ன முன்னேற்றம் கிட்டியுள்ளது என்பது கேள்விக்குரியதாகும்.*

*உண்மையாகவே அக்கறை கொள்ளப்படவேண்டிய விடயங்களில் இதயசுத்தியின்றி காணாமற்போனோர் ஆணைக்குழுவைப் போன்று கண்துடைப்புகளாலேயே காலங்கடத்துகின்ற போக்கையே அரசு கடைப்பிடிக்கின்றது. சர்வதேச அழுத்தங்களைச் சமாளிப்பதற்காக அவ்வப்போது வெளிவேசம் பூண்டு கவர்ந்திழுக்கும் அறிக்கைகளை விடுவதும் பின்னர் சர்வதேசக் கவனம் திசை திரும்பும் போது அலட்சியத்துடன் ஆக்ரோஷமாக நடந்துகொள்வதுமாக காலத்தைக் ஓட்டிக்கொண்டிருப்பதை உணர்ந்து கொள்ளலாம்.*

*இத்தருணத்தில் இலங்கையில் தமிழ் மக்களுக்குத் தேவைப்படுவது கவர்ந்திழுக்கும் அறிக்கைகளோ கண்துடைப்பு நாடகங்களோ அல்ல. மாறாக நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், அரசியல் தீர்வு ஆகிய விடயங்களில் காத்திரமான நடவடிக்கைகளே என்பதை உணர்ந்து அரசு செயற்படவேண்டியது அவசியமாகும். இதுவே நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கும்.*

# ஏமாற்று, பம்மாத்து இரண்டும் இலங்கைக்கு கைவந்த கலை



கந்தவனம் கோணேஸ்வரன்

நெருக்கடிகள் ஏற்படும்போது, விட்டுக்கொடுப்புகள் செய்து பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தயாராக இருப்பதுபோல் பாவனைபண்ணுவதும், நெருக்கடிகள் தளரும்போது முறுக்கிக்கொண்டு விதண்டாவாதக் கருத்துகளை உதிர்ப்பதுவும் இலங்கை அரசுக்கு வழக்கமாகிவிட்டது. வாக்குறுதிகளை வழங்கிவிட்டுச் சட்டென அவற்றை மறந்து, கொடுத்த வாக்குறுதிகளுக்கு நேர்மாறாகச் செயற்படுகின்ற பண்பு ஜனாதிபதிக்கே உரிய சிறப்பம்சமாகிப் போய்விட்டது.

### ஜனாதிபதியின் வாக்குறுதிகள்

2009இல் முள்ளிவாய்க்கால் அவலம் நிறைவேற்றப்பட்டதன்பின், தமக்கிருந்த தடைகள் நீங்கிவிட்டதாகவும் தமிழர்களுக்குரிய நியாயமான தீர்வொன்றை மிகவிரைவில் நடைமுறைப்படுத்தப்போவதாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ-மூனிடமே ஜனாதிபதி வாக்குறுதி வழங்கியிருந்தார். விடுதலைப்புலிகள் அழிப்பு என்ற போர்வையில் இடம்பெற்ற தமிழின அழிப்புக்கு உடந்தையாகவிருந்த அன்றைய பாரதப் பிரதமர் மன்மோகன் சிங்கிடமும் இவ்வாறான வாக்குறுதிகள் இலங்கை ஜனாதிபதியால் வழங்கப்பட்டிருந்தன.

வாக்குறுதிகளை வழங்கியவர் சாதாரணமானவரல்லர். இலங்கையின் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி. இலங்கையை விரல்நுனியில் வைத்துப் பந்தாடும் திறன்மிக்கவர் என்று அவரது ஆதரவாளர்களால் புகழப்படுபவர். இலங்கைச் சட்டங்களைக்கூட தனக்கிசைவாக ஏவல்செய்யவைக்கும் திறன்கொண்டவர் அவர். அதேபோல் வாக்குறுதிகளைப் பெற்றுக் கொண்டவர்களும் சாதாரணமானவர்களல்லர். ஒருவர், உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாட்டின் தலைவர், இலங்கையோடு ஒப்பிடும்போது பன்மடங்கு பலம் பொருந்திய இந்தியாவின் பிரதமர்.

அடுத்தவர், உலகநாடுகளால் உருவாக்கப்பட்ட சபையின் மிக உயர்ந்த பதவியிலிருப்பவர். சட்டப்படியும் நியாயப்படியும் உலக நாடுகளின் போக்குகளைத் தீர்மானிக்கவல்ல அதிகாரங்கொண்ட இராஜதந்திரி. அவரின் கருத்துகள் பதவிவழியாக உலகின் நியாயபூர்வமான கருத்துகளென அங்கீகாரம் பெறத்தக்கவை. ஆனால், இவர்கள் இருவரும் பல வருடங்களாக இலங்கை அரசால் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள். இதிலுள்ள சிறப்பு என்னவென்றால் அவர்களை ஏமாற்றிவிட்டு, அதற்கான நியாயங்களையும் இலங்கை அரசு தேடிவைத்துக்கொண்டிருப்பதுதான்.

### இலங்கையின் ஏமாற்று வேலைகள்

இலங்கை, உலகத் தலைவர்களைக்கூட ஏமாற்றத் தொடங்கிவிட்டது என்பதை உணர்ந்த பிறகுதான் ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கைக்கெதிரான செயற்பாடுகள் தொடங்கப்பட்டன. இச்செயற்பாடுகள் திடீரென்று எடுக்கப்பட்ட முடிவுகளின் பிரகாரம் தொடங்கப்பட்டவையல்ல. நிதானமாக ஆலோசித்து இலங்கை அரசை வேறுவகையில் வழிக்குக் கொண்டுவர முடியாது என்பதை உணர்ந்து சட்டப்படியும், ஜனநாயகப்படியுமே அவை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த மேற்கொள்ளல்கள்கூட மிகவும் மெதுவாகவும், இலங்கைக்குப் போதிய காலஅவகாசம் வழங்கப்பட்டுப் படிப்படியாகவுமே இறுக்கமான நிலைக்குக் கொண்டுவரப்பட்டன.

### ஐ.நாவின் குறைபாடுகள்

உலக நாடுகளின் நகர்வுகள் மெதுவாக இருந்ததாலோ என்னவோ இவற்றின் கடுமைகளை இலங்கை அரசு புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை. ஜனாதிபதி மாத்திரமன்றி, இலங்கையின் வெளியுறவு இராஜதந்திரிகள்கூட ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடுகளைக் குறைவாகவே மதிப்பிட்டார்கள். இந்தியாவுக்குச் சவால்விடுவதும், பிரித்தானிய, அமெரிக்க, கனேடிய இராஜதந்திரிகளை அலட்சியப்படுத்துவதும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பலத்தைக் குறைத்து மதிப்பிட்டு வீம்புபேசுவதும்தான் இலங்கையின் கடந்த ஐந்தாண்டுகால அரசியலாகக் காணப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அம்மையார் தமிழ்ப் பெண்ணாக இருந்த காரணத்தால் பால்நோக்கு ஏளனங்கள் செய்வதும் புலியென்று வர்ணிப்பதும் இலங்கை அரசுக்குச் சுவையான பொழுதுபோக்குகளாக இருந்தன. இவை உலகமட்டத்தில் இலங்கைக்கு அவப்பெயரை ஏற்படுத்துபவையாக இருந்தபோதிலும் உள்நாட்டு மட்டத்தில் அரச தலைவர் இனத்தின் நாயகனாக உருவகிக்கப்பட்டு பாமர மக்களின் வாக்குகளைப் பெறுகின்ற உத்தியாக மாறியிருந்தன.

### இரட்டை வேடம்

எனவே, இன்றையநிலையில் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையானது தென்னிலங்கையில் இடம்பெறுகின்ற பொதுக்கூட்டங்களிலும் மக்கள் சந்திப்புகளிலும் வெளிநாடுகளுக்குச் சவால்விட்டு, அதனை உள்நாட்டு வாக்குகளாக மாற்றிக்கொள்வது ஒருபுறமும், வெளிநாட்டுப் பத்திரிகைகளுக்கும் ஊடகங்களுக்கும் உள்நாட்டில் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஆவல்கொண்டிருப்பதுபோலக் காட்டிக்கொண்டிருப்பது மறுபுறமுமாக இருக்கத்தக்கதாக வகுக்கப்பட்டிருக்கிறதோ என எண்ணத் தோன்றுகிறது. வெளிநாட்டு இராஜதந்திர நகர்வுகளில் அனுபவம் பெற்றவரான தயான் ஜயதிலக்கவும் இலங்கையிடம் பொருத்தமான வெளியுறவுக் கொள்கையோ செயற்பாடுகளோ இல்லை என்று கூறியிருப்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

### இலங்கைக்கு எதிரான நடவடிக்கை

வெளியுறவுக்கொள்கைகள் சரியாக அமையாத காரணத்தால்தான் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளில் பெரும்பாலானவை இலங்கைக்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்கவேண்டியேற்பட்டதுடன், இன்று போர்க்குற்ற விசாரணைகள் இடம்பெறும் அளவுக்கு இலங்கையின் நிலைமையைச் சிக்கலாகவுமாக்கி வைத்திருக்கின்றன. தனக்கெதிரான சூழல் உருவாகத்தொடங்கும்போதே இலங்கை அரசு பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்குமானால் இன்றைய மோசமான நிலைமை தோன்றாமல் தடுக்கப்பட்டிருக்கலாம்.

தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கும் 27ஆவது மனித உரிமைகள் மாநாட்டில்கூட இலங்கை தன்தவறுகளை ஏற்றுக்கொண்டு அனுசரித்துப் போவதற்குத் தயாராக இருப்பதாகத் தெரியவில்லை. மாறாக, தவறுகள் எதுவும் செய்யாத புனிதரான தன்மீது ஏன் விசாரணைகள் இடம்பெறவேண்டும் என்றுதான் நியாயம் பேசிக்கொண்டிருக்கிறது.

எனினும்,போர்க்குற்ற விசாரணைகளின் முடிவு 2015 மார்ச்சில் இடம்பெறவுள்ள மனித உரிமைகள் மாநாட்டில் நிச்சயம் முன்வைக்கப்படலாம் என எதிர்பார்க்கலாம். இலங்கை போர்க்குற்றங்கள் புரிந்தமை உறுதிப்படுத்தப்பட்டால் அதன் பின்விளைவுகள் பாரதூரமானவையாகவே அமையும்.

கடந்த சில தசாப்தங்களை நோக்கும்போது இலங்கையின் ஏமாற்று மற்றும் பம்மாத்து செயற்பாடுகள் ஏராளம். இந்த இரண்டுமே எங்கள் நாட்டுத் தலைவர்களுக்கு கைவந்த கலை. இந்த நிலைமை நீடித்தால் நாட்டுக்கு பேராபத்து நிச்சயம்.

நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 186

# சிறுவர்களைக் காப்பது எப்படி?

## வீட்டு விபத்துக்களைத் தவிர்த்திடுவோம்

வீட்டிலே ஏற்படும் விபத்துக்களால், சிறுவர்கள் பாதிக்கப்படுவது உலகளாவிய ரீதியில் ஒரு பிரச்சினையாக இருந்து வருகின்றது. அனேகமான வீட்டு விபத்துக்கள் சிறுவர்களுக்கு ஒரு வயதின் பின்பே நிகழ்கின்றன. ஏனெனில் குறுநடைபோடும் குழந்தைகள் (Todflers) அனைத்தையும் ஆராயும் தன்மையும், வாயில் அதனையும் வைத்து கடிக்கும் இயல்பும் பெரியவர்கள் செய்வதைப் பார்த்து தாமும் அதேபோல் செய்யும் பழக்கமுள்ள குறும்புக்காரர்களாக இருப்பதேயாகும்.

### எவ்வாறான வீட்டு விபத்துக்கள் சிறுபிள்ளைகளுக்கு ஏற்படுகின்றன?

சிறுபிள்ளைகளுக்கு ஏற்படக்கூடிய வீட்டு விபத்துக்களில் மிகவும் பொதுவாகக் காணப்படக்கூடியவை பின்வருமாறு:-

1. தவறுதலாக, மண்ணெண்ணெய் போன்ற பெற்றோலியப் பொருள்கள், வீட்டில் காணப்படும் மருந்துப் பொருள்கள், நச்சுப் பதார்த்தங்கள் போன்றவற்றை உட்கொள்ளல்.
2. விளையாட்டுப் பொருள்களில் காணப்படும் சிறிய பகுதிகள், பேனை மூடி, நாணயக்குற்றிகள், சட்டை ஊசிகள், உணவுப்பொருள்களிலுள்ள கடினமான துணிக்கைகள் போன்றவற்றை விழுங்குதல்.
3. குப்பி விளக்கால் அல்லது சுடுதிரவங்கள் உடலில் பட்டால் ஏற்படும் எரிகாயங்கள்.
4. உயரமான பகுதிகளிலிருந்து விழுதல்.
5. பென்சில், பேனை அல்லது கத்திபோன்ற கூரிய பொருள்களுடன் விளையாடும் போது ஏற்படும் காயங்கள்.
6. பாதுகாப்பற்ற கிணறுகள், நீர்த் தொட்டிகள், நீர் நிலைகளில்தவறுதலாக விழுதல்.

வீட்டு விபத்துக்களால் பாதிப்படைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குழந்தைகளில் சில சம்பவங்கள் உதாரணமாகக் கீழே தரப்படுகின்றன.



**நிகழ்வு: 1**

இரண்டு வயதுச் சிறுவனுடன் கிராமப்புறத் தாய் மாலை வேளையில், அயல் வீட்டுக்குச் சென்று தனது சிநேகிதியுடன் அளவளாவிக் கொண்டிருந்தார். அவளது குறும்புக்காரப் பிள்ளை பலதையும் ஆராய்ந்து கொண்டு குடிசை வீட்டின் குசினிப் பக்கம் சென்று அங்கே நிலத்தில் வைக்கப்பட்ட குளிர்பானப் போத்தலை எடுத்து அதன் மூடி இறுக்கமாக மூடப்படாததால் அதிலுள்ள மண்ணெண்ணெயில் சிறிதளவு அருந்தி விடுகிறான். அதனால் அவனுக்குப் புரைக்கேறி இருமலும் வந்து கொண்டிருந்தது. உடனே அயல் வீட்டு அன்ரி தேங்காய்ப் பாலைப் பருக்கி வாந்தி எடுக்கச் செய்தார். வாந்தி எடுத்ததன் பின்னர் அந்தப் பிள்ளைக்குச் சுவாசிப்பதில் மேலும் சிரமம் ஏற்படவே உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றார்கள். அங்கு தகுந்த அதிதீவிர சிகிச்சைகள் அளிக்கப்பட்டு இரண்டு வாரங்களின் பின்னர் சிறுவன் வீடு சென்றான்.

### மேற்கூறிய நிகழ்விலிருந்து நாம் தெரிந்திருக்க வேண்டியவை எவை?

1. மண்ணெண்ணெய்போன்ற பெற்றோலியப் பொருள்களும் ஆபத்தானவை. அவற்றைப் பாதுகாப்பாகக் குழந்தைகளின் கைகளுக்கு எட்டாத இடத்தில் இறுக மூடி வைக்க வேண்டும்.
2. குளிர்பானப் போத்தல்களில் மண்ணெண்ணெய் போன்ற நச்சுப் பதார்த்தங்களைச் சேமித்தால் குழந்தைகள் அவற்றைக் குளிர்பானம் என நினைத்து தவறுதலாக அருந்தி விடலாம். எனவே இவற்றை அவற்றுக்கே உரிய பாதுகாப்பான போத்தல்களில் சேமிக்க வேண்டும்.
3. பெற்றோலியப் பொருள்களை அருந்தினால், ஒரு போதும் வாந்தியெடுக்க செய்யக் கூடாது. வாந்தி எடுக்கும் போது பெற்றோலியப் பொருள்கள் சுவாசப் பாதைக்குள் செல்ல அதிகம் வாய்ப்புண்டு. அதனால் நியூமோனியா ஏற்படலாம். எனவே பெற்றோர் குழந்தைக்கு வாந்தி எடுக்கச் செய்யாமல் உடனடியாக அருகிலுள்ள வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல வேண்டும்.

**நிகழ்வு:2**

தாயொருவர் தான் கச்சான் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது அதன் பருப்புக்களை உடைத்து தனது இரண்டு வயதுக்குழந்தைக்கும் கொடுத்துக் கொண்டிருந்தார். அதைச் சாப்பிட்டுக் கொண்டிருந்த குழந்தை திடீரென புரைக்கேறி இருமத் தொடங்கியதுடன் மூச்சுவிடவும் சிரமப்பட்டது. தாய் அயலவரின் துணையுடன் அருகிலுள்ள வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றார். அங்கு போதிய வசதிகள் இன்மையால் குழந்தையை பெரியாஸ்பத்திரிக்கு மாற்றினர். அங்கு குழந்தைக்குச் செயற்கைச் சுவாசம் அளிக்கப்பட்டதுடன் காது, மூக்கு, தொண்டை சிகிச்சை நிபுணரினால் சுவாசப் பாதையை அடைத்துக் கொண்டிருந்த கச்சான் துகளை எடுத்த பின் குழந்தை சுகமடைந்தது.

இந்த நிகழ்விலிருந்து எமக்குத் தெரிய வேண்டியவை

1. ஒருபோதும் மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு கடினமான சிறு துணிக்கைகளான உணவுப் பொருள்களை வழங்கக் கூடாது. அதேபோல் குழந்தைகளுடைய விளையாட்டுப் பொருள்களிலும் விழுங்கக் கூடிய இலகுவில் கழன்றுவிடக் கூடிய சிறு பொருள்கள் இருக்கக் கூடாது. மேலும் நாணயக் குற்றிகள், சிறிய ஊசிகள், பேனை மூடிகள் என்பவற்றையும் குழந்தைகள் விழுங்க அதிகம் வாய்ப்புண்டு. வீட்டிலுள்ள பெரியவர்கள் அவதானம்மாக இருப்பதன் மூலம் இது போன்ற அநாவசிய ஆபத்துக்களைத் தடுக்க முடியும்.
2. சிறு துணிக்கைகளான பிறபொருள்களைக் குழந்தைகள் விழுங்கினால், உடனடியாக அதற்கான முதலுதவியைச் செய்து பிறபொருளை வெளிய கற்றலாம். எனவே அது பற்றியும் பெரியவர்களுக்குத் தெரிந்திருப்பது நல்லது.



**நிகழ்வு: 3**

முதல் நாள் தான் தனது ஒரு வயதுப் பிறந்த நாளைக் கொண்டாடிய வன்னிப் பகுதி குழந்தை ஒன்று பிற்பகல் வேளையில் வீட்டினுள்ளே தாய் தந்தையருடன் விளையாடிக்கொண்டிருந்தது. தந்தை சிறிது நேரத்தில் அயர்ந்து தூங்கி விட்டார். தந்தை பிள்ளையை கவனிப்பார் என நினைத்து தாய் ஏதோ வேலையாக வீட்டின் பின்புறம் சென்று விட்டார். குழந்தை தாய் வெளியே சென்றதைக் காணாது அவரைத் தேடி வீட்டின் முற்றத்துக்குத் தத்தித் தத்தி சென்று வீட்டின் முன்னேயுள்ள பாதுகாப்புக் கட்டில்லாத மண் கிணற்றில் (துரவு) விழுந்து விட்டது. சில நிமிடங்களில் வந்த தாய் குழந்தையைக் காணாது தேடிப் பார்க்கையில் மண் கிணற்றினுள்ளே அது மிதந்து கொண்டிருந்தது. உடனடியாகக் குழந்தையை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றும் காப்பாற்ற முடியவில்லை.

### இந்த நிகழ்வு எமக்கு தெரிவிப்பது எவை?

1. குழந்தைகளை மிகவும் பாதுகாப்பாகக் கண்ணை இமைகாப்பது போல் பாதுகாக்க வேண்டியது பெற்றோரின் கடமையாகும்.
2. பாதுகாப்பற்ற கட்டில்லாத கிணறுகளுக்குப் பாதுகாப்புக் கட்டு அல்லது வேலி அமைக்க வேண்டும். அதேபோல் வீட்டு வளவினுள்ளே நீர் நிலைகள் இருப்பின் அதற்குப் பாதுகாப்பு வேலி அமைக்க வேண்டும்.
3. தகுந்த முதலுதவி முறைகளைப் பெரியவர்கள் தெரிந்திருப்பது நன்மை தரும்.

மேற்கூறியவை போன்ற முற்றிலும் தவிர்க்கக் கூடிய ஆபத்துக்களை வீட்டு விபத்துக்களைத் தகுந்த பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றின் முற்றிலும் தடுக்க முடியும். எனவே அனைவரும் சிறுவர்களுக்கு ஏற்படக்கூடிய வீட்டு விபத்துக்களைத் தடுக்கும் வழிமுறைகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.

மருத்துவர் ந.ஸ்ரீசரவணபவானந்தன்,
குழந்தை வைத்திய நிபுணர்,
யாழ். போதனா வைத்தியசாலை.


# முரசு கரைதல் சில நோய்களின் அறிகுறியா?

**முரசு கரைதல் ஆபத்தா?**

முரசு கரைதல் என்பது சில நோய்களுடைய அறிகுறியாகவும், சில நோய் நிலையாகவும் காணப்படலாம். அந்த வகையில் முரசினால் இரத்தம் வடிதல் என்பது வாய் முரசு தொடர்பான பிரச்சினையாகவும், குருதியுறையா நோய் , குருதிப் புற்றுநோய் மற்றும் குருதி அணுக்களின் பாதிப்பு நிலை மற்றும் டெங்கு போன்ற ஆபத்தான நிலைகளின் அறிகுறியாகவும் ஏற்படும்.

ஒருவரது நாளாந்த வாழ்க்கைச் செயற்பாடுகள், உணவுப் பழக்கவழக்கங்களும் இதில் செல்வாக்குச் செலுத்துகின்றன. பல் வைத்திய ஆலோசனைப்படி முறைப்படியான பல்துலக்கல் முறைமையை வழக்கமாக்கிக் கொள்ளல் வேண்டும். பல் துலக்கலில் கடினமான துலக்கல் முறைமைகள் மற்றும் பாரம்பரிய கரி, பற்பொடி போன்றவற்றின் பாவனையும் முரசைப் பாதிப்படையச் செய்யலாம். மேலும் உணவில் மேலதிகமான உப்பு, புளி பாவனை மற்றும் தவறான மருந்துப் பாவனைகளும் முரசு கரைதலை ஏற்படுத்தலாம்.

பல் வரிசையிலுள்ள பற்களின் பற்கறை நீக்கப்படும்போது இரத்தக் கசிவு ஏற்படுகின்றது. இது காலப் போக்கில் பல் ஈறு வீக்கம், வாய் துர்நாற்றம் மேலும் அழற்சி போன்ற நிலைகளுக்கு இட்டுச் செல்லலாம். தினமும் இரு தடவைகள் பல்துலக்கல் சரியான முறையில் செய்யப்பட வேண்டும்.



பற்களில் படிந்துள்ள கறைகள், சுண்ணாம்புப் படிவுகள் (tartar) போன்றவை கடினமாக் இரத்தக் கசிவுக்கு வழிவகுக்கலாம். கூடுதலாகப் பாதிப்புக்கள் தாடை எலும்பு நோய் மற்றும் தொடர்ச்சியான உறுத்தல்கள் புற்றுநோய் நிலைக்கும் இட்டுச் செல்லலாம்.

மேலும் கடினமான பல்துலக்கல் முறை, செயற்கைப் பற்களின் தவறான பொருத்தப்பாடு, பல் ஈறுகளில் ஏற்படும் தொற்றுக்கள், குருதி உறைதலுக்கு எதிரான மருந்துப் பாவனை (E.g: Aspirin, Wafarin) சில மருந்துகளில் பக்க விளைவுகள் (NSAIDs) விற்றமின் குறைபாடு போன்றனவும் காரணமாகின்றன.

மென்மையான பற் தூரிகைகளை பல் துலக்கலுக்குப் பயன்படுத்தல் மற்றும் உணவு உட்கொண்ட பின்னர் ஒவ்வொரு முறையும் பல்துலக்கல் வேண்டும். இல்லையேல் நன்றாக வாய் அலசிகொப்பளித்தல் வேண்டும். உணவுத் துகள்கள் இருந்து தொற்றுத் தன்மையை ஏற்படுத்தலாம். உப்புக் கலந்த நீரால் கொப்பளிப்பது சிறந்தது. குறைந்தது ஆறு மாதங்களுக்கு ஒரு முறையாவது பல் வைத்தியரைச் சந்தித்து அவரது வழிகாட்டலின்படி செயற்படுவது நல்லது. மேலும் அசிட், அல்க கோல் கலந்த வணிக ரீதியான பதார்த்தங்களின் பாவனை ஆபத்தை ஏற்படுத்தலாம்.

வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு போடுவதைத் தவிர்க்க வேண்டும். புகையிலைப் பாவனை, போதைப்பொருள் பாவனை, அதிக சூடான மற்றும் குளிர்மையான பானங்களை உட்கொள்வதையும் தவிர்க்க வேண்டும். சமபல உணவை உட்கொள்ள வேண்டும். எண்ணெய் கலந்த இடை உணவுகளை உட்கொள்ளலைத் தவிர்க்க வேண்டும். சிறிய இரத்தக்கசிவு ஏற்படின் வாய் அலசுவதைத் தவிர்த்து ஐஸ் பிரயோகிக்கலாம். கடுமையான இரத்தக்கசிவு ஏற்படின் வைத்திய ஆலோசனை பெறல் அவசியம். தொடர்ச்சியான இரத்தக் கசிவு உடலில் ஈமோகுளோபின் அளவைக் குறைத்து இரத்தச் சோகையை ஏற்படுத்தலாம். செயற்கைப் பற்கள் கட்டியிருப்பவர்கள் அது தொடர்பாகக் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

சரியான வாழ்க்கை முறை, உணவுப் பழக்க வழக்கங்கள், நாளாந்தச் செயற்பாடுகளைச் சரிவரச் செய்து வாய் சுத்தத்தையும் முரசு கரைதலையும் தவிர்க்கலாம்.


ப.பத்மநிருபன்
தாதிய உத்தியோகத்தர்
(சத்திரசிகிச்சைப் பிரிவு)
யாழ்.போதனா வைத்தியசாலை.

# மன்னாரில் கல்விக் கண்காட்சி நேற்று ஆரம்பம்









மன்னார் அல்-அஸ்ஹர் தேசிய பாடசாலையில் ஈ-ஸ்கோப்-142 எனும் தொனிப்பொருளிலான கல்விக் கண்காட்சி நேற்று சனிக்கிழமை ஆரம்பமாகியது. மன்னார் அல்-அஸ்ஹர் மகா வித்தியாலயம், தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டு முதலாவது வருடத்தை கடந்த நிலையில் இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை விருத்தி செய்து அவர்களின் திறன்களை வெளியுலகிற்கு கொண்டுவரும் நோக்கில் இக்கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் எம்.வை.மாஹீர் தெரிவித்தார்.

இந்தக் கண்காட்சியில் பாடசாலை மாணவர்களால் தயாரிக்கப்பட்ட பல்வேறு கைப்பணி பொருள்கள் காட்சிப் படுத்தப்பட்டிருந்தன. நேற்று ஆரம்பமான கண்காட்சி நாளை திங்கட் கிழமை வரை மூன்று தினங்கள் காலை 8.30 தொடக்கம் மாலை 5.30 வரை நடைபெறும். இந்தக் கண்காட்சியில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்களை கலந்துகொள்ளுமாறு பாடசாலை நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது. குறித்த கண்காட்சியில் மாணவர்களுக்கான கல்விக் கண்காட்சிகள், சிறுவர்களுக்கான களியாட்டங்கள், கண்களுக்கு விறு விறுப்பூட்டும் 3டி காட்சிகள், அதிரவைக்கும் இருட்டறைக்காட்சிகள், உலக அதிசயங்கள், மாயாஜாலங்கள் மற்றும் விஷப்பாம்புகளுடன் 12 வயது சிறுவனின் சாகசக்காட்சிகள் ஆகியவை காண்பிக்கப்பட்டு வருகின்றன.



நேற்றைய முதல் நாள் நிகழ்வு காலை 9.30 மணிக்கு ஆரம்ப மாகியது. குறித்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எம். சியான் கலந்து கொண்டார். இன்று ஞாயிறு இரண்டாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் றிசாத் பதியுதீனும், நாளை மூன்றாம் நாள் நிகழ்வில் மன்னார் பிரதேச செயலாளர் கேஎஸ்.வசந்தகுமாரும் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-56)

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**நாளை**

புரட்டாதி-13 திங்கட்கிழமை 29.09.2014
திதி: பஞ்சமி பி.ப.01.24 வரை
நட்சத்திரம்: அனுசம் மு.இ.10.25 வரை
சுபநேரம்: 12.02 - 01.32 வரை
இராகுகாலம்: 07.32-09.02 வரை

**மேடம்**: சவாலான வேலைகளையும் சர்வ சாதாரணமாக முடிப்பீர்கள். மூத்த சகோதர வழியில் உதவிகள் கிடைக்கும். வியர்பாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் எதிர் பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**இடபம்**: உறவினர், நண்பர்களின் வருகையால் வீட்டில் உற்சாகம் பொங்கும். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் உத்தியோகத்தில் உங்களின் புதிய முயற்சிகளை அதிகாரிகள் பாராட்டுவார்கள்.

**மிதுனம்**: நட்பு வழியில் நல்ல செய்தி கேட்பீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தை புரிந்து கொள்வீர்கள். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும்.

**கடகம்**: பிரச்சினைகளின் ஆணிவேரை கண்டறிவீர்கள். திடீர் பயணங்கள் உண்டு. வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் இலாபமடைவீர்கள். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

**சிங்கம்**: சொத்துப் பிரச்சினைக்கு சுமுக தீர்வு காண்பீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு பாராட்டுக் கிடைக்கும்.

**கன்னி**: எதிலும் அவசரப்பட வேண்டாம். பிற்பகல் முதல் குடும்பத்தில் அமைதி நிலவும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். உத்தியோகத்தில் வேலைச்சுமை குறையும்.

**துலாம்**:அநாவசிய பேச்சைத் தவிர்ப்பது நல்லது. அடுத்தவர்களை குறைகூறிக் கொண்டிருக்காமல் உங்களை மாற்றிக் கொள்ளப் பாருங்கள். நன்றி மறந்த சிலரை நினைத்து வருத்தமடைவீர்கள்.

**விருச்சிகம்**: சின்னச் சின்ன வேலைகளையும் அலைந்து முடிக்க வேண்டி வரும். உறவினர், நண்பர்களுடன் விரிசல்கள் வரக்கூடும். உத்தியோகத்தில் பணிகளைப் போராடி முடிக்க வேண்டி வரும்.

**தனுசு**: நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். நம்பிக்கைக்குரியவரை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பீர்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறன் அதிகரிக்கும்.

**மகரம்**: சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயற்படுவீர்கள். வியாபாரத்தில் போட்டிகளை எதிர்கொண்டு வெற்றி காண்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும்.

**கும்பம்**: வீண் பதற்றம் ஏற்படக் கூடும். சிலர் உங்களை நம்பி பெரிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். வியாபாரத்தில் இழந்ததை மீட்பீர்கள். உத்தியோகத்தில் மதிப்புக் கூடும்.

**மீனம்**: யதார்த்தமாக நீங்கள் பேசுவதைக் கூட தவறாகப் புரிந்து கொள்வார்கள். முன்கோபத்தால் பகை உண்டாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 8 | | | |
| 1 | | 5 | | 4 | 7 | | | 2 |
| 8 | | | 2 | | 5 | 4 | 9 | |
| | 6 | 3 | | 8 | | 2 | 5 | 4 |
| 5 | | | | | | | | 7 |
| 7 | 4 | | | 5 | | 3 | 1 | |
| | 1 | 9 | 4 | | | | | 8 |
| 6 | | | 8 | 1 | | 7 | | 3 |
| | | | 5 | | | | | |


### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 9 | 7 | 5 | 8 | 3 | 1 | 6 | 4 |
| 6 | 3 | 5 | 2 | 1 | 4 | 7 | 9 | 8 |
| 4 | 1 | 8 | 9 | 7 | 6 | 3 | 2 | 5 |
| 1 | 4 | 3 | 8 | 9 | 7 | 2 | 5 | 6 |
| 9 | 7 | 2 | 6 | 4 | 5 | 8 | 1 | 3 |
| 8 | 5 | 6 | 1 | 3 | 2 | 9 | 4 | 7 |
| 7 | 2 | 4 | 3 | 5 | 1 | 6 | 8 | 9 |
| 5 | 8 | 1 | 7 | 6 | 9 | 4 | 3 | 2 |
| 3 | 6 | 9 | 4 | 2 | 8 | 5 | 7 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Sri Lanka Telecom
ஒரே தேசம். ஒரே குரல்.



## WI-FI ரவுட்டர் இலவசம்*

*புதிய Web Family அல்லது அதியுயர் புறோட்பேன்ட் பக்கேஜ்களுக்கு

- புதிய Entrée, Web Starter, Web Pal, Student மற்றும் அபிமான புறோட்பேன்ட் பெக்கேஜ்களுக்காக Wi-Fi ரவுட்டர் ரூ.1,490/- விசேட விலையில்

# 50% வரை கழிவு

## SLT மெகாலைன் இணைப்பு கட்டணம்*

- மெகாலைன் Double Play (தொலைபேசி + புறோட்பேன்ட்) இணைப்பு கட்டணம் ரூ.3,500/-
- மெகாலைன் Triple Play (தொலைபேசி + புறோட்பேன்ட் + PEO TV) இணைப்பு கட்டணம் ரூ.8,000/-

*Web Family மற்றும் அதியுயர் புறோட்பேன்ட் பெக்கேஜ்களுக்கு உரியது




## 100 புதிய SLT SMART தொலைபேசிகளை வெல்லுங்கள்

- புதிய புறோட்பேன்ட் இணைப்புக்களை பெறுபவர்கள் அனைவரும் சீட்டிழுப்பிற்கு தகுதிபெறுவர்

## மேலும் பல சலுகைகள்

- புறோட்பேன்ட் பெக்கேஜை இலவசமாக தரமுயர்த்தலாம்
- முதல் 3 மாதங்களுக்கு Web Guard சேவை இலவசம் (புதிய மற்றும் தற்போதைய புறோட்பேன்ட் இணைப்புகளுக்கு)

அரச வரிகள் விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது

2014 ஒக்டோபர் 20 வரை மட்டுமே செல்லுபடியாகும்.

விரையுங்கள்! உங்கள் புதிய புறோட்பேன்ட் இணைப்பினைப் பெற்றுக்கொள்ள அருகிலுள்ள SLT பிரதேச காரியாலயம் அல்லது டெலிஷொப்பிற்கு விஜயம் செய்யுங்கள்.

1212 ஐ அழையுங்கள்
மேலதிக விபரங்களை அறிந்துகொள்ள www.slt.lk | Email: 1212@sltnet.lk | Web chat: www.slt.lk (My SLT→Chat with us) | Like us on

BROADBAND

PHOENIX O&M WP/GT/4188

CY16651

# கர்ப்பப்பைவாய் புற்றுநோய்க்கு சிகிச்சை பெற வருவோர் குறைவு

## சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில்

தென்மராட்சி, செப்.28
சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் கர்ப்பப்பைவாய் புற்றுநோயால் பாதிக்கப்படுவோருக்கான சிகிச்சைகள் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வருடங்களாக கிளினிக் இயங்கி வருகின்ற போதிலும் இங்கு சிகிச்சை பெற வருவோரின் தொகை குறைவாக உள்ளதாகத் தெரியவருகிறது.

குறித்த கிளினிக் 35 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு கர்ப்பப்பைவாயில் புற்றுநோய் ஏற்பட்டுள்ளதா என்பதை பரிசோதனை செய்து சிகிச்சையளிப்பதற்காக 2012ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட போதிலும் இங்கு சிகிச்சை பெற வருவோரின் எண்ணிக்கை குறைவாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கிளினிக்கில் இளவயதில் திருமணம் செய்த பெண்கள், பலதார திருமணம் செய்த பெண்கள் அதிக குழந்தைகள் பெற்றெடுத்த பெண்கள், பரம்பரையில் கர்ப்பப்பைவாய்ப் புற்று நோய் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் ஆகியோருக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

பிரதி வெள்ளிக்கிழமைகளில் பெண் மருத்துவர்களால் நடத்தப்படும் இந்தக் கிளினிக்கில் பெண்கள் வருகை தந்து ஆரம்ப கட்ட பரிசோதனையை மேற்கொண்டு வீடு செல்லலாம் என்றும் பரிசோதனை அறிக்கை கிடைத்ததும் தேவையிருப்பின் மேலதிக சிகிச்சையைப் பெறலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கர்ப்பப்பைவாயில் புற்றுநோய் ஏற்பட்டிருப்பது ஆரம்ப பரிசோதனையில் கண்டறியப்பட்டால் குண மாக்கமுடியும் என்றும் ஆரம்பத்தில் குணமாக்கத் தவறின் அது வயிற்றின் உட்பகுதிக்குள் பரவி கர்ப்பப்பையை அகற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது யாழ்.போதனா மருத்துவமனையில் புற்று நோய் தொடர்பாக கட்டிகளை அகற்றுவதற்கான சிகிச்சை நிபுணர் கடமையாற்றி வருவதாகவும் 35 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் அனைவரும் இந்தப் பரிசோதனைகளை மேற்கொள்வது நல்லது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (வ-9)




# நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட 1110பேர் புதிதாக இனங்காணல்

தென்மராட்சி, செப்.28
சாவகச்சேரி ஆதார மருத்துவமனை நீரிழிவு சிகிச்சை நிலையத்தின் பொது மருத்துவ நிபுணர் மற்றும் மருத்துவ அதிகாரிகளின் ஒத்து ழைப்புடன் கடந்த இரண்டு வருடங்களில் தென்மராட்சி பிரதேச கிராமப் புறங்களில் நடத்தப்பட்ட நீரிழிவு பரிசோதனை முகாமில் ஆயிரத்து 110 புதிய நீரிழிவு நோயாளர்கள் இனங்காணப்பட்டு மேலதிக சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றனர்.



தென்மராட்சி அபிவிருத்தி கழகத்தின் பிரிட்டன் கிளையி னர் மருத்துவமனை கட்டடம் ஒன்றில் கடந்த 2012 செப்ரெம்பர் மாதம் முதல் நீரிழிவு சிகிச்சை நிலையத்தை ஆரம்பித்து செயற்படுத்தி வருகின்றனர்.

குறித்த நிலையத்தின் ஊடாக பிரதேசத்தில் பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் மாதாந்தம் ஒவ்வொரு கிராமத்தில் என்ற அடிப்படையில் இலவச மருத்துவ பரிசோதனை முகாம்கள் பொது மருந்து நிபுணர் தீ.சிறிதரன் தலைமையில் கள குழுவினர் பரிசோதனைகளை மேற்கொண்டு வரு கின்றனர்.

கிராமங்களில் நடத்தப்பட்ட மருத்துவ பரிசோதனை முகாம்களில் இணங் காணப்பட்ட ஆயிரத்து 110 பேர் நீரிழிவு சிகிச்சைப் பிரிவில் உள்வாங்கப்பட்டு சிகிச்சைகள் பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

2012 செப்ரெம்பர் தொடக்கம் டிசெம்பர் வரையான காலப் பகுதியில் புதிய நீரிழிவு நோயாளர்களாக 158 பேரும் 2013 ஆம் ஆண்டு 593 பேரும் 2014 ஓகஸ்ட் வரை 359 பேரும் இவ்விதம் இனங்காணப்பட்டுள்ளதாக சிகிச்சை நிலைய புள்ளி விவரங்கள் மூலம் தெரிய வருகிறது. யாழ். போதனா மருத்துவமனையில் இயங்குவது போன்ற நீரிழிவு சிகிச்சை நிலையத்தை ஆரம்பிக்க யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் மேற்கொண்ட முயற்சியின் பயனாக சாவகச்சேரி மருத்துவமனையில் நீரிழிவு சிகிச்சை நிலையமொன்று ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சிகிச்சை நிலையத்தில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனை நீரிழிவு கிளினிக்குக்கு வரும் அனைத்து நோயாளர்களின் விவரங்களும் கணினி மயப்படுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (வ-9)



# கிளி.மாவட்ட முதியோர் அணி தேசிய நிலையில் 6 ஆம் இடம்

தேசிய நிலையிலான முதியோர்களுக்கான விநாடி வினாப் போட்டியில் கிளிநொச்சி மாவட்ட முதியோர் அணி ஆறாவது இடத்தைப் பெற்று வட மாகாணத்துக்கு பெருமை சேர்த்துள்ளது.

சமூக சேவைகள் அமைச்சின் தேசிய முதியோர் செயலகத்தினரால் இந்த வருடம் முதன் முறையாக பிரதேச செயலக ரீதியாக முதியோர்களுக்கு இடையில் மாவட்ட நிலையில் விநாடி வினாப்போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் மாவட்ட நிலையில் வெற்றி பெற்ற அணிகள் தேசிய நிலைப் போட்டிக்கு அழைக்கப்பட்டிருந்தன.

தேசிய நிலைப் போட்டிக்கு, நாட்டில் உள்ள 25 மாவட்டங்களின் அணிகள் கலந்து கொண்டன. முதல் மூன்று சுற்றுக்களில் முன்னேறி கிளிநொச்சி மாவட்ட அணி அரையிறுதிப் போட்டியில் கண்டி மாவட்ட அணியிடம் சொற்ப புள்ளிகளால் தோல்வியடைந்து ஆறாவது இடத்தைப் பெற்றது.

போட்டியில் முதலிடத்தை கம்பகா மாவட்டமும், இரண்டாமிடத்தை குருணாகல் மாவட்டமும், மூன்றாமிடத்தை கண்டி மாவட்டமும், பெற்றுக் கொண்டன. போட்டியில் தமிழ் மாவட்டங்களைச் சேர்ந்த அணிகள் கலந்து கொண்ட போதிலும் கிளிநொச்சி மாவட்ட அணி அரையிறுதிப் போட்டி வரை சென்றமை குறித்து மக்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். (வ-9)


# மனநிறைவான ஓய்வுக் காலம்



## உங்கள் ஓய்வுக்கால வாழ்க்கையை இன்றே திட்டமிட கொமர்ஷல் வங்கி வழங்கும் "Future Pensions Plan" ஓய்வூதியத் திட்டம்

- திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 75 வது வயது வரை சத்திர சிகிச்சை மற்றும் வைத்தியசாலை அனுமதிகளுக்கு ரூபா. 50,000 வரை வருடாந்த மருத்துவ காப்புறுதி இலவசம்
- ஓய்வூதிய தொகை பெறும் காலத்திற்குள் மாதாந்த ஓய்வூதியத் தொகைக்குச் சமமான வருடாந்தப் போனஸ் தொகை
- ஓய்வூதியத்தை இணைந்த ஓய்வூதியத் திட்டமாகவும் ஆரம்பிக்க முடியும். (இருவரும் 60 - 65 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்)
- துரதிஷ்டவசமான மரணத்தின் போது உங்கள் வாழ்க்கைத் துணைக்கு / உங்களால் நியமிக்கப்பட்ட ஒருவருக்கு ஓய்வூதியத்தின் கால எல்லை முடியும் வரை மாதாந்த ஓய்வூதியத் தொகையும், வருடாந்தப் போனஸ் தொகையும் வழங்கப்படும்
- 15, 20 அல்லது 25 வருடங்கள் வரை ஓய்வூதியம் பெறும் காலத்தை தெரிவு செய்யலாம்
- உங்கள் வைப்புக்கு 7% (வருடாந்த விளைவு வீதம் 7.22%) கவர்ச்சிகரமான வட்டி

**பின்வரும் 5 ஓய்வூதியத் திட்டங்களில் விரும்பியதைத் தெரிவு செய்யலாம்.**

| வயது | ஓய்வூதியத் திட்டம் |
|---|---|
| (A) 18 – 54 வயது | மாதாந்தம் சம அளவான தொகையை 55 வயது வரை வைப்புச் செய்து, 55 அல்லது 60 வயது முதல் ஓய்வூதியத்தைப் பெற ஆரம்பிக்கலாம். |
| (B) 18 – 54 வயது | ஒரே தடவையில் ஒரு தொகைப் பணத்தை வைப்புச் செய்து 55 அல்லது 60 வயது முதல் ஓய்வூதியத்தைப் பெற ஆரம்பிக்கலாம். |
| (C) 18 – 59 வயது | மாதாந்தம் சம அளவான தொகையை 60 வயது வரை வைப்புச் செய்து, 60 வயது முதல் ஓய்வூதியத்தைப் பெற ஆரம்பிக்கலாம். |
| (D) 55 – 60 வயது | ஒரே தடவையில் ஒரு தொகைப் பணத்தை வைப்புச் செய்து, அந்த மாதக் கடைசியிலிருந்து மாதாந்தம் ஓய்வூதியத்தைப் பெற ஆரம்பிக்கலாம். |
| (E) 60 – 65 வயது | ஒரே தடவையில் ஒரு தொகைப் பணத்தை வைப்புச் செய்து, அந்த மாதக் கடைசியிலிருந்து மாதாந்தம் ஓய்வூதியத்தைப் பெற ஆரம்பிக்கலாம். ([illegible]) |

COMMERCIAL BANK

Fitch ரேட்டிங் - AA(lka)
RAM ரேட்டிங் - RAM AA+/P1

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

+94 112 353 333 www.combank.lk






# திருநெல்வேலியில் நூலகம் செலான் வங்கியால் திறப்பு

யாழ்ப்பாணம், செப்.28

செலான் வங்கி தனது சமூக சேவை திட்டத்தின்கீழ் திருநெல்வேலி பரமேஸ்வரா வித்தியாலயத்தில் கடந்த புதன்கிழமை நூலகம் ஒன்றைத் திறந்து வைத்தது.

வித்தியாலய அதிபர் ந.விஜயசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் செலான் வங்கியின் பிராந்திய முகாமையாளர் எஸ்.சுரேஸ், யாழ்.முகாமையாளர் எஸ்.ஞானபண்டிதர் ஆகியோர் வங்கியின் இந்த சேவைத் திட்டத்தின் கீழ் 46 நூலகத்தைத் திறந்து வைத்ததுடன், பாடசாலை அதிபர், மாணவர் தலைவர்க்ளிடமும் நூலகத்துக்கான புதிய நூல்களையும் வழங்கினார்கள். இந்த நிகழ்வில் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மாணிக்கராஜா, எஸ்.வரதராஜா, கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.அகிலதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். (வ-7)

# கல்வி ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேறின தீர்மானங்கள் பல

திருகோணமலை, செப்.28


கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் இடம் பெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்தக் கூட்டத்துக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எம்.ஏ.புஸ்பகுமார தலைமை வகித்தார்.

மட்டக்களப்பு மத்திய கல்வி வலயத்தில் தகுந்த காரணங் கள் இல்லாது ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட தற்காலிக மற்றும் நிரந்தர இடமாற்றங்களை நடைமுறைப்படுத்துவதில்லை என்று இங்கு தீர்மானிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மத்திய கல்வி வலயத்தில் காணப்படுகின்ற பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான எம்.எஸ்.எஸ்.அமீர் அலி, எம்.எஸ்.சுபையிர் ஆகியோர் இந்தக் கூட்டத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

தேசிய பாடசாலைகளில் மேலதிகமாக உள்ள ஆசிரியர்களை ஆசிரிய வெற்றிடங்கள் காணப்படும் மாகாணப் பாடசாலைகளுக்கு இடமாற்றுவதெனவும் இங்கு முடிவுகள் எடுக்கப்பட்டன.

மேலும் பாடசாலைகளில் உள்ள மாணவர்களின் எண் ணிக்கையை மீளாய்வு செய்து அதற்கேற்றவாறு ஆசிரியர் ஆளணியை உருவாக்குவது என்றும், ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்ட பாடசாலைகள் மற்றும் அவற்றுடன் இணைந்த பாடசாலைகளின் ஆளணியை உருவாக்குதல் மத்திய மற்றும் வலய மட்டத்திலான கல்வி அலுவலகங்களின் கட்டட வேலைகளைப் பூர்த்தி செய்தல், பாடசாலை அதிபர்களுக்கான நியமனம், மூன்று கிலோ மீற்றர் தூர இடைவெளியில் பாடசாலைகளை அமைப்பதைத் தடை செய்தல் உட்படப் பல தீர்மானங்கள் இங்கு நிறைவேற்றப்பட்டன. (க)






# றிச்சர்ட் பீரிஸ் டயர் கம்பனியின் வருடாந்த விநியோகத்தர் ஒன்றுகூடல்

உறுதியான விநியோகத்தர் வலையமைப்பை கொண்டுள்ள றிச்சர்ட் பீரிஸ் டயர் கம்பனி, முழு நாட்டுக்கும் டயர்களை விநியோகிக்கக்கூடிய ஆற்றலை கொண்டுள்ளது. கம்பனியின் 1500க்கும் மேற்பட்ட உறுதியான விற்பனை முகவர்களிலிருந்து சிறந்த பெறுபேறுகளை பதிவு செய்திருந்தவர்கள் தெரிவு செய்யப்பட்டு, வஸ்கடுவ சிட்ரஸ் ஹோட்டலில் கௌரவிக்கப்பட்டிருந்தனர்.



இந்த முகவர்கள் தமக்குரிய விருதுகளை றிச்சர்ட் பீரிஸ் அன்ட் கம்பனி குழுமத்தின் பணிப்பாளர் பேராசிரியர் லக்ஷ்மன் ஆர் வட்டவல மற்றும் பொது முகாமையாளர் பிரதீப் சமரதுங்க ஆகியோரிடமிருந்து பெற்றுக் கொண்டனர்.

இந்த வருடாந்த விநியோகத்தர் ஒன்றுகூடல் நிகழ்வு, ரஜகமனே கௌரோத்தமச்சார (ராஜ பயணத்தின் கௌரவிப்பு) எனும் தொனிப்பொருளில் இடம்பெற்றது. இந்தியாவின் பிர்லா டயர் கம்பனியின் சர்வதேச விற்பனை பிரிவின் தலைமை அதிகாரி அஷிஷ் குமார் மற்றும் கொரியாவின் நெக்சன் டயர் கம்பனியின் ஆசியா (இந்தியா, இலங்கை, பூட்டான், நேபாளம், பங்களாதேஷ்) முகாமைத்துவ பணிப்பாளர் ஜே.கே. சொய் ஆகியோர் இந்நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

ரிடிரெடிங் பிரிவிலிருந்து ஐம்பத்து ஐந்து விற்பனை முகவர்கள் மற்றும் டயர் டிரேடிங் பிரிவிலிருந்து பத்து முகவர்களும் விருதுகளுக்காக தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

ரிடிரெடிங் பிரிவின் சிறந்த விநியோகத்தருக்கான விருதை (நாடு முழுவதையும் உள்ளடக்கி) திக்வெல்ல ஷாந்தி டயர் மார்ட் (பிரைவேற்) லிமிடெட் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் திருமதி. எச்.எம். ரி.ஜே ஷாந்திரட்ன பெற்றுக் கொண்டார். இரண்டாம் மற்றும் மூன்றாமிடங்களை முறையே ரம்புக்கன சிசிர டயர் ஹவுஸ் உரிமையாளர் டபிள்யு.ஏ. டபிள்யு.டபிள்யு சிசிரகுமார மற்றும் பலாங்கொட ஜயந்தி டயர் சென்ரர் உரிமையாளர் ஏ.பி. அம்பகஹாவத்த ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

இதுபோன்று, டயர் டிரேடிங் பிரிவிலிருந்து சிறந்த விநியோகத்தருக்கான விருதை பன்னல ஹிருனி டயர் ஹவுஸ் உரிமையாளர் ஐ ஏ கருணாதிலக பெற்றுக் கொண்டார்.

இரண்டாம் மற்றும் மூன்றாமிடங்களை முறையே அனுராதபுரம் ஒடோ டயர் வேய்ஸ் (பிரைவேற்) லிமிடெட் முகாமைத்துவ பணிப்பாளர் பி.ஏ.சுனில் பிரேமரட்ன மற்றும் திக்வெல்ல ஷாந்தி டயர் மார்ட் (பிரைவேற்) லிமிடெட் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் திருமதி. எச்.எம். ரி.ஜே ஷாந்திரட்ன ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

இந்த உயர் நிலை விருது வழங்கும் வைபவத்தில் மேலும் விநியோகத்தர்களுக்கு உபஹார அபியச, உபஹார கௌரவ மற்றும் கலாப அபிமானி போன்ற கௌரவிப்புகளும் வழங்கப்பட்டிருந்தன.

# அமெரிக்க வீசாக்களுக்கான வங்கியியல் பங்காளியாக டி.எவ்.சி.சி வர்தன வங்கி

குடியேற்றத்திற்கு அல்லாத ஐக்கிய அமெரிக்க வீசாக்களுக்கு இலங்கையில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் தமது கொடுப்பனவுகளை டி.எவ்.சி.சி வர்த்தன வங்கிக் கிளைகளின் ஊடாகச் செலுத்த வேண்டுமென கொழும்பிலுள்ள ஐக்கிய அமெரிக்கத் தூதரகம் அண்மையில் உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

இலங்கை மற்றும் மாலைதீவுக்கான ஐக்கிய அமெரிக்கத் தூதரகம் தற்போது புதியதோர் ஒன்லைன் வீசா நடைமுறைக்கு மாறுகின்றது.

வீசா வழங்கும் செயற்பாட்டை மேலும் வசதியாகவும் இலகுவாகவும் மேற்கொள்வதே இதன் நோக்கமாகும்.

இதன்படி, விண்ணப்பதாரர்கள்தமது குடியேற்றத்திற்கு அல்லாத ஐக்கிய அமெரிக்க வீசா விண்ணப்பப் படிவத்தை இணையத்தளம் ஊடாக நிரப்பியதும், வீசாவுக்கான கட்டணங்களை எந்தவொரு உள்நாட்டு டி.வி.பி கிளையிலும் வைப்புச் செய்யலாம்.

அநேகமான டி.வி.பி கிளைகள் சனிக்கிழமை உட்பட வாரத்தின் ஆறு நாள்களும் திறந்திருக்கும். எனவே, வீசா விண்ணப்பதாரர்கள் தமது கொடுப்பனவுகளை இலகுவாகவும் வசதியாகவும் செலுத்த முடியும்.

DFCC
வர்தன் வங்கி
உங்களுக்கு அதிநட்புறவான வங்கி

டி.எவ்.சி.சி வர்தன வங்கியின் பிரதம தொழில்நுட்ப மற்றும் சேவை அதிகாரி அச்சிந்த ஹேவாநாயக்க இது பற்றித் தகவல் தருகையில்,

குடியேற்றத்திற்கு அல்லாத ஐக்கிய அமெரிக்க வீசாக்களுக்கான கொடுப்பனவுகளைக் கையேற்பதற்கு டி.வி.பி சகல வசதிகளையும் கொண்டுள்ளது. இக் கொடுப்பனவைச் செலுத்துவதற்காக எமது டி.வி.பி கிளையொன்றிற்கு வருகைதருபவர்கள் ஒருசில நிமிடங்களில் தமது கொடுக்கல் வாங்கலை முடித்துக்கொள்ளலாம் என்று கூறினார்.

டி.எவ்.சி.சி வர்தன வங்கி இலங்கையின் பல பகுதிகளிலும் அமைந்துள்ள 137 கிளைகளை உள்ளடக்கிய பரந்த வலையமைப்பைக் கொண்டுள்ளது.


**டி.எவ்.சி.சி வர்தன வங்கி இலங்கையின் பல பகுதிகளிலும் அமைந்துள்ள 137 கிளைகளை உள்ளடக்கிய பரந்த வலையமைப்பைக் கொண்டுள்ளது.**

பல்வேறு மட்டங்களைச் சேர்ந்த வாடிக்கையாளர்களுக்கு தரமுயர்ந்த சேவைகளை விரைவாகவும் நட்புறவுடனும் வழங்குவதற்கு வங்கி தன்னை அர்ப்பணித்துள்ளது.

சிறந்த ஆற்றலுக்கும் உயர்ந்த தொழில் நிபுணத்துவத்திற்கும் பிரசித்தி பெற்ற டி.வி.பி இந்த நாட்டின் இளைய வங்கிகளில் ஒன்றாக இருந்தபோதிலும், உயிர்த்துடிப்பு மிக்க ஒரு வர்த்தக வங்கியாக விளங்குகிறது. (த)



சிறுவர்களுக்கான சிசு உதான சேமிப்புக் கணக்கில் அதிக தொகையை சேர்த்துக் கொண்ட பாடசாலை மாணவியான செல்வி பிருதுவி குகனுக்குச் சுன்னாகம் மக்கள் வங்கிக் கிளையினால் சைக்கிள் பரிசாக வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் மாணவியுடன் சுன்னாகம் மக்கள் வங்கி முகாமையாளர் ப.பார்த்திபன் மற்றும் வங்கி ஊழியர்கள் படத்தில் உள்ளனர். (த-86)



செலிங்கோ ஆயுள்காப்புறுதி நிறுவனத்தின் நடப்பு அரையாண்டு விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் நடந்தது. நடப்பு அரையாண்டின் சிறந்தகிளையாக நெல்லியடி செலிங்கோ லைப் கிளை தெரிவு செய்யப்பட்டுள்ளது. நாடளாவிய ரீதியில் செலிங்கோ லைப் கிளைகளுக்கிடையிலான தெரிவில் நெல்லியடி கிளை இந்த விருதை பெற்றுக் கொண்டது.

கடந்த 22.08.2014 அன்று கண்டியின் அமையா ஹில்ஸ் நட்சத்திர விடுதியில் விருது வழங்கும் நிகழ்வு நடந்தது. நாடளாவிய செலிங்கோ லைப் கிளைகளின் மத்தியிலிருந்து தேர்வுசெய்யப்பட்ட நெல்லியடி கிளைக்கு விருது வழங்கப்பட்டது. செலிங்கோ லைப்பின் நிர்வாக முகாமையாளர் ஆர்.ரங்கநாதன் பரிசில் வழங்கினார். (த)

# ஜோன்சன் அன்ட் ஜோன்சன் உற்பத்தி ஆலை இலங்கையில்

இலங்கையில் அதிகரித்துச் செல்லும் ஜோன்சன் அன்ட் ஜோன்சன் தயாரிப்புகளுக்கான கேள்வியை நிவர்த்தி செய்யும் வகையில் இலங்கையில் உற்பத்தி ஆலை ஒன்றை நிறுவ திட்டமிட்டுள்ளதாக நிறுவனத்தின் இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான முகாமையாளர் வருண் தாஸ் தெரிவித்தார்.

தாம் தற்போது முதலீட்டு நிலையில் காணப்படுவதாகவும், இலங்கையில் உற்பத்தி ஆலை ஒன்றை நிறுவுவதற்கு அதிகளவு வாய்ப்புகள் காணப்படுவதாகவும், முதற்கட்டமாக சவர்க்கார உற்பத்தி தொடர்பில் கவனம் செலுத்தவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார். (த)

# ஒடெல் தலைவராக அசோக



வியாபாரத்துறையின் முன்னோடியாக திகழும் அசோக பத்திரகே, ஒடெல் நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ளார்.

ஒடெல் நிறுவனத்தின் 45 வீதமான பங்குகளை 2.7 பில்லியன் ரூபாவுக்கு சொஃப்ட் லொஜிக் ஹோல்டிங்ஸ் கொள்வனவு செய்ததை தொடர்ந்து இந்தப் பொறுப்பை இவர் ஏற்றுள்ளார்.

செப்டெம்பர் மாதம் 22ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனத்தை அவர் ஏற்றுள்ளார். அத்துடன் ஒடெல் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் தாபகரான ஒடாரா குணவர்தன தற்போதும் இயங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

# புதிய சீருடைக்கு அனுமதித்தால் மீண்டும் வெடிக்கும் போராட்டம்

## குடும்பநல சுகாதார சேவை மாதுமார் சங்க பொதுச் செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு, செப்.28

குடும்பநல சுகாதார சேவை மாதுமார் தொடர்பாக முன் வைக்கப்பட்டுள்ள புதிய உத்தியோக பூர்வ சீருடைக் கான யோசனைக்கு சுகாதார அமைச்சின் சில உயர் மட்ட அதிகாரிகள் அனுமதி வழங்கு வார்களானால் அதன் மூலம் மீண்டும் தாதியர், குடும்ப நல சுகாதார மாதுமார்களுக்கு இடையே போராட்டம் ஏற்பட வழி ஏற்படும் என்று குடும்ப நல சுகாதார சேவை மாது மார் சங்கத்தின் பொதுச் செய லாளரான திருமதி குசுமா டயஸ் தெரிவித்துள்ளார்.

1986 ஆம் ஆண்டில் குடும்ப நல சுகாதார சேவை மாது மார் தொடர்பாக கபிலநிற சட்டைக் கொலருடனான சீருடை அனுமதிக்கப்பட்டு அந்தச் சீருடையே இன்று வரையில் பயன்பாட்டில் இருப் பதாகவும் தெரிவித்த குசுமா டயஸ், அதற்குப் பதிலாக பெண் தாதிய உத்தியோகத்தர்கள் அணியும் சீருடையின் கோட் கொலருடனான புதிய சீரு டையை குடும்பநல சுகாதார மாதுமார்களுக்கு தொடர்பாக சில தொழிற்சங்கங்கள் கோரி யுள்ளன.

> “ பெண் தாதிய உத்தியோகத்தர்கள் அணியும் சீருடையின் கோட் கொலருடனான புதிய சீருடையை குடும்பநல சுகாதார மாதுமார்களுக்கு தொடர்பாக சில தொழிற்சங்கங்கள் கோரியுள்ளன.

தொழிற்சங்கங்களுக்குச் சார்பாகச் செயற்படும் அமைச் சின் சில உயரதிகாரிகள் செய லாளரின் அறிவுறுத்தல் இன்றி அதற்கு அனுமதியைப் பெற்றுக் கொடுக்க முனைவது நிறுத்தப்பட வேண்டுமென வும் அத்தகைய செயற்பாடு களைக் கண்டிப்பதோடு அதற்கு எதிர்ப்பைத் தெரிவிப் பதாகவும் குசு மாடயஸ் தெரி வித்துள்ளார்.

தான்தோன்றித்தனமாகச் செயற்பட்டு தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு வழி சமைத்து குடும்ப நல சுகாதார சேவை மாதுமாரை ஏமாற்றி வரும் சில தொழிற் சங்கங்கள் இந்தச் சீருடை விடயத்தைப் பயன்படுத்தி தாதியர், சுகாதார மாதுமார் இடையே மோதலை ஏற்படுத்துவதற்கு ஆயத்த மாகி வருவது தெரிய வந் துள்ளது.

குடும்ப நல சுகாதார சேவை யில் நிலவும் உண்மையான பிரச்சினைகளுக்காகக் குரல் கொடுக்கும் தொழிற்சங்கங் களுடன் நிபந்தனைகள் இன் றிக் கை கோர்த்துச் செயற் படத் தமது சங்கம் தயாராக உள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (வ-22)

# 68 குடும்பங்களுக்கு உ.கிழங்கு விநியோகம்

## நல்லூர் பிரதேச செயலர் பிரிவில்



நல்லூர் பிரதேச செயலக பிரிவில் உள்ள வறட்சியால் பாதிக் கப்பட்ட 68 குடும்பங்களுக்கு செவ்வாய்க்கிழமை நல்லூர் பிரதேச செயலகத்தில் வைத்து ஒரு குடும்பத்துக்கு தலா 5 கிலோ வீதம் உருளைக்கிழங்குகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன், நல்லூர் பிரதேச சபை எதிரணித் தலைவர் அ.ரவீந் திரதாஸ் ஆகியோர் கலந்து கொண்டு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான கிழங்குப் பொதிகளை வழங்கினார்கள். (வ-7)



# அஞ்சல் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு செயற்பாடுகள்

யாழ்ப்பாணம், செப்.28

உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு கோப்பாயில் அஞ்சல் தொடர்பான விழிப்புணர்வு நடமாடும் செயற் பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

கோப்பாய் அஞ்சலகத்தால் இந்த விழிப்புணர்வுச் செயற் பாடுகள் கடந்த செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்டன.

கோப்பாய் மற்றும் யாழ். பிரதம தபாலக பணியாளர்கள் இணைந்து மேற்கொண்ட இந்த அஞ்சல் தொடர்பான விழிப்புணர்வு நடமாடும் செயற்பாடுகளின்போது அஞ்சல் சேவைகளும் உடனுக்குடன் மேற்கொள்ளப்பட்டன.

குறிப்பாக மின்சாரக் கட்டணம் அறவிடுதல், தபாலக தேசிய சேமிப்பு வங்கிக்கான சேவை கள் மற்றும் அஞ்சல் தொடர் பான நடவடிக்கைகள் போன்றவை இதன்போது இடம் பெற்றன.

அதனை விட உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு தபாலக பணி யாளர்களால் சிரமதான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப் படவுள்ளன. (வ-17)


இளம் வயதில் ஏற்படும் நரை மற்றும் முடியுதிர்தலை தடுக்க கைகண்ட மருத்துவ தீர்வு



மென்மையான வாசனையூட்டிய

LINK NATURAL அகாலபலித இளநரை, முடியுதிர்தலை தடுப்பதற்காக கைகண்ட ஆயுர்வேத மருத்துவ தைலம்

இளநரை, முடியுதிர்தல் போன்றவற்றை தடுப்பதற்காக,
ஆயிரமாயிரம் ஆண்டுகளாகப் பாவித்து நிரூபிக்கப்பட்ட அதிவிஷேட ஆயுர்வேத செயன்முறைக்கமைய,
விஞ்ஞான முறைப்படி நவீன தொழிநுட்பத்தைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.




LINK NATURAL லிங்க் நெச்சுரல் புரொடக்ஸ் தனியார் நிறுவனம் சீ.ஐ.சீ. இல்லம் 199, கிவ் வீதி, கொழும்பு 02. தொ.பே.எண். : 011-2409294 மின்அஞ்சல் : info@linknaturalproducts.com இணையம் : www.linknaturalproducts.com

ஒவ்வொரு மாதமும் **போனஸ் வட்டியை** வழங்கும் சேமிப்புக் கணக்குகளுக்குள் சிறந்த சேமிப்புக் கணக்கு

Sampath DOUBLE S சேமிப்புக் கணக்கு



அன்று முதல் இன்று வரை இடைவிடாமல் உங்களுக்கு ஒவ்வொரு மாதமும் வட்டிக்கு மேலதிக வட்டியை வழங்குவது **சம்பத் டபிள் S** சேமிப்புக் கணக்கு மட்டுமே. இன்றே **சம்பத் டபிள் S** சேமிப்புக் கணக்கை ஆரம்பித்து நீங்களும் ஒவ்வொரு மாதமும் போனஸ் பெற்றுக்கொள்ளுங்கள்.

சம்பத் டபள் S சேமிப்புக் கணக்கில் சேமிக்கும் உங்களுக்கு போனஸ் வட்டிக்கு மேலதிகமாக கிடைக்கும் நன்மைகள்:

- கணக்கினை ஆரம்பித்த உடனே செயற்படுத்தப்பட்ட விஸா டெபிட் கார்ட் ஒன்று வழங்கப்படும். *
- விஸா டெபிட் கார்ட் இல்லையென்றாலும் அவசர தேவைகளின்போது Cardless Cash சேவையூடாக எந்தவொரு சம்பத் ATM இயந்திரத்திலும் பணம் பெற்றுக்கொள்ளலாம்.
- துரிதகதியில் விஸ்தரிக்கப்பட்டு வரும் வங்கிக் கிளை மற்றும் ATM வலையமைப்புக்கள்.
- கணக்கில் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்களை உடனுக்குடன் அறிந்துகொள்ள SMS Alertz வசதி. (கோரிக்கையிடும் பட்சத்தில்)
- இவை தவிர உங்களுக்கு சௌகரியமளிக்க ஒன்லைன் வங்கிச் சேவை உட்பட மேலும் பல சலுகைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

இன்றே 500/- ரூபாவை வைப்புச் செய்து **சம்பத் டபிள் S** சேமிப்புக் கணக்கொன்றை ஆரம்பியுங்கள்.

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

find us on

Sampath Bank Fitch Ratings AA-(lka) 0112 30 30 50 www.sampath.lk


SINGER
Tefal Prestige KENWOOD SINGER SISIL Moulinex BEKO KRUPS
SISIL SL-4MIXGR Mixer Grinder ரூ. 7,699/-
SINGER KAEASYBLEN Blender ரூ. 4,999/-
SISIL SL-SHMS949 Bowl Mixer ரூ. 4,999/-
SINGER KA-SKA3002 Food Processor ரூ. 8,499/-
MADE IN FRANCE
Moulinex MXDD100141 Stick Mixer ரூ. 3,699/-
KENWOOD KN-JE680 Juicer ரூ. 12,999/-
KENWOOD KN-JE280 Citrus Press ரூ. 3,499/-
SINGER Prisma Jug Kettles ரூ. 1,499/- முதல்
KA-PRISMA1.7SS
KA-PRISMA-1.7
KA-PRISMA-1.2
அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி-சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற தர்மலிங்கத்தின் மனைவியும் புஸ்பகாந்தியின் பாசமிகு தாயாரும் வசந்தன்(ஆசிரியர்-வவுனியா), வதனி, சுதன் (சமூக சேவை உத்தியோகத்தர்- பிரதேச செயலகம் திருகோணமலை), சுகந்தினி, தீபா(ஆசிரியை-யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), இராஜேஸ்வரன், சசிகலா, சுகுணா, சுரேஸ்குமார் (மின்இணைப்பாளர்), இராஜேஸ்வரன்(ஆசிரியர் -கொக்குவில் இந்துக்கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியும் வத்சலா, லக்சியா, துளசி, அபிஷா, செந்தூரன், வினோத், கார்த்திகாயினி, ஆர்த்திகா, அனுவராகன், பிருந்திகா, பவிசாந், மதுராகவன், தேருஜா ஆகியோரின் பூட்டியுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(28.09.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மீணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

55/3 விளையாட்டரங்க வீதி ,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம். (52669)(08) தகவல் : குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### அண்ணாமலை வேலுப்பிள்ளை தேவராஜா

(Topaz Beach Hotel உரிமையாளர்)



காரைநகர் வேதரடைப்பைப் பிறப்பிடமாகவும் இல.2, முத்துமாரி அம்மன் வீதி, நீர்கொழும்பு, மகேச்சிக்கடையை வசிப்பிடமாகவும் கொண்ட அண்ணாமலை வேலுப்பிள்ளை தேவராஜா நேற்று (27.09.2014) சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அண்ணாமலை வேலுப்பிள்ளை-சின்னகுட்டி தம்பதியரின் அன்பு மகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜெகநாதன் சற்குணராஜா, பவானி ஆகியோரின் அன்புத் தந்தையும், மாலதி, தர்மவதனி ஆகியோரின் அன்பு மாமனும், ரமேஷ் ராஜா, அருண், ஓஷினி, லவண்யா, ரிஷி ஆகியோரின் அன்பு பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.09.2014) திங்கட்கிழமை பி.ப 3.00 மணிக்கு அவரது இல்லத்திலும் (இல.2, முத்துமாரி அம்மன் வீதி, நீர்கொழும்பு) தகனக்கிரியைகள் மாலை 4.00 மணிக்கு நீர்கொழும்பு பொது மயானத்திலும் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P: 0777 302 780,
0777 580 251. (52684) (10) தகவல்: பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### திருமதி உலகேஸ்வரி(கிளி) வாமதேவன்



யாழ், வேலணை மேற்கு 6ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் இல 309 உதயநகர் கிழக்கு கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி உலகேஸ்வரி வாமதேவன் அவர்கள் (27.09.2014) சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பேரம்பலம் செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் சின்னத்துரை சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும் வாமதேவன் அவர்களின் அன்பு மனைவியும், சுபாகரன்(சிவா-பிரான்ஸ்), காலஞ்சென்ற சுதர்சன் ,மற்றும் சுதன்(பிரான்ஸ்), காலஞ்சென்ற சுகந்தன் , மற்றும் சுகிர்தா(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் சுஜிதா(பிரான்ஸ்), காலஞ்சென்ற ஜெயராணி மற்றும் ரவிக்குமார் (ரவி-பிரான்ஸ்), கஜா(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான தனலட்சுமி(பூபதி), தணிகாசலம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் செல்வரட்ணம்(பயில்வான்) லீலாவதி(சிந்தா), துரைசிங்கம்(துரை), காலஞ்சென்ற கோபால் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் சானுஜா, சந்தோஸ், சயானி, சாருஜன், சங்கீத்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்க்கியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் (29.09.2014) திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக் காக கிளிநொச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கணவர்-0245610210,
மகன் சிவா-0033148065255, 0033712541896,
மகன்சுதன்-0033753538103, மருமகன் ரவி-0033751048149

தகவல் : குடும்பத்தினர் (52668)(08)

# தொடர்ச்சிகள்

## ஜெயலலிதா

நீதிமன்ற சட்டத்தரணி பவானி. சொத்துக் குவிப்பு வழக்கில் ஜெயலலிதா மீதான அனைத்து குற்றச்சாட்டுகளும் நிரூபிக்கப்பட்டுள்ளன. மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின்படி ஜெயலலிதா எம்.எல்.ஏ. பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்யப் படுகிறார். அவரது முதல்வர் பதவியையும் இழக்கிறார். தீர்ப்பையடுத்து முதல்வர் ஜெயலலிதாவின் காரில் இருந்து தேசியக்கொடி அகற்றப்பட்டது. அவருக்கான இசட் பிளஸ் பாதுகாப்பும் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது - என்றார்.

**வழக்கு பின்னணி**

கடந்த 1991 - 96 காலக்கட்டத்தில் தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதா தனது வருமானத்திற்கு அதிகமாக ரூ.66 கோடியே 65 லட்சத்து 20 ஆயிரத்து 395.59 சொத்து குவித்ததாக அப்போதைய ஜனதா கட்சி தலைவர் சுப்பிரமணிய சுவாமி கடந்த 14.06.1996 அன்று சென்னை மாநகர அமர்வு நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்தார். 27.06.1996 அன்று அவரது முறைப்பாட்டை விசாரிக்குமாறு தமிழக இலஞ்ச ஒழிப்புத்துறைக்கு சென்னை மாநகர அமர்வு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இவ்வழக்கை விசாரிக்க தமிழக இலஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரி நல்லம்ம நாயுடு தலைமையில் 15 காவல் ஆய்வாளர்கள் விசாரணை அதிகாரிகளாக நியமிக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன் ஆகியோர் இவ்வழக்கில் குற்றவாளிகளாக சேர்க்கப்பட்டனர். சென்னை சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த இவ்வழக்கில் முதற்கட்ட விசாரணை, குற்றப்பத்திரிகை தாக்கல், சாட்சிகள் விசாரணை ஆகியவை 2003 ஆம் ஆண்டு வரை நடைபெற்றது.

தி.மு.க. பொதுச் செயலாளர் க.அன்பழகனின் மனுவைத் தொடர்ந்து உச்ச நீதிமன்றம் கடந்த 2003 ஆம் ஆண்டு நவம்பர் 18 ஆம் திகதி இவ்வழக்கை பெங்களூருக்கு மாற்றி உத்தரவிட்டது. அதனைத் தொடர்ந்து தமிழில் இருந்த ஆவணங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தல், பிறழ் சாட்சிகளின் விசாரணை, குறுக்கு விசாரணை, குற்றம்சாட்டப்பட்டவர்களின் வாக்குமூலம் பதிவு செய்தல் மற்றும் இறுதிவாதம் ஆகியவை கடந்த 11 ஆண்டுகளாக நடைபெற்று வந்தன.

வழக்கு தொடர்பான அனைத்து விசாரணைகளும் கடந்த ஒகஸ்ட் 28 ஆம் திகதி நிறைவடைந்ததால், செப்டம்பர் 20 ஆம் திகதி தீர்ப்பு வெளியாகும் என சிறப்பு நீதிபதி ஜோன் மைக்கேல் டி'குன்ஹா உத்தரவிட்டார்.

இதனிடையே இசட் பிளஸ் பாதுகாப்பு பிரிவில் இருக்கும் ஜெயலலிதா தனக்கு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று கோரியதால் பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் பரப்பன அக்ரஹாரா மத்திய சிறைச்சாலை வளாகத்தில் உள்ள காந்தி பவனுக்கு மாற்றப் பட்டது.

**எந்தெந்த பிரிவுகளில் வழக்கு**

சொத்து குவிப்பு வழக்கில் ஜெயலலிதா மீது அவர் முதல்வர் ஆவதற்கு முன்பாக (01-07-1991 இற்கு முன்பு) அவருடைய சொத்து மதிப்பு ரூபா 2 கோடியே ஒரு லட்சத்து 83 ஆயிரத்து 956.53 ஆகும். ஆனால் வழக்கு காலத்திற்கு பிறகு (01-07-1991 முதல் 30-4-1996 வரை) ரூ.66 கோடியே 65 இலட்சத்து 20 ஆயிரத்து 395.59 ஆக சொத்து அதிகரித்துள்ளது.

எனவே ஜெயலலிதா தனது அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி வருமானத்துக்கு அதிகமாக சொத்து குவித்துள்ளார். மேலும் சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் சொத்து குவிக்க உடந்தையாக இருந்துள்ளனர்.

எனவே அவர் மீது ஊழல் தடுப்பு சட்டம் 13(1) (ஈ) பிரிவில் வருமானத்துக்கு அதிகமாக சொத்து குவித்தது மற்றும் 13(2) அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்த குற்றத்துக்கு உடந்தையாக இருந்தது மற்றும் ஊழல் தடுப்பு சட்டம் 120(பி) கூட்டு சதி தீட்டியது ஆகிய பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

**இரு தரப்பு வாதம்**

ஜெயலலிதாவின் வருமானத்தை விவரித்து அவரது சட்டத்தரணி பி.குமாரும், அதனை மறுத்து அரச சட்டத்தரணி பவானிசிங்கும் சுமார் 100 மணி நேரம் வாதிட்டுள்ளனர். இதே போல சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோரின் வழக்கறிஞர்கள், 'ஜெயலலிதாவிற்கும் இவ்வழக்கிற்கும் தொடர்பில்லை. தி.மு.கவின் அரசியல் பழிவாங்கும் வழக்கு' என சுமார் 90 மணி நேரம் வாதிட்டுள்ளனர். சுமார் 5 ஆயிரம் பக்கத்துக்கு எழுத்துப்பூர்வ அறிக்கையும் தாக்கல் செய்துள்ளனர்.

சொத்து குவிப்பு வழக்கில் மூன்றாம் தரப்பான அன்பழகன் தனது வாதமாக 445 பக்கங்களில் எழுத்துப்பூர்வமான ஆதாரங்களை அடுக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தமிழகத்தில்

வின் சொந்தத் தொகுதியான ஸ்ரீரங்கத்தில் கோயில் அருகே உள்ள கடைகளை மூடக் கோரி அ.தி.மு.கவினர் அச்சுறுத்தியுள்ளனர். அங்கு இதனால் கடைகள் மூடப்பட்டன. பொலிஸாரும் அ.தி.மு.கவினரின் இந்தச் செயலை கண்டிக்காமல் வேடிக்கை பார்த்து வருகின்றனர்.

சென்னை கோபால புரத்தில் உள்ள தி.மு.க. தலைவர் கரு ணாநிதி வீட்டின் மீது கல் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டது. கருணாநிதி வீட்டுக்குள் அ.தி.மு. கவினர் சிலர் நுழைய முயன்றனர். அப்போது, தி.மு.கவினர் அவர்களைத் தடுத்து நிறுத்தினர். இரு தரப்பினருக்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டது. இரு தரப்பினருக்கும் பலத்த காயங்கள் ஏற்பட்டன. அங்கு பதற்றமான சூழல் நிலவுகிறது. கருணாநிதி வீட்டின் முன் தி.மு.க. தொண்டர்கள் உருட்டுக்கட்டைகள், இரும்புக்கம்பிகள் ஏந்தியவாறு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கோவையில் அவினாசி சாலையில் தீர்ப்பை எதிர்த்து அ.தி.மு.கவினர் ஆர்பாட்டம் செய்து வருகின்றனர். அங்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் கார்களின் கண்ணாடியை உடைத்துச் சேதப்படுத்தினர் என செய்திகள் தெரிவித்தன.

காஞ்சிபுரத்தில் பஸ் ஒன்றுக்கு தீ வைக்கபட்டதாகத் தெரிவிக்கப் பட்டது. மதுரையில் பதற்றம் கூடுதலாக இருப்பதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன. அ.தி.மு.கவினர் கடைகள் மீது கல் வீச்சில் ஈடுபட்டு வன்முறை செய்து வருகின்றனர்.

மதுரையில் உள்ள சுப்பிர மணிய சுவாமி வீட்டுக்குப் பலத்த பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. மதுரையிலிருந்து வெளியூர் செல்லும் பஸ்கள் நிறுத்தப்பட்டுள்ளன. மதுரை மீனாட்சி கோயில் அருகே உள்ள கடைகள் மூடப்பட்டன. தஞ்சாவூர், நாகப்பட்டிணம், கரூர், புதுக்கோட்டை பெரம் பலூர் மாவட்டங்களில் உள்ள கடைகள் மூடப்பட்டன.

தெற்கு மாவட்டங்களிலும் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. புதுச் சேரியிலும் பதற்றம் ஏற்பட் டுள்ளது. புதுச்சேரி போக்குவரத்துக்கழகம் சென்னைக்கு வரும் பஸ்களை நிறுத்தப்பட்டது. (கு)

## ஜெயலலிதாவின்

அரசினதும் சூழ்ச்சியாக இருக்குமோ என்று வடக்கு மக்களில் பலர் 'உதயனுக்கு' நேற்றுத் தெரிவித்தனர்.

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா சிறையில் அடைக்கப்பட்டமை தொடர்பில், வடக்கு மக்களின் உணர்வுகளை 'உதயன்' கேட்டறிந்தது. பலர் தமது கருத்துக்களைப் பகிர்ந்திருந்தனர். அவர்களின் கருத்துக்கள் வருமாறு:-

**வவுனியா கள்ளிக் குளத்தைச் சேர்ந்த இராமதாஸ்**

நீதிக்குப் புறம்பான விதத்தில் சொத்து சேர்த்தால் அது யாராக இருந்தாலும் தண்டனை பெற வேண்டியவர்கள்தான். ஆனால் தமிழக முதல்வர் ஜெயலலிதாவைப் பொறுத்த வரையில் அவர் கருணாநிதியைக் காட்டிலும் இலங்கைத் தமிழர் விடயத்தில் தீவிரமாகச் செயற்படுபவர். அவரைச் சிறையில் அடைப்பதோ அல்லது பதவியில் இருந்து தூக்குவதோ இலங்கை தமிழரை பொறுத்த வரை ஏற்க முடியாத ஒன்றே. அதனால் ஏற்படும் பாதிப்பு ஈடு செய்ய முடியாதது.

**மைக்கல் - மன்னார்**

இலங்கைத் தமிழர் விடயத்தில் தமிழகம் குரல் கொடுத்தது உண்மை. அதிலும் ஜெயலலிதாவைப் பொறுத்தவரை தமிழருக்காக நிறையவே குரல் கொடுத்திருக்கிறார். இலங்கை அரசின் பிரதிநிதிகள் இந்தியாவுக்கு செல்லும் போது அதற்கான எதிர்ப்பு நடவடிக்கைகளில் தீவிரமாக செயற்பட்டவர் ஜெயலலிதா. இதனால் இலங்கை அரசுக்கும் இந்திய மத்திய அரசுக்கும் இடையிலான ஒரு ஒப்பந்தமோ அல்லது ஒரு சூழ்ச்சியாகவோ அவர் கைது செய்யப்பட்டிருக்கலாம்.

ஜெயலலிதா தன்னுடைய சுயநல அரசியலுக்காக இலங்கைத் தமிழரை பயன்படுத்தினார் என்று சிலர் சொல்லக் கூடும். ஆனாலும் அது இலங்கை தமிழருக்கு சாதகமாகவே அமைந்தது என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

**பல்கலைக்கழக மாணவர் ஒருவர்**

இதுவரை முதலமைச்சராக இருந்துள்ளார். ஆனால் இலங்கை தமிழருக்காகப் பெரிதாக எதையும் சாதிக்கவில்லை. இவ்வளவு நாளும் தன்னை வெளித் தோற்றத்துக்கு நல்லவராக காட்டிக் கொண்டு உள்ளுக்குள் நஞ்சைத் தான் வைத்திருந்தவர்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் நளினியின் விடயத்திலும், முதலமைச்சராக இருந்து கொண்டு அவருக்கு சரியானதொரு முடிவைப் பெற்றுக் கொடுக்கவில்லை.

**என்.கரிகரன் - யாழ்ப்பாணம்**

ஊழல் என்பது இந்தியாவைப் பொறுத்தவரையில் சர்வ சாதாரணமானது. ஆனாலும் அதை தற்போது பெரிது படுத்தி அவரைக் கைது செய்தமைதான் கேள்விக்குரியதாக இருக்கின்றது. கருணாநிதிக்கு எதிராகவும் சொத்து குவிப்பு வழக்கு இருக்கின்றது. அவரையும் விரைவில் கைது செய்வார்கள். தமிழகத்தில், தமிழக கட்சிகளின் செல்வாக்கைச் சரியச் செய்யும் தேசியக் கட்சிகளின் சதிச் செயல் இது.

**தீபன் - யாழ்ப்பாணம்**

தமிழ் நாட்டில் ஒரு முதலமைச்சர் சொத்து குவிப்பு வழக்குச் சென்று அதன் தீர்ப்புக்குப் பின்னர் சிறைச்சாலைக்குச் செல்வதும், அவர் எவ்வளவு தூரம் ஜனநாயகத்தை மதிக்கின்றார் என்று தெரிகின்றது. ஆனால் எங்களது நாட்டில் ஜனநாயகம் உள்ளதா என்றே தெரியவில்லை.

இருந்தாலும் முதல்வர் ஜெயலலிதா, சில நாள்களுக்கு முன்னர் தனக்கு தமிழீழ விடுதலைப் புலிகளால் அச்சுறுத்தல் என்று சொல்லி வழக்கைத் திசை திருப்ப முயன்றார். இதனால் அவர் நல்லவராகத் தெரியவில்லை. அரசியல் வாதிகளை நம்ப முடியாது.

தமிழகத்தில் நடந்த சட்டமன்ற தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் ஜெயலலிதாவின் அ.தி.மு.க. அமோக வெற்றியைப் பெற்றது. இதனால் இவரது கைது தமிழகத்தில் நிச்சயம் தாக்கத்தை ஏற்படுத்தும்.

**ராஜ் - முல்லைத்தீவு**

ஜெயலலிதாவின் கைது நிச்சயம். இலங்கை அரசுக்கே மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கும். ஜெயலலிதா மீது வழக்குத் தொடுத்தவர் சுப்பிரமணிய சுவாமி. அவர் இலங்கை அரசின் நண்பர். தமிழகத்தில் ஜெயலலிதாவின் கட்சி ஆட்சியில் தொடர்ந்து இருந்தாலும், அவர் போல் இலங்கை விடயத்தில் - ஈழத் தமிழர் விடயத்தில் முடிவு எடுப்பார்களோ தெரியாது. அவர் இரும்புப் பெண்மணி. இந்தக் காலகட்டத்தில் ஜெயலலிதாவின் கைது ஈழத் தமிழருக்கு மிகப் பெரிய பின்னடைவுதான். (த-5-21)

## அடுத்த

வுள்ளது என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த தடவை 2001 ஆம் ஆண்டு ஜெயலலிதா முதல்வர் பதவியில் இருந்து விலக நேரிட்டபோது ஓ.பன்னீர்செல்வம் முதல்வராக பதவி ஏற்றார். மீண்டும் அவர் முதல்வர் ஆகக் கூடும் என்று கூறப்படுகிறது.

இதற்கிடையே அடுத்த முதல்வ ராக தேர்வு செய்யப்பட 4 பேருக்கு வாய்ப்பு இருப்பதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன. விசாலாட்சி நெடுஞ் செழியன், முன்னாள் டி.ஜி.பி. நட்ராஜ் ஆகியோரது பெயர்கள் பேசப்படுகிறது.

இவர்கள் தவிர முன்னாள் தலைமை செயலாளர் ஷீலா பாலகிருஷ்ணன், அமைச்சர் செந்தில் பாலாஜி பெயர்க ளும் முதல்வர் பதவிக்கு அடிபடுகிறது.

## கொழும்பில்

முறையாக கொழும்பில் கடத்தப்பட்டவர் தொடர்பான சாட்சியம் முழுமையாக நேற்று ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதுவரை நடந்த 8 பகிரங்க அமர்வுகளில் 9 பேர் கொழும்பில் கடத்தப்பட்டமை தொடர்பில் சாட்சியமளிக்க வந்திருந்தபோதும் அவை ஏற்றுக் கொள்ளப்படாத நிலையில் நேற்றைய தினம் முதல்முறையாக அது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வுகள் முழங்காவில் மகா வித்தியாலத்தில் நேற்று இடம்பெற்றது. 50 பேர் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டிருந்த நிலையில் 39 பேரே சாட்சியமளித்திருந்தனர்.

ஜெயபுரத்திலிருந்து சாட்சியமளித்த செல்லையா கோதநாயகி தனது மகன் கொழும்பில் வைத்து வெள்ளை வானில் கடத்தப்பட்டதாகத் தெரிவித்தார். 2008 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16 ஆம் திகதி கொழும்பு கொட்டாஞ்சேனைப் பகுதியில் வைத்தே அவர் கடத்தப்பட்டிருந்தார். அதன் பின்னர் அவருடன் எந்தத் தொடர்பும் இல்லை. அவர் கராத்தே பயிற்றுவிப்பாளராக இருந்தவர். அவரை யார் ஏன் கடத்தினார்கள் என்பதே தெரியவில்லை-என்றார் கோதநாயகி.

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு கடந்த ஜனவரியில் இருந்து பகிரங்க அமர்வுகளை நடத்தி வருகின்றது. இதுவரை நடத்தப்பட்ட 8 அமர்வுகளின் போது 9 பேர் வரையில் தமது உறவுகள் கொழும்பில் கடத்தப்பட்டதாகச் சாட்சியமளிக்க முற்பட்டபோது, ஆணைக்குழுவின் விடயப் பரப்புக்குள் அது இல்லை என்று தெரிவித்து அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## போர்

சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணச் சுற்றுலாத் துறை ஒன்றியத்தின் மாநாடு நேற்று யாழ்.ரில்கோ விடுதியில் இடம்பெற்றது. இதில் தலைமையுரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரி வித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுற்றுலா என்பது கூரிய ஒரு கத்தியின் நுனியைப் போன் றது. முறையாகப் பாவித்தால் அது மக்களுக்குப் பல்வித நன்மைகளைப் பெற்றுக்கொடுக்கும். பிழையாகப் பாவித்தால் கொலைக்குக் கூடக் கருவியாகி விடும். திட்டமிட்டு அபிவிருத்தி செய்யப் பட்டு, முகாமைப்படுத்தி நிலை பெறக் கூடிய வகையில் சுற்றுலா அபிவிருத்தி செய்யப்பட்டால் பல நன்மைகளை நாம் பெறலாம்.

ஆனால் எமது பிரதேசத்தைப் பொறுத்தவரை இடம்பெயர்ந்த மக்கள் தமது பாரம்பரிய வதிவிடங்களில் குடியேற்றப்படவில்லை. 1983 தொடக்கம் தென்னிந்திய முகாம்களில் வாழும் எமது மக்களைத் திருப்பிக் கொண்டு வந்து எமது இடங்களில் குடியமர்த்த முடிய வில்லை. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சிறைகளில் அடைபட்டுக் கிடக்கும் எமது மக்களை இன்னும் விடுவித்த பாடில்லை. கிராமியப் பொருளாதாரம் தற்பொழுது கிராம மக்கள் கைவசம் இல்லாமல் நழுவிப் போய்க் கொண்டிருக்கின்றது. மீன்பிடித்தலில் உள்ளூர் மக்களை ஓரங்கட்டி இராணுவமேற்பார்வையுடன் தெற் கிலிருந்து வருவோர் அந்தத் தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். ஒன்றரை லட்சம் இராணுவம் தங்கி நிற்கும் வடக்கு மாகாணத்தில் எமது பெண்களின் நிலை மிக மோசமடைந்து வருகின்றது.

குடும்பப் பிரச்சினைகள் தலைதூக்கக் காரணங்கள் பல இந்தப் பின்னணியில் எழுந் துள்ளன. எமது மக்களின் சுகா தாரம், சுகம், மனோநிலை, உடல்நிலை யாவையும் பாதிப் படைந்துள்ளன. காரணம் இதுவரை தெரியாமல் அண்மையில் ஏற்பட்ட சில மரணங்கள் அதிர்ச்சியூட்டுகின்றன. மனோநிலை பாதிப்பால் தற்கொலைகள் கூடிக்கொண்டு வருகின்றன. இவ்வாறு பல இடர்களுக்கு ஆளாகி வாழ்கின்றனர் எமது மக்கள்.

இராணுவம், கடற்படை ஆகியோர் வேளாண்மையில் மட்டுமன்றி மீன்பிடித் தொழிலிலும் உள்நுழைந்துள்ளனர். மக்களுக்குரிய காணிகளைக் கையேற்றே மேற்படிக் கைங்கரியங்கள் நடைமுறைப்படுத் தப்பட்டு வருகின்றன. மக்களோ முகாம்களில் வாழ வழியின்றித் தவிக்கின்றனர்.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை மக்களுக்கு நிலை யான நன்மைகளைத் தரக் கூடிய சுற்றுலா அபிவிருத்தி உபாயங்களை உய்த்துணர்ந்து உபயோகிப்பது அவசியமாகின்றது. எமது பிரச்சினைகள் மற்றைய மாகாணங்களுக்குரிய பிரச்சினைகளில் இருந்து மாறுபட்டவை. மத்திய அரசு இதைப் புரிந்து நடந்து கொள்ள முன்வரவேண்டும். எமது மக்களுக்கு நன்மைகள் போய் அடையும் வண்ணமே சுற்றுலாத்துறை அபிவிருத்தி செய் யப்படவேண்டும். எமது சமூக, கலாசார, பாரம்பரிய விழுமி யங்களுக்குப் பாதிப்பு இல்லாமலே சுற்றுலாத் துறை அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்-என்றார். (த-14)

## வீதியில்

நேசன் தெரிவித்தார். வடக்கு மாகாண சுற்றுலாத் துறை ஒன்றியத்தின் மாநாடு நேற்று யாழ்.ரில்கோ விடுதியில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு கூறி னார்.

அவர் அங்கு மேலும் தெரி வித்ததாவது:-

இலங்கையில் சுற்றுலாத் துறை தற்போது வளர்ச்சிய டைந்து வருகின்ற துறையாக உள்ளது. வடக்கு மாகாணத் தைப் பொறுத்தவரை போருக் குப் பின்னர் ஏ-9 வீதி திறப் பின் பின்னர் சுற்றுலாப் பயணிகளின் வருகை கூடியுள்ளது. குறிப்பாக அரசால் போரின் நினைவுச்சின்னமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள இடங்களைப் பார்வையிடுவதற்கென அரசால் பணம் கொடுத்து அனுப்பப்படுகின்றனர். இவர் களால் சுற்றுலாத்துறைக்கு எந்த வருமானமும் கிடைக்கப் போவதில்லை. இதனைவிட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக வருகை தரும் அதிகாரிகளால் ஹோட்டல்களுக்கு ஒரு தொகை வருமானம் கிடைக்கப்பெறுகிறது.

2010 ஆம் ஆண்டில் 5 லட்சத்துக்கும் அதிகமான சுற்று லாப்பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாகவும், 2016 ஆம் ஆண்டு 25 லட்சம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தருவர் எனவும் அரச புள்ளி விவரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

இந்த வருகைக்கு ஏற்ப வடக் கில் என்ன திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. கணிசமான வருமானத்தைப் பெறக்கூடிய தாகச் சுற்றுலாத்துறையை மேம்படுத்த வேண்டும். சுற்று லாத்துறையால் பண்பாட்டு அடையாளங்கள் அழிவடையாதவகையில் சுற்றுலாப் பயணிகளின் வருகை அமைந் திருக்க வேண்டும்.

போருக்குப் பின்னர் நாங்கள் மலினப்படுத்தப்பட்டவர்களாகவும் கையேந்தும் நிலையில் இருப்பவர்களாகவும் இருக்கிறோம்.

எனவே இளைய சமூகத்தினர் மத்தியில் பாதிப்பு ஏற்படாத வகையில் வடக்கில் இருக்கக் கூடிய இயற்கை வளங்க ளைக் கொண்டு சுற்றுலாத் துறையை மேம்படுத்த வேண் டும் - என்றார்.

இந்த நிகழ்வில் கருத்துரை வழங்கிய வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் திருமதி விஜலட்சுமி ரமேஸ் தெரிவிக்கும் போது, வடக்கு - கிழக்கைப் பொறுத்த வரை நீண்ட கால வரலாற்றுப் பண்புகள், பாரம்பரிய நாகரிகம், இயற்கை வளம் எனப் பல்வேறு விடயங்கள் சுற்றுலாத் துறையினருக்கு ஏற்ற வகை யில் உள்ளன. வெளிநாட்ட வர்களின் வருகை இவற்றைமையமாக வைத்து இருந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

உலக நாடுகளின் பொருளா தார வளர்ச்சியின் பயனாக இந்த வருடம் சுற்றுலா மற்றும் சமூக அபிவிருத்தி ஊடாக உள்ளூர் சமூக மேம்பாட்டுக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும் எனும் தொனிப் பொருளில் உலக சுற்றுலாத் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. சுற்றுலாத்துறை ஊடாக மக்களின் வாழ்வை வலுப்படுத்த வேண்டும் என்பதே இதன் நோக்கமாகவுள்ளது. சுற்று லாத்துறைக்கு ஏற்ப தீவு, செறிந்த பாரம்பரியம், கலை, கலாசாரம், வரலாறு, இயற்கை, கடல், வனம், சரணாலயம், விருந்தோம்பல் எனப் பல் வேறு பரிணாமங்கள் இலங்கையில் உள்ளன.


வடக்கில் கடந்த 5 வருடங்க ளாக வீதிப் புனரமைப்பு, ரயில் சேவை ,தொலைத் தொடர்பு, மின்சாரம் எனப் பெரும் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டு வருகின் றன. சுற்றுலாத் துறையை மையப் படுத்திப் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இயற்கை வளங்களையும் கலாசாரத்தையும் பேணும் வகையில் இந்தத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டி யுள்ளது. இதற்குச் சரியான பொறிமுறைகளில் திட்டங்கள் மேற்கொள்ளப்படவேண்டும் - என்றார்.

வடக்கு மாகாண முதலமைச் சர் க.வி.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடமாகாண சபையின் கல்வி அமைச்சர் த.குரு குலராஜா, விவசாய அமைச் சர் பொ.ஐங்கரநேசன், மாகா ணசபை உறுப்பினர் பா.கஜதீபன், பிரதேச சபைத் தலைவர்கள், சுற்றுலாத்துறை சார்ந்த அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (த-14)

# கே.ஸி.ஸி.ஸி. இறுதியாட்டம் இன்று


கே.ஸி.ஸி.ஸி. அணி


சென்றலைட்ஸ் அணி

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்டு வருகின்ற 40 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. இறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி. அணி மோதவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் பிரதான முகாமையாளர் எஸ்.பிறேம்குமார், சிறப்பு விருந்தினராக கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் வி.ஞானகாந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தச் சுற்றுப் போட்டி கடந்த 1991 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்பட்டு வருகின்றது. இதில் இந்த ஆண்டு சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் மோதவுள்ள சென்றலைட்ஸ் அணியானது 4 தடவைகள் (1991, 1994, 1995, 2009) சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துள்ளது. அதேபோல் கே.ஸி.ஸி.ஸி. அணி இரு தடவைகள் (2008, 2012) சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துள்ளது. இதனால் இவ்விரு அணிகளும் மோதும் இறுதியாட்டம் மிகவும் பரபரப்பாக அமையுமென ரசிகர்கள் கருதுகின்றனர்.

இதேபோல் ஜொனியன்ஸ் அணி 1992, 2013 ஆண்டுகளிலும், யாழ்.பல்கலைக்கழக அணி 1993, 1998,1999, 2002 ஆண்டுகளிலும் மானிப்பாய் பரிஸ் அணி 1997, 2003 ஆம் ஆண்டுகளிலும் ஜொலிஸ்ரார் 2000, 2010,2011 ஆம் ஆண்டுகளிலும் பற்றீசியன் அணி 2001, 2004, 2005 ஆம் ஆண்டுகளிலும் சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துள்ளன. (ரி-422-23)

## இன்றைய ஆட்டம்

பருத்தித்துறை திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 11 பேர் பங்கு பற்றும் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக் கிழமைபி.ப.3.30மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ரி-108)

* * *

பண்டத்தரிப்பு குஞ்சன் கலட்டி அறிவொளி விளையாட்டுக்கழகம் நடத்தும் தாச்சிப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு பண்டத்தரிப்பு குஞ்சன் கலட்டி அறிவொளி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இறுதியாட்டத்தில் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. இறுதியாட்ட நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினாரக வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரனும், கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் தலைவர் செ.சண்முகலிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர். (ரி- 23)

## லீக் சுற்றில் அல்வாய் பாரதி

கரணவாய், செப்.28


பரபரப்பான ஆட்டத்தில் அல்வாய் பாரதி விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி லீக் சுற்றுப் போட்டிக்குள் நுழைந்தது அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம்.

பருத்தித்துறை திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 11 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் அல்வாய் பாரதி விளையாட்டுக் கழகமும் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகமும் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தின் முதல் பாதி ஆட்டத்தில் இரு அணியினரும் சமபலத்துடன் மோதினர். இந்தச் சூழ்நிலையில் அல்வாய் நண்பர்கள் அணி சார்பாக சுரேஸ் 9 ஆவது நிமிடத்தில் கோல் ஒன்றைப் போட ஆட்டம் விறு விறுப்பாகியது. இரு அணி வீரர்களும் கோல் போட எத்தனித்த சூழ்நிலையில் இடைவேளைக்காக ஆட்டம் நிறுத்த ஒரு நிமிடம் இருக்கையில் அல்வாய் பாரதி விளையாட்டுக் கழக வீரர் கருணானந்தன் தமது அணி சார்பாக முதலாவது கோலைப் போட ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகியதும் இரு அணியினரும் புது வேகத்துடன் வியூகத்துடன் மோதினர். இதனால் கோல் போட முடியாது திண்டாடினர். இதனால் ஆட்டம் சமனிலை முடியும் என்று எதிர்பார்த்திருந்த வேளை ஆட்டம் நிறைவடைய 4 நிமிடங்கள், 2 நிமிடங்கள் இருக்கும் போது அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக வீரர்கள் வைத்தீசன், சசிதரன் ஆகியோர் கோல் போட 3:1 என்ற கோல்கள் அடிப்படையில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று லீக் சுற்றுப் போட்டிக்குத் தகுதி பெற்றது. (ரி-108)


யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையும், கரம் ஆண்கள் அணியும் இணைந்து யாழ்.மாவட்ட ரீதியில் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் ஆண்களுக்கான கரம் போட்டி நேற்று சனிக்கிழமை யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி அலகில் ஆரம்பமானது. நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் போட்டியாளர்கள் மோதிக் கொள்ளும் காட்சி. (ரி- 23)

## தொழில்நுட்ப அலுவலர் பரீட்சை

கரணவாய், செப்.28

இலங்கை மெய்வன்மைச் சங்கத்தால் நடத்தப்படும் மெய்வன்மைப் போட்டிகளுக்கான தொழில்நுட்ப அலுவலர் தரம்-3 க்கான பரீட்சை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 19 ஆம் திகதி கொழும்பு தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவகத்தில் இடம் பெறவுள்ளது. எழுத்துப் பரீட்சை, வாய் மொழிப் பரீட்சை என இரு பிரிவுகளாக நடத்தப்படும் இந்தப் பரீட்சையில் தோற்றுவோருக்கான அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்தப் பரீட்சையில் வடமாகாணத்தில் இருந்து தமிழ் மொழி மூலப் பரீட்சார்த்திகள் பலர் தோற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி-108)

## ஊரெழு றோயல் வெற்றி



யாழ்ப்பாணம்,செப்.28

சமநிலை தவிர்ப்பு உதையில் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணியை வீழ்த்தியது ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி. யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடத் தும் ஈ.கே குமரையா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இதில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியைஎதிர்த்துஉதயசூரியன்விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்டநேர முடிவில் தலா ஒவ்வொரு கோல்களைப் பெற்றுக் கொள்ள ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. ஆட்டத்தின் வெற்றியாளரைத் தீர்மானிப்பதற்காக சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் ஊரெழு றோயல் விளை யாட்டுக்கழக அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியில் சிறந்த ஆட்ட நாயகனாக சிந்துஷனும், உதயசூரியன் விளையாட்டுக்கழக அணியில் சிறந்த ஆட்டநாயகனான பிரசாந்தும் தெரிவானார்கள். (ரி- 23)

# அளவெட்டி கிரிக்கெட் தொடர்; இறுதியாட்டம்


கொக்குவில் ஸ்ரீகாமாட்சி


குருநகர் கார்மேல் போய்ஸ்

யாழ்ப்பாணம்,செப்.27

அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டங்கள் இன்று ஞாயிற்றுக் கிழமை அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

வடமாகாண ரீதியாக நடத்தப்பட்ட மென்பந்து சுற்றுப் போட்டி இறுதியாட்டத்தில், குருநகர் கார்மேல் போய்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கொக்குவில் ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. அதேவேளை வலி.வடக் கின் சமர் என வர்ணிக்கப்பட்ட தொடரின் இறுதியாட்டத்தில் அளவெட்டி ஞானவைரவர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மல்லாகம் ஆர்.டி.எஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இறுதியாட்ட நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாக மகாஜனாக் கல்லூரி அதிபர் மணிசேகரம், வலி.வடக்கு பிரதேச சபை தவிசாளர் சஜிவனும், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட கிரிக்கெட் பயிற்றுநர் கே.சுதாகரன், மகாஜனாக் கல்லூரியின் கிரிக்கெட் பயிற்றுநர் ஸ்ரீதரனும், கௌரவ விருந்தினராக விளையாட்டுத் துறை உத்தியோகத்தர் வல்லவக் குமாரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ரி- 23)

## காலிறுதியுடன் விடைபெற்ற சாய்னா



ஆசிய விளையாட்டு போட்டி பூப்பந்தாட்ட காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் சாய்னா நேவால் அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

தென் கொரியாவின் இன்சியான் நகரில் 17ஆவது ஆசிய விளையாட்டு போட்டி நடைபெற்று வருகிறது. இதில் மகளிர் ஒற்றையர் பிரிவு பூப்பந்தாட்ட காலிறுதிப் போட்டி நேற்று நடைபெற்றது. இதில் இந்தியாவின் நம்பிக்கை நட்சத்திரமான சாய்னா நேவால். சீனாவின் வாங் சிக்ஷியானுடன் மோதினார். விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் 21:18, 9:21, 7:21 என்ற நேர் செற் கணக்கில் சாய்னா அதிர்ச்சி தோல்வி அடைந்து காலிறுதியுடன் தொடரில் இருந்து வெளியேறினார். (ரி)

## நோர்தனை நோகடித்தது பஞ்சாப்



நோர்தன் டிஸ்ரிக்ஸ் அணியை 120 ஓட்டங்களால் வீழ்த்தி அபார வெற்றி பெற்ற பஞ்சாப் அணி சம்பியன் லீக் தொடரின் அரையிறுதிக்கு முன்னேறியது.

மொகாலியில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற லீக் போட்டியில், கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியும் நோர்தன் டிஸ்ரிக்ஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற நோர்தன் அணி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. பஞ்சாப் அணிக்கு தொடக்க வீரர்களாக களமிறங்கிய அனுபவ வீரர் சேவாக்கும், இளம் வீரர் வோக்ராவும் அசத்தலான தொடக்கத்தை அளித்தனர். முதலாவது இலக்குக்காக 102 ஓட்டங்கள் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் வோக்ரா 65 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து களமிறங்கிய திசார பெரேரா 16, மக்ஸ்வெல் 7 ஓட்டங்களுடன் வெளியேற சேவாக் 52 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இறுதி நேரத்தில், டேவிட் மில்லர் மிரட்ட, பஞ்சாப் அணி 20 ஓவர்களில் 5 இலக்குகளை இழந்து 215 ஓட்டங்களைக் குவித்தது. அதிரடியாக ஆடிய மில்லர் 40 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.

கடின இலக்கை விரட்டிய நோர்தன் அணி சார்பாக கேன் வில்லியம்சன் 20 ஓட்டங்களையும், டெவ்சிச் 28 ஓட்டங்களையும், பிளைன் 12 ஓட்டங்களையும் பெற ஏனையோர் ஒற்றை இலக்கங்களில் ஆட்டமிழந்தனர். 15.2 ஓவர்களில் 95 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்த நோர்தன் 120 ஓட்டங்களால் மோசமான தோல்வியைத் தழுவிக் கொண்டது. ஆட்டநாயகனாக வோக்ரா தெரிவானார். (ரி)

## பார்படோஸை வென்றது கொப்ராஸ்



பரபரப்பான இறுதி ஓவரில் ஆட்டம் சமனிலையில் முடிய சுப்பர் ஓவரில் பார்படோஸ் அணியை வெற்றி பெற்றது கேப் கொப்ராஸ்.

சம்பியன் லீக் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் பார்படோஸ் ரிடென்ற்ஸ் அணியும் கேப் கொப்ராஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில்வென்ற கேப் கொப்ராஸ் அணி களத்தடுப்பைத் தெரிவு செய்தது. முதலில் களமிறங்கிய பார்படோஸ் அணிக்கு தொடக்கம் சரியாக அமையவில்லை. பின்னர் ஜோடி சேர்ந்த முனவீரவும், கார்டரும் 75 ஓட்டங்களை தமக் கிடையே பகிர்ந்து கொண்டனர். முன வீர 42 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க அதன் பின் வந்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் அடுத்தடுத்து வெளியேறினர். மறுபக்கத்தில், அதிரடியாக ஆடிய கார்டர் 111 ஓட்டங்களைக் குவித்து இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார். 20 ஓவர்கள் முடிவில் 8 இலக்குகளை இழந்த பார்படோஸ் அணி 174 ஓட்டங்களை அடைந்தது. 175 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய கேப் கொப்ராஸ் அணி 20 ஓவர்களில் 5 இலக்குகளை இழந்து 174 ஓட்டங்களையே பெற்றுக் கொண்டது. தொடக்க வீரர்களான லெவி 39 ஓட்டங்களையும், அம்லா 59 ஓட்டங்களையும் பெற்று சிறப்பான ஆரம்பத்தை வழங்கிய போதும் பின் வரிசை வீரர்கள் சொதப்பினர்.

இதனையடுத்து வெற்றியை நிர்ணயிக்க நடைபெற்ற சுப்பர் ஓவரில் முதலில் ஆடிய கேப் கொப்ராஸ் அணி 11 ஓட்டங்களை எடுத்தது. பதிலுக்கு ஆடிய பார்படோஸ் ஒரு இலக்கை இழந்து 10 ஓட்டங்களை மட்டுமே எடுக்க கொப்ராஸ் அணி வெற்றியீட்டியது. ஆட்டநாயகனாக எங்கெல்ப்ரெச்ற் தெரிவானார். (ரி)

## டோனியை பின் தள்ளிய கம்பீர்



கொல்கத்தா அணித்தலைவராக இருக்கும் கௌதம் கம்பீர் தொடர்ச்சியாக ரி- 20 ஆட்டங்களில் அதிகமுறை அணித்தலைவராக இருந்தவர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

சம்பியன் லீக் தொடரில் விளையாடி வரும் கொல்கத்தா அணியின் அணித்தலைவராக கம்பீர் இருக்கிறார். ஐ.பி.எல் தொடரில் 2 முறை கிண்ணம் வென்ற கொல்கத்தா அணி 12 முறை தொடர்ச்சியாக வெற்றி பெற்று அசத்தியுள்ளது. இந்நிலையில் கடைசியாக பேர்த் அணியை வீழ்த்தியதில், கம்பீர் தொடர்ச்சியாக 60 ஆட்டங்களில் அணித்தலைவராக அணியை வழிநடத்தியவர் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.

இதன் மூலம் சென்னை அணியின் அணித்தலைவராக உள்ள டோனியை (59) இவர் பின்தள்ளியுள்ளார். அயர்லாந்தின் வில்லியம் போர்ட்டர்பீல்ட், இங்கிலாந்தின் டேரில் மிட்செல், ஆஸ்திரேலியாவின் ஷேன் வோர்ன் ஆகியோர் அடுத்தடுத்த இடங்களில் உள்ளனர்.

ஆனாலும், அதிக ரி- 20 ஆட்டங்களுக்கு அணித்தலைமை வகித்தவர்களில் டோனியே முதலிடத்தில் இருக்கிறார். இவர் 182 ஆட்டங்களில் சென்னை மற்றும் இந்திய அணிக்காக அணித்தலைவராக இருந்துள்ளார். அடுத்த இடத்தில் கம்பீர் 99 ஆட்டங்களுக்கு தலைமை வகித்துள்ளார். (ரி)

## ஏலத்தொகையை அநாதைக் குழந்தைகளுக்கு வழங்கிய சச்சின்



தனது துடுப்புமட்டை, கழுத்துப்பட்டி, 'ஜேர்சி' போன்றவற்றை ஏலத்தில்விற்று அதன் மூலம் கிடைத்த தொகையை அநாதைக் குழந்தைகளுக்கு வழங்கியுள்ளார் சச்சின் டெண்டுல்கர்.

புனேயில் நடந்த ஏலம் ஒன்றில் தன்னுடைய துடுப்புமட்டை, கழுத்துப்பட்டி, 'ஜேர்சி' ஆகியவற்றை ஏலத்தில் விட்டுள்ளார் சச்சின் டெண்டுல்கர். அதில் கிடைக்கும் பணத்தை ஆதரவற்ற குழந்தைகளுக்கு அளிக்கப் போவதாக ஏற்கனவே அவர் அறிவித்திருந்தார். இந்த நிலையில் அந்த ஏலத்தில் மொத்தமாக 1.5 கோடி ரூபா பணம் கிடைத்துள்ளது. குறித்த தொகை முழுவதையும் அநாதைக் குழந்தைகள் பராமரிப்பு அமைப்பு ஒன்றுக்கு அளித்த சச்சின், நிகழ்ச்சியின்போது குழந்தைகளுடன் கலந்துரையாடி, அவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் பேசி அவர்களை உற்சாகப்படுத்தியுள்ளார்.

தொடர்ந்து சச்சின் பேசுகையில், உலகிலுள்ள ஒவ்வொரு மனிதனுமே ஒரு திறமையுடன் படைக்கப்பட்டுள்ளான். நமது திறமைகளை நாம் கண்டு கொண்ட பிறகு அதை மெருகேற்றி ஜொலிக்க வைப்பது நமது கைகளில்தான் உள்ளது. திறமையை மதிக்க வேண்டும், ஆராதிக்க வேண்டும். ஏகப்பட்ட சவால்களை சந்திக்கும் கைவிடப்பட்ட குழந்தைகள், என்னைப் பற்றி ஒரு ஒலிவடிவ புத்தகத்தை தயாரித்து அதை என்னிடம் அளித்து மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டுள்ளனர். இது மிகவும் மன நிறைவை தருகிறது என்றார். (ரி)

## இன்றைய CLT-20 ஆட்டங்கள்

| மாலை 4 மணி | | இரவு 8 மணி | |
|---|---|---|---|
| ஹோபேட் ஹரிகேன்ஸ் | பார்படோஸ் ரிடென்ற்ஸ் | கிங்ஸ் லெவன் பஞ்சாப் | கேப் கொப்ராஸ் |

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## வாகனம் தேவை

42-250 தொடரிலக்கமுடைய 350, 250 ரக ISUZU வாகனம் (கன்ரர்) தேவை. விற்பனைக்கு உள்ளோர் தொடர்பு கொள்ளவும்.

(f/16669) (463) தொ.பே: 077 071 1177

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் 1980ஆம் ஆண்டு திருவாதிரை 3ஆம் பாதம் செவ்வாய் குற்றமற்ற (கிரகப்பாவம் 34) 6 அடி உயரமும் உடைய யாழ்ப்பாணத்தில் நிரந்தர அரசாங்க தொழில் புரியும் பட்டதாரி மணமகனுக்கு, அழகான மணமகள் தேவை.

தொடர்பு: 0212250183,
Jaffna2011@hotmail.com.uk

## வாள்வெட்டில் நால்வர் படுகாயம்

வாளால் வெட்டியும் போத்தலால் குத்தியும் படுகாயமடைந்த இருவர் குடல் வெளியேறியும்,இரண்டு பேர் படுகாயமடைந்தும் நேற்றி ரவு யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஒட்டுமடம் பகுதியில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ர.அஜித் (வயது -21) என்பவரே வயிற்றில் போத்தலால் குத்தப்பட்டு குடல் வெளியேறிய நிலையில் சேர்க்கப்பட்டுள்ளார். அதே இடத்தைச் சேர்ந்த ஏ.ராஜேஸ்வரன் (வயது -25) என்பவரும் வயிற்றில் காயமடைந்துள்ளார். சகோதரர்களான பு.றஞ்சன் (வயது-33), பு.நிசாந்தன் (வயது - 27) ஆகியோரும் படுகாயமடைந்துள்ளனர். யாழ். நகரிலிருந்து ஒட்டோவில் வீடு திரும்பும்போது ஒட்டுமடம் சந்தியில் நின்றிருந்த குழுவினர் ஓட்டோவைத் தள்ளி வீழ்த்தி வாளால்வெட்டினர்என்று கூறப் பட்டுள்ளது. (த-4)

## மரண அறிவித்தல்



### இராசையா மயிலுப்பிள்ளை

நுணாவில் சந்தியைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி பழைய பொலிஸ்நிலைய வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற நன்நடத்தை காரியாலய அலுவலர் இராசையா மயிலுப்பிள்ளை நேற்று (27.09.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா-இராசம்மா தம்பதியரின் பாசமிகு சிரேஷ்ட மகனும், காலஞ்சென்றவர்களான சின்னப்பா-கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தங்கம்மாவின் (ஓய்வு பெற்ற ஆசிரியை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி) பாசமிகு கணவரும், கண்ணகைப்பிள்ளை, தம்பையா, கருணாவதி, காலஞ்சென்ற பரராஜசிங்கம் ஆகியோரின் அன்பு சகோதரரும், தவேந்திரநாதன் (கனடா), காலஞ்சென்றவர்களான சின்னப்பிள்ளை, செல்லையா, செல்லம்மா, இராஜரட்ணம் ஆகியோரின் மைத்துனரும், றஞ்சினிதேவி (தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம்), சிவாஜினி (கனடா), மனோகரன் (சுவிஸ்), பாஸ்கரன் (நியூஸிலாந்து) ஆகியோரின் அன்பு தந்தையும், கிருஷ்ணானந்தலிங்கம் (மாகாண பொது நிர்வாகம், வடமாகாணம்), கணேசலிங்கம், நளினி, செல்வநந்தினி ஆகியோரின் பாசமிகு மாமனும், பிரசாந், டிலக்ஷனா, தர்மிகன், விதுஷன், லக்ஷன், மதுஷன், லிக்ஷிகா, விதுர்னா, புருஷோத் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

14/9, பழைய பொலிஸ் நிலைய வீதி,
சாவகச்சேரி.
0777 464901, 077 616 4038,
021 227 0291.

(C/15986) (10)

தகவல்:
குடும்பத்தினர்.

## வேலையாள்கள் தேவை

கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையத்திற்கு பின்வரும் வேலையாள்கள் தேவை.

1.விற்பனையாளர்
2.கணக்காளர்
3.சிட்டை எழுதுபவர்
4.உதவியாளர்
5.கணனி அறிவுடையவர்கள்

அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இருபாலாரும் நேரில் சமுகம் தரவும்.

யாழ் போன் சொப்
T.P: 0773611282 இல 9, நவீன சந்தை வெளிப்புறம், யாழ்ப்பாணம்.

## உடனடி பயணம் இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்

சவூதி இராட்ச்சியத்தில் பிரசித்தி பெற்ற கம்பனியில் உடனடி வேலைவாய்ப்பு

இந்த அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்!!!!

பதிவுக்கட்டணம் இலவசம் | தொகை 150 | உணவு இலவசம் | விமான டிக்கட் இலவசம்

| | பதவி | | தொகை | சம்பளம் (ரூபா.) |
|---|---|---|---|---|
| 01 | கட்டிட பெயின்டர்ஸ் | - Building Painters | 25 | 56,000 |
| 02 | பிலாஸ்டர் மேசன் | - Plaster Masons | 25 | 56,000 |
| 03 | புலொக் மேசன் | - Block Masons | 25 | 56,000 |
| 04 | டைல்ஸ் மேசன் | - Tile Masons | 25 | 56,000 |
| 05 | தச்சன் | - Finishing Carpenters | 25 | 56,000 |
| 06 | போமன் | - Finishing Foreman | 25 | 70,000 |

★ஒப்பந்தகாலம் 2 வருடங்கள் தங்குமிடம், போக்குவரத்து, மற்றும் வைத்தியவசதி இலவசம்
★ஒரு நாளைக்கு 8 மணித்தியாலம் ★கிழமைக்கு 6 நாட்கள். ★காப்புறுதி மற்றும் அனைத்து நிபந்தனைகளும் சவூதி இராட்சியத்தில் தொழிலாளர் சட்டத்திற்கு இணங்க வழங்கப்படும்.
★ஒவ்வொரு வருடமும் இறுதியில் சம்பளத்தோடு 30 நாள் விடுமுறை. ★ஒப்பந்தகால முடிவில் விமான பயணம் இலவசம் (சாப்பாடு கட்டணம் 200 றியால் வழங்கப்படும்).

ஞாயிற்றுக்கிழமை மற்றும் போயா தினங்களில் காலை 10.30 மணியிலிருந்து 3.00 மணிவரை திறந்திருக்கும்.

### அரபியன் கல்ப் என்ரபிரைசஸ்

சர்மா : 0772558311

இல.72/28 ஸ்ரீசங்கராஜ மாவத்தை, கொழும்பு 10தொழில்நுட்ப கல்லூரியின் சந்தியிலிருந்து பஞ்சிகாவத்தை பக்கத்திற்கு மெடி கவுஸ் கட்டிடத்தை கடந்து 50m தொலைவில் உள்ளது.

வங்கிக்கடன் பெறுவதற்கு உதவிகள் செய்து தரப்படும்

## Bachelor of Information Technology

BIT University of colombo school of Computing - UGC
Hurry! register now for 2014/2015 intake

All Semester's

Limited Students Enrollment for Group Classes

Rs.14,000/= Per Semester For All Subjects...

Starts on 04 Oct 2014

Registration & Inquires,

Spectra Skills

No 19, Stanley Road, Jaffna (People's Bank 2nd Floor)
0212221422 or 1423, 771519390, 767520940

## ஆசிரியர் வே. அன்பழகன் அவர்களின்

### தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2015 வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

யாழ்ப்பாணத்தில்
அன்பொளி கல்வியகம்
யாழ். இந்துக்கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

சாவகச்சேரியில்
அன்பொளி கல்வி நிலையம்
தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

அனுமதிகளை 29.09.2014 திங்கட்கிழமைக்கு முன்னதாக பிற்பகல் 3.00 மணி தொடக்கம் பிற்பகல் 5.30 மணிக்குள் முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குநர்கள்

## வெளிவாரி பட்டப்படிப்பு

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அதிகளவிலான வேலை வாய்ப்புக்களை உடைய தகவல் தொழில்நுட்ப

வெளிவாரி பட்டப்படிப்பு

கொழும்பு பல்கலைக்கழகம்

க.பொ.த சா.த சித்தியடைந்தோர் யாவரும் விண்ணப்பிக்க முடியும். உ.த 2014 தோற்றியோரும் விண்ணப்பிக்கலாம். வேலை தேடுவோர், பதவி உயர்வுக்கு விண்ணப்பிப்போர் அனைவர்க்கும் ஏற்றது. விரிவுரைகள் வார, வாரஇறுதி ஞாயிறு மட்டும் என மூன்று பிரிவுகளாக நடைபெறும். புலமைப்பரிசில் மேலதிக விபரங்களிற்கு

Type BIT<Name> & send to 772395895

MCS விண்ணப்ப முடிவு திகதி 29.09.2014
யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகில்

## Study in Latvia

(Schengen Visa Vaild for 27 countries)

ஐரோப்பிய நாடான Latvia வில் குறைந்த செலவில் படிக்க, உழைக்க

- No IELTS
- G.C.E A/L 3 Pass only
- Very low course fee
- High Visa Success rate
- English Medium
- 20 Hours Part time Allowed

Spot Admission on 11th Oct. 2014



iCS Study Overseas

107 B 1/1, Galle Road, Colombo - 06
77 மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோவில் அருகாமையில்)
Tel: 021 4926222, 0773013060

## After A/L or O/L, What Next!

Hurry! register now for intake

IT Courses, BIT, MCSE, CIMA-UK, aat, Banking, Chartered-SL, *English

Limited Students Enrollment for Group Classes @ Spectra Skills

*Rs.5,000/= Upwards

Registration & Inquires,

Spectra Skills

No 19, Stanley Road, Jaffna (People's Bank 2nd Floor)
0212221422 or 1423, 771519390, 767520940

## -ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

af Alliance Française de Jaffna

கற்பதற்கு FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே (யாழில் 1976 முதல்). 136+ நாடுகளில் 1040+ கிளைகள். பிரெஞ் ஆசிரியரிடம் சரியான உச்சரிப்போடு படிக்க,CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS. யாரும் படிக்கலாம் இன்றே பதிவுசெய்யுங்கள்

021 222 8093 61,கச்சேரிநல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

## LATVIA நாட்டிற்கான வீசா சட்டஆலோசனையில் 100% வீசா வெற்றி

அண்மையில் எமது மாணவர்கள் LATVIA நாட்டிற்கான STUDENT VISA இனை பெற்று LATVIA நாட்டிற்கு சென்று கல்லூரிக்கும் எமது நிறுவனத்துக்கும் பெருமை சேர்த்து தந்துள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

குறிப்பு: மேற்படி LATVIA நாடானது செங்கன் நாடுகளில் ஒன்றாகும் என்பதுடன் கல்லூரி விடுமுறைக்காலங்களில் GERMAN,SWISS, FRANCE,ITALY, HOLAND, SPAIN, NORWAY ....etc ஆகியநாடுகளிற்கு சென்றுவரமுடியும்.

* UK நாட்டிற்கான VISA reject ஆன மாணவர்களும் LATVIA நாட்டிற்கு விண்ணப்பிக்க முடியும்

FEB INTAKE ற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மாணவர்களே!!! பெற்றோர்களே!!! மேற்படி வீசா தொடர்பான ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள இன்றே எம்மை நாடுங்கள்

WORLD EDUCATION CONSULTANCY (WEC)
வீசா ஆலோசனை மையம் City&Guilds approved centre-UK

0779265447,0217200989 please call 9am to 5pm
web : www.wecgroups.com Gov.reg.no: TN/DS/UC/0324


No - 377, sangathanai. (சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு அருகே)

## VENUS AQUA RO SYSTEMS

உலகத்திலேயே தரமான நீர் சுத்திகரிப்பு இயந்திரத்தை விற்பனை செய்வதில் பெருமைப்படுகிறோம்.

உங்களினதும் உங்கள் குழந்தைகளினதும் ஆரோக்கியமான வாழ்வுக்கான தூய்மையான குடி தண்ணீர்

- உங்கள் வீட்டு கிணற்றுத் தண்ணீரையே நல்ல தண்ணீராக மாற்றித்தரும்.
- தண்ணீரில் உள்ள கல்சியம், உப்பு, கிருமிகள் என்பவற்றை நீக்கி வெளியேற்றி தூய்மையான குடிதண்ணீராக மாற்றித்தரும்
- வீட்டுக்கு மட்டும் அல்ல தேநீர் விடுதிகள், ஐஸ்கிறீம் உற்பத்தி நிலையங்கள், தொழிற்சாலைகள், வைத்தியசாலைகள், அலுவலகங்கள், பாடசாலைகள் என்பவற்றிற்கான எல்லா விதமான RO இயந்திரங்களும் வேறுபட்ட அளவுகளில் உண்டு.
- இலவசமாக தண்ணீர் பரிசோதனை செய்து தரப்படும். (TDS) Total Dissolved Solids.
- உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சேவை.




ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகம் திறந்திருக்கும்.

1) யாழ்ப்பாணம்: 021 221 7744 / 075 722 7378
2) வவுனியா : 077 991 2399
3) கொழும்பு : 077 198 7619

100% தூய்மையான குடி தண்ணீர்

வீனஸ் என்ரப்பிறைசஸ்,
இல.477, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

venusroslk@gmail.com www.venusaquaro.lk

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.09.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.